# மொழியியல்

தொகுதி 7 ஜூலை - டிசம்பர் எண் 1 & 2

பதிப்பாசிரியர்கள்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் ந. குமாரசாமி ராஜா

டாக்டர் இரா. கோதண்டராமன்

டாக்டர் சு. சாந்தி

அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

1983

T13392

R005A07

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் | டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்) |
| துணைத் தலைவர் | டாக்டர் பொன். கோதண்டராமன் (சென்னை) |
| செயலாளர் | டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர் | டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள் | டாக்டர் கே. மீனாட்சி (டில்லி) |
| | டாக்டர் இராம. சுந்தரம் (தஞ்சை) |
| | டாக்டர் சி. ஏசுதாசன் (அல்ஜீரியா) |
| | டாக்டர் தேவசங்கீதம் (திருப்பதி) |
| | டாக்டர் ஜீன் லாரன்ஸ் (அண்ணாமலைநகர்) |

## மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

**கட்டணம்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ. 300-00 | US $ 75-00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ. 450-00 | US $ 112-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 30-00 | US $. 7-50 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ. 45-00 | US $ 10-50 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு) | ரூ. 15-00 | |

மொழியியல் 7.1 (1983)

# [1]இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள் (Complex sentences)

முத்துச் சண்முகன்
தாமஸ் லேமன்

அனைத்துலகத் திராவிட மொழியியல் கழகம்
புதுவை மையம்

1.0 தமிழில் கலப்பு வாக்கியங்களை (complex sentences) உருவாக்குவதில் இரண்டு முறைகள் காணப்படுகின்றன. ஒன்று தனிநிலை வாக்கியங்களின் (simple sentences) ஒரே வகையான (identical types) வாக்கியக் கூறுகளை இணைத்து, அவற்றிலுள்ள ஒரே மாதிரியான வாக்கியக் கூறுகளில் (identical sentence elements) ஒன்றினை வைத்துக் கொண்டு மற்றையதைத் தள்ளுதல். மற்றொரு வகை வாசகங்களைப் (clauses) புகுத்தல் (embedding).

1. இக்காலத் தமிழ் என்னும்பொழுது இங்கு எழுதும் தமிழையே கருதுகிறோம். பேச்சுத் தமிழை அன்று.

ஆங்கிலத்தில் and என்ற இணைப்பானைப் (conjunctive particle) பயன்படுத்தித் தனிநிலை வாக்கியங்களை இணைப்பது போன்ற முறை தமிழில் இல்லை. ஒரே வகையான இரண்டு வாக்கியக் கூறுகளை இணைக்க முடியும். இரண்டு தனிநிலை வாக்கியங்களை இணைப்பானால் இணைக்க முடியாது. ஒரு வாசகத்தைப் (clause) பணிநிலை வாசகமாக (subordinate clause), மற்றொரு வாக்கியத்தில் புகுத்தலாம் (embedding). ஆனால் இணைக்க (conjunct) முடியாது. எனவே தமிழில் கூட்டு வாக்கியம் (compound sentence) காணப்படவில்லை. கலப்பு வாக்கியங்களே காணப்படுகின்றன. இக்கலப்பு வாக்கியங்களில் எழுவாய், செயப்படு பொருள், வினையடை போன்ற வகைகள் தனித் தொடர்களாகவோ, இணைக்கப்பட்ட கலப்புத் தொடர்களாகவோ அமையலாம்.

## 1.1 வாக்கியக் கூறுகளை இணைத்தல்

தனிநிலை வாக்கியங்களில் வரும் ஒரே வகையான இரண்டு வாக்கியக் கூறுகளை இணைத்து, ஒரு இணை வாக்கியக் கூறினை உருவாக்கலாம். அதாவது இரண்டு பெயர்த் தொடர்கள், செயப்படு பொருள் தொடர்கள், பெயரடைத் தொடர்கள் இவற்றை இணைத்து ஒரு கலப்புப் பெயர்த்தொடர், கலப்புச் செயப்படு பொருள் தொடர், கலப்புப் பெயரடைத் தொடர் என்று உருவாக்கலாம். இணைக்கத் தகுதியுடைய கூறுகள் இரண்டும் ஒரே வகையான தொடரியல் செயற்பாடுடையதாக (syntactical function) இருக்க வேண்டும். அதாவது இரண்டும் எழுவாய்த் தொடராகவோ, செயப்படுபொருள் தொடராகவோ, பெயரடைத் தொடராகவோ இருக்க வேண்டும். இவ்விணைப்புக்கு நான்கு ஜோடி இணைப்புருபுகள் பயன் படுகின்றன.

(1) உம்... உம்; (2) ஓ ... ஓ; (3) ஆவது... ஆவது...; (4) ஆ ... ஆ என்பன அவை. இவை கட்டுருபுகள். இணைக்கப்படும் தொடர்களோடு தனித்தனியாக இணையும். இவைகளைத் தவிர இரண்டு இணைப்புச் சொற்களும் பயன்படுகின்றன-(1) ஆனால் (2) இல்லை என்றால்/ இல்லாவிட்டால்.

இரண்டு (அல்லது இரண்டிற்கு மேற்பட்ட) தனிநிலை வாக்கியங்களில் ஒரே வகையான வாக்கியக் கூறுகள் (எழுவாய்த் தொடர், வினையடைத் தொடர் போன்றவை) வந்து, அவ்வாக்கியங்களில் மற்ற கூறுகள் ஒரே மாதிரி இருக்குமாயின், அவற்றிலுள்ள ஒரே வகையான வாக்கியக்கூறுகளை இணைத்து, எஞ்சிய ஒரே மாதிரியான வாக்கியக் கூறுகளில் ஒன்றைத்தவிர மற்றவைகளைத் தள்ளிக் கலப்பு வாக்கியக்கூறு ஒன்றினை உருவாக்கலாம்.

1. அவன் கோயிலுக்குப் போகிறான்.

2. நான் கோயிலுக்குப் போகிறேன்.

3. அவனும் நானும் கோயிலுக்குப் போகிறோம்.

1,2 இவைகளில் ஒரே வகையான வாக்கியக் கூறுகள் உள்ளன. அவன், நான் என்பன இரண்டும் எழுவாய். இவை இரண்டையும் உம் ... உம என்ற உருபுகளால் இணைக்கிறோம்: அவனும் நானும். இரண்டு வாக்கியங்களிலும் எஞ்சிய ஒரே மாதிரியான வாக்கியக் கூறு கோயிலுக்குப் போக என்பது (இறுதியில் வருகின்ற திணை பால் எண் இடஉருபுகள் பின்னர் விளக்கப்படும்). இவ்விரண்டில் ஒன்றைத் தள்ளி விடுகிறோம். இப்பொழுது கலப்பு வாக்கியம் 3 கிடைக்கிறது. இங்கு 1,2 ஆகிய தனி நிலை வாக்கியங்களை இணைப்பதால் இணை வாக்கியம் (compcund sentence) கிடைப்பதில்லை. இரண்டு வாக்கியக் கூறுகளை இணைத்து கலப்பு வாக்கியத்தை உருவாக்கி இருக்கிறோம். தனிநிலை வாக்கியங்களில் எழுவாய்- பயனிலை, இவற்றிடையே இருந்த பால், எண், இட உடன்பாடுகள், கலப்பு வாக்கியத்தில் வரும் எழுவாயைப் பொறுத்து மாறிவிட்டன.

அடுத்த வாக்கியங்களில் இரண்டு பெயரடைகள் இணைந்து கலப்பு வாக்கியம் உருவாவதைக் காணலாம்.

4. அவன் சத்தமாகப் பேசினான்.

5. அவன் கோபமாகப் பேசினான்.

6. அவன் சத்தமாகவும் கோபமாகவும் பேசினான்.

இவ்வாக்கியங்களில் எழுவாய், செயப்படுபொருள், வினையடை முதலியன வாக்கியக் கூறுகளின் இணைப்பால் பெறப்படுமாயின், இவை மாற்று விதிகளினாலேயே கிடைக்கப் பெறுவதால், அவ்வாக்கியம் கலப்பு வாக்கியம். எத்தகைய வாக்கியக் கூறுகள் இணைக்கப்படும் என்பது இணைப்பானைப் பொறுத்தது. சாதாரணமாக ஒரே வகையான செயற்பாடுடைய பெயர்த் தொடர்கள், எழுவாய், செயப்படுபொருள், வினையடைத் தொடர்கள் (adverbial) இவை (ஆனால் என்பதைத்தவிர) எல்லா இணைப்பான்களாலும் இணைக்கப்படும். வினையடை உம் ... உம் உருபாலும், ஆனால் என்பதாலும் இணைக்கப்படும். பெயரடைகளில் எண், அளவு, பெயரடை இவைகளை இல்லை என்றால்/ இல்லாவிட்டால் என்பதால் இணைக்கலாம். ஆனால் சுட்டுப் பெயரடைகள் இவ்வாறு வருதல் இல்லை. ஓ...ஓ என்ற உருபு எண்களை இணைக்கும். பெயரடையை ஆனால் என்பதாலும் இணைக்கலாம்.

வினைமுற்றுக்கள் எக்காரணங் கொண்டும் இணைக்கப்படா. ஆயின் செயவென் வாய்பாட்டு வினை எச்சம் உம்...உம் என்ற உருபால் இணைக்கப்படும். பெயரெச்சங்களும், தொழிற்பெயர்களும் (அதாவது புகுவாசகங்கள்) இணைக்கப்படும்.

இணைப்பான்களின் அடிப்படையிலும் உருபன்களின் செயலாலும் தமிழில் மூன்று வகையான இணைப்பு வாக்கியக் கூறுகளைக் காணலாம். (1) எண்ணல் வாக்கியக் கூறு (Additive) (2) மாற்று வாக்கியக் கூறு (Alternative) (3) மாறுபடு வாக்கியக் கூறு (contrastive).

1·2 எண்ணல் இணைப்புக் கூறு:

இவ்விணைப்பிற்குப் பயன்படும் உருபு உம்...உம் என்பது.

இரண்டோ அல்லது இரண்டிற்கு மேற்பட்டதோ ஆகிய ஒரே வகையான வாக்கியக் கூறுகளில் ஒவ்வொன்றோடும் உம் என்ற உருபினை இணைக்கிறோம். இதனால் இணைக்கப்படும் வாக்கியக் கூறுகளாவன – (1)ஒரே செயற்பாடுடைய பெயர்த் தொடர்கள் (2) வினையடைத் தொடர்கள் (3) கூட்டு வினைகளில் வரும் செய்ய என்ற வாய்பாட்டு வினை எச்சத் தொடர்கள்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகளைக் கவனிக்க.

7. அப்பாவும் அம்மாவும் திருமணத்திற்குச் சென்று விட்டார்கள்.

8. நான் ஒரு மேசையும் நான்கு நாற்காலிகளும் வாங்கினேன்.

9. மூர்த்திக்கும் அவன் மனைவிக்கும் அழைப்பு அனுப்பினீர்களா?

பொருளால் நெருங்கிய தொடர்புடையதாய் மரபுச் சொற்களாய்(idioms) வந்து விட்ட தொடர்களில் உம் சேர்ப்பதில்லை,

10. அவன் இட்லி தோசை பூரி சாப்பிட்டான்.

கீழே கொடுக்கப்பட்ட வாக்கியங்களில் வினையடை இணைப்புகளைக் காணலாம்.

11. ஒழுங்காகவும் விரைவாகவும் இந்த வேலையைச் செய்தான்.

12. வெள்ளிக்கிழமை கோயிலிலேயும் வீட்டிலேயும் பூசை செய்வார்கள்.

13. நீங்கள் அங்கே போகவும் அவரைப் பார்க்கவும் வேண்டாம்.

13 - வது வாக்கியம் பெரும்பாலும் போய் அவரைப் பார்க்க வேண்டாம் என்று வரும். இல்லையானால் போகவும் வேண்டாம் பார்க்கவும் வேண்டாம் என்றும் வரும். ஆனால் கோபம், வெறுப்பு போன்ற உணர்ச்சிவயப்பட்டுப் பேசும்பொழுது சில சமயங்களில் 13–வது அமைப்பிலும் இவ்வாக்கியம் வரக் காண்கிறோம்.

தனி நிலை வாக்கியக் கூறுகளை இணைப்பது போன்று, கலப்பு வாக்கியக் கூறுகளையும் இணைக்க உம் உருபு பயன் படுகிறது. இது வினை எச்சங்கள், தொழிற் பெயர்கள் இவை களை அவ்வாறு இணைக்கும்.

1. 3. 1 மாற்றுத்தொடர் (alternative) இணைப்புக் கூறு

மாற்றுத்தொடர் பொருளில் இணைப்புக் கூறுகளை உரு வாக்கத் தமிழில் நான்கு வகையான இணைப்பான்கள் பயன் படுகின்றன. இவற்றில் ஜோடியாக வரும் உருபுகள் மூன்று ஓ ... ஓ; ஆவது ... ஆவது; ஆ ... ஆ. மற்றொன்று இல்லை என் றால் அல்லது இல்லாவிட்டால் என்ற சொற்கள். பின்னைய இரண்டும் எதிர்மறை நிபந்தனைச் சொற்கள்.

மாற்றுத்தொடர் (1) பெயர்த்தொடர் 2) பெயரடைகள் - எண்கள் (3) செய்ய என்ற வாய்பாட்டுக் கூட்டு வினை எச்சம் - இவைகளை இணைக்கும். ஆனால், எல்லா உருபுகளும் எல்லா வற்றோடும் வருவதில்லை. இல்லாவிட்டால், இல்லை என்றால், அல்லது இம் மூன்றும் செய்ய என்ற வாய்பாட்டு வினை எச்சம் தவிர மற்ற எல்லாவற்றோடும் வரும். ஓ ... ஓ பெயர்த்தொடர், பெயரடை இவைகளோடு வரும். ஆவது ... ஆவது பெயர்த தொடர்களோடு மட்டும் வரும். ஓ ... ஓ என்பது, (உம் ... உம் என்பதைப் போல) கலப்பு வாக்கியங்களில் வினை எச்சம், தொழிற்பெயர் இவைகளோடு வரும்.

பெயர்த் தொடர்

13. அ) நீயோ உன் தம்பியோ (நீயாவது உன் தம்பியாவது) நீ இல்லை என்றால் (இல்லா விட்டால்) (அல்லது) உன் தம்பி) } கடைக்குப் போக வேண்டும்.

14. இன்றைக்கோ நாளைக்கோ (இன்றைக்காவது நாளைக்காவது) இன்றைக்கு இல்லாவிட்டால் (இல்லை என்றால்) (அல்லது) நாளைக்கு } அவர்கள் இங்கு வருவார்கள்.

பெயரடை இணைப்பு

15. உனக்கு இளநீலம் இல்லை என்றால் (இல்லாவிட்டால்) (அல்லது) வெள்ளை நிறம் பிடிக்கும்.

16. அஞ்சோ பத்தோ (அஞ்சு இல்லை என்றால் (இல்லாவிட்டால்) (அல்லது) பத்து } ரூபாய் கடன் கொடு.

15, 16-வது வாக்கியங்களில் ஆவது வரும் பொழுது அவை பெயர்த் தொடர்களாகச் செயற்படுகின்றன.

17. நீலமாவது வெள்ளையாவது / நீலத்தையாவது வெள்ளையையாவது } கொடு.

18. அஞ்சாவது பத்தாவது கடன் கொடு.

1.3.2 மாற்று வினா இணைப்புக்கூறு

மாற்று வினாவில், முன்னவைகளைப் போல மாற்று வாக்கியக் கூறுகளை இணைத்துக் கலப்புக் கூறினை உருவாக்குவதில்லை. மாற்றுக் கூறுகளை அடுத்தடுத்துக் கூறி ஒவ்வொன்றோடும் ஆகாரவினா உருபேற்ற பயனிலையை இணைத்து, இரண்டிற்கும் பொதுவான பிறவாக்கியக் கூறை, இரண்டாவது வினாவில் தள்ளி விடுகிறோம்.

19. நீங்கள் எங்கள் வீட்டிற்கு நாளை வருகிறீர்களா; நாளை மறுநாள் வருகிறீர்களா?

இவ்வாக்கியம்

20. நீங்கள் எங்கள் வீட்டிற்கு நாளை வருகிறீர்களா?

21 நீங்கள் எங்கள் வீட்டிற்கு நாளை மறுநாள் வருகிறீர்களா?

என்ற இரண்டு வாக்கியங்களின் இணைப்பால் உருவாகியது. இரண்டிற்கும் பொதுவான நீங்கள் எங்கள் வீட்டிற்கு என்பதை இரண்டாவது வினாவில் தள்ளி விட்டோம். நாளை அல்லது நாளை மறுநாள் என்ற மாற்றுக் கூறுகளை இணைப்பதில்லை. அதற்குப்பதில் ஒவ்வொன்றுடனும் பயனிலையைச் சேர்த்து, அதனுடன் ஆகார வினாவுருபைச் சேர்க்கிறோம், இதற்கு விடையாக இரண்டிலொன்று-நாளை அல்லது மறுநாள் என்பது அமையும்.

மற்றொரு வகையான மாற்று வினாவும் காணப்படுகிறது. உடன்பாட்டு வினாவோடு இல்லையா என்பதை இணைத்து இவ் வினாவை உருவாக்குகிறோம்.

22. அவர்கள் சென்னையிலிருந்து வந்தார்களா இல்லையா?

இவ்வினாவை, இல்லையா என்பதற்குப் பதில் வந்தார்கள் என்பதன் எதிர்மறை வினாவாலும் அமைக்கலாம்.

23. அவர்கள் சென்னையிலிருந்து வந்தார்களா, வரவில்லையா?

இவ்வினாவிற்கு வந்தார்கள், வரவில்லை என்ற இரண்டிலொன்று விடையாக அமையும்.

23, 22 வடிவில் அமைகின்ற இந்த வினாக்களை பெரும்பாலும் கோபம், வெறுப்பு போன்ற உணர்ச்சிவயப்படும் பொழுது கேட்கின்றனர்,

மாற்று வினா எந்த, என்ன போன்ற எகர வினாச் சொற்களோடும் இணைந்து வரும். இதில் மாற்று வினாவுக்குரிய கூறுகள் ஆகார வினாவுருபு ஏற்று வரும்.

24. நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்? டீயா; காப்பியா?

சந்தேகச் சூழ்நிலையிலோ அல்லது எதிர்மறையான விடையை எதிர்பார்க்கும் பொழுதோ, ஐய வினாவுருபினைப் பயன்படுத்துகிறோம்.

25. அப்பா என்னை சினிமாவிற்கு அனுப்புவாரோ மாட்டாரோ?

1.3.3. மாறுபடு இணைப்புக்கூறு (contrastive)

இணைப்புருபு ஆனால் என்பதை, இரண்டு இணைக்கப்பட்ட வாக்கியக்கூறுகளின் இடையே பயன்படுத்துவதால் மாறுபடு இணைப்புக்கூறு கிடைக்கிறது.

26. இது பெரிய ஆனால் பழைய வீடு.

27. இவர் நன்றாக ஆனால் மெதுவாகப் பேசுகிறார்.

இத்தகைய வாக்கியங்கள் அருகியே காணப்படுகின்றன.

1.3.4. எழுவாய் பயனிலை உடன்பாட்டு இணைப்புக்கூறு

எழுவாய்ப் பெயர்த் தொடர்களை இணைக்கும் பொழுது புதிய எழுவாய் பயனிலை உடன்பாடுகள் ஏற்படுகின்றன. எழுவாயில் தன்மைப் பெயர்களோடு பிற பெயர்கள் இணைந்தால், பயனிலை தன்மைப் பன்மை விகுதி பெற்று வரும். எழுவாயில் முன்னிலைப் பெயரும் படர்க்கைப் பெயரும் இணைந்திருப்பின் வினைமுற்று முன்னிலைப் பன்மை விகுதி பெற்று வரும்.

28. நானும் நீயும் நண்பர்களும் போகிறோம்.
29. நானும் நீயும் போகிறோம்.
30. நீயும் அவர்களும் போகிறீர்கள்.
31. நீங்களும் அவர்களும் போகிறீர்கள்.

எழுவாய் உயர்திணையும் அஃறிணையும் இணைந்ததாய் இருப்பின், வினைமுற்று உயர்திணைப் பன்மை விகுதி பெற்று வரும்.

32. நானும் என் நாயும் வந்தோம்.

33. அவனும் அவன் நாயும் வந்தார்கள்.

2. வாசகம் புகுதல் (Clause Embedding)

2.0 இரண்டு தனிநிலை வாக்கியங்களை இணைத்து, அதாவது இரண்டு வாசகங்களை (clause) இணைத்துக் கலப்பு வாக்கியம் ஒன்றை உருவாக்கத் தமிழில் புகுத்தல் முறையே (embedding) பயன்படுகிறது. ஆங்கிலத்தைப் போல இணைப்பு முறை (clause co junction) காணப் படவில்லை

ஆங்கிலத்தில் இரண்டு வாக்கியங்களைச் சமநிலையிலும் பணிநிலையிலும் இணைக்கலாம். அதற்கென and, when, if, because போன்ற இணைப்பான்கள் பயன்படுகின்றன. ஆங்கிலத்தில் இரண்டு தனிநிலை வாக்கியங்களை இவ்விரு நிலையிலும் இணைக்கும் பொழுது, பயனிலைகள் - வினைமுற்றுக்கள், எத்தகைய மாற்றமுமின்றி அவ்வாறே இணைவாக்கியங்களிலும் செயற்படுகின்றன. ஆனால் புகுத்தப்படும்பொழுது வாக்கியங்களில் உள்ள வினைமுற்றுக்கள் எச்சங்களாக மாறுகின்றன. தமிழில் இணைப்பான்களோ, அவற்றால் உருவாகிய பணிநிலை வாக்கியங்களோ, சமநிலை வாக்கியங்களோ இல்லை. பணிநிலை புகுமுறையே தமிழில் செயற்படுகின்றது. ஒரு வாசகத்தை மற்றொரு வாசகத்தில் புகுத்தும் பொழுது, புகுத்தப்படும் வாசகத்திலுள்ள வினைமுற்றுக்களை எச்சங்களாகவோ, தொழிற் பெயர்களாகவோ மாற்ற வேண்டும்.

தமிழில் நான்கு விதமான எச்சங்கள் காணப்படுகின்றன. (1) பெயரெச்சம் (2) செயவென் எச்சம் (3) செய்தென் எச்சம் (4) நிபந்தனை (conditional). இவைகளைத் தவிர தொழிற்பெயர்

ஒன்றும், ஆக இந்த ஐந்து வகைச் சொற்களும் வாசகத்தைப் புகுத்துவதில் பயன் படுகின்றன. இவற்றின் உதவியால் உருவாகும் புகு பணி நிலை வாசகங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) தொழிற்பெயர் வாசகம் (2) சொல்லுருபு வாசகம் (post-positions) (3) எச்ச வாசகம் (பெயரெச்சம், செயவென் எச்சம், செய்தென் எச்சம், நிபந்தனை). எச்ச உருபுகளும், அது என்ற தொழிற் பெயராக்க உருபும், ஆல் என்ற நிபந்தனை உருபும் புகுதலைக் குறிக்கின்றன. அன்றியும் இவற்றால் உருவாகும் பணிநிலை வாசகம் தலைமை வாசகத்தின் முன்பு வருதல் வேண்டும். தனி நிலை வாசகத்தை எச்ச வாசகமாகவும், பெயர் வாசகமாகவும் மாற்றுவதைப் போல, வினையால்அணையும் பெயராகவும் - கலப்புப் பெயர்த் தொடராகவும் மாற்றலாம். இதில் பெயரெச்சம் அவன் முதலிய சேய்மைச் சுட்டுப்பெயர்களை ஏற்று வரும். இவ்வாறு புகுத்தப்படும் பொழுது அவை எழுவாயாகவும் பயனிலையாகவும், சொல்லுருபாகவும், பெயர், பெயரடை, வினையடை இவற்றின் கோப்புத் தொடராகவும் (complement) (தனி நிலை வாக்கியத்தில் இவை செயற்படுவது போன்று செயற்படுகின்றன.

மேலே கூறிய புகு வாசகங்களில் எல்லாம் வினைமுற்றை எச்சமாக மாற்றுகிறோம். வினைமுற்றில், வாக்கியத்தில் எத்தகைய மாற்றமும் நிகழாது என என்ற புகுஉருபால் வாக்கியங்களைப் புகுத்துவது மற்றொரு வகை. மற்றொரு வகையில் ஏ, ஓ என்ற உருபுகளை வாக்கியத்தோடு இணைத்து வாக்கியங்களைப் புகுத்துகிறோம். இதில் வினைமுற்று வாசகம், எச்ச வாசகமாகவோ பெயர் வாசகமாகவோ மாறுகிறது.

## 2. 1. 1 தொழிற் பெயர் வாசகம் புகுதல்

செயல், நிகழ்ச்சி இவைகளைக் குறிக்கும் வாக்கியங்கள் தொழிற் பெயர் வாசகங்களாக மாற்றப்படுகின்றன.

ஒரு வாக்கியத்தைத் தொழிற்பெயர் வாசகமாக மாற்ற வேண்டுமாயின், வினைமுற்றைப் பெயராக மாற்ற வேண்டும்.

வினைமுற்று எப்பொழுதும் வாக்கியத்தின் இறுதியில் வருகிறது. அதற்கு முன்பு இருக்கும் வாக்கியக் கூறுகள், வினைமுற்றைக் கொண்டு முடிவதால், முற்று வினையைத் தொழிற் பெயராக மாற்றும் பொழுது, அவ்வாக்கியம் முழுவதும் தொழிற்பெயர்த் தொடராக மாறிவிடுகிறது. இதனைத் தொழிற்பெயர் வாசகம் என்கிறோம். தமிழில் வினைமுற்றைப் பெயராக மாற்றுவது, வாக்கியத்தைப் பெயராக மாற்றுவதாக அமைகிறது. வினை முற்றோடு அது என்ற அஃறிணைச் சேய்மைச் சுட்டை இணைத்துப் பெயராக மாற்றுகிறோம். இவ்வுருபினைச் சேர்ப்பதற்கு முன்பு, வினைமுற்று பெயரெச்சமாக மாற்றப்படுதல் வேண்டும். பெய ரெச்சத்தோடு இவ்வுருபு சேர்க்கப்படும். இச்சந்தியில் பெயரெச்ச உருபாகிய அகரம் கெட்டு விடுகிறது.

*இது மூன்று காலப் பெயரெச்சத்தோடும் சேரும்.

*படிக்கிற + அது → படிக்கிறது
*படிப்ப + அது → படிப்பது
படித்த + அது → படித்தது

*படிப்ப என்ற எதிர்காலப் பெயரெச்சம் இன்று வழக்கில் இல்லை. எதிர்காலத் தொழிற் பெயரும் அருகியே வருகிறது. நிகழ்காலப் பெயரே எதிர் காலத்திற்கும் வருகிறது.

எதிர்மறை தொழிற்பெயர், எதிர்மறைப் பெயரெச்சத்தோடு அது என்ற உருபு சேர்வதால் பெறப்படுகிறது.

படிக்காத + அது ⟶ படிக்காதது

இல்லை என்ற குறைவினையின் தொழிற்பெயர் இல்லாதது என்பது.

34. சிறு பையன்கள் குளத்தில் குளிக்கிறார்கள்.

இதன் தொழிற்பெயர் வாசகம்

35. சிறு பையன்கள் குளத்தில் குளிக்கிறது (குளிப்பது).

பழமொழிபோலப் பொதுவான நிகழ்ச்சியைக் கூறும் பொழுது, தொழிற்பெயர் வாக்கியக் கூறு பிற எதுவும் இன்றியும் வரும்.

36. படிக்கிறது முக்கியம்.

ஆங்கிலத்தில் இத்தகைய இடங்களில் எழுவாய் ஆறாம் வேற்றுமையாக மாறுகிறது. தமிழில் எழுவாயாகவே இருக்கிறது.

37. a. அவன் தமிழ் படிக்கிறான் - He studies Tamil

37. b. அவன் தமிழ் படிக்கிறது - His studying Tamil

சாதாரணமாக, தொழிற்பெயர் வாசகம் மற்றொரு வாக்கியத்தில்-தனிநிலை வாக்கியத்தில், பெயர்த் தொடர் வரும் இடங்களில் எல்லாம் புகுத்தப்படுகிறது. அது எழுவாயாகவும், ·செயப்படு பொருளாகவும், வினையடையாகவும் செயற்படுகிறது. 39, 40 வாக்கியங்களில் அது எழுவாயாகவும் செயப்படு பொருளாகவும் செயற்படுவதைக் காணலாம்.

38. நீங்கள் நேற்று வந்தது நல்லது.

39. நாளை கூட்டம் நடக்கப் போவதைக் கேள்விப் பட்டேன்.

தொழிற்பெயர் வாசகம் வேற்றுமை உருபேற்று வரும்.

எழுவாய் வேற்றுமை

எழுவாய், பெயர்ப் பயனிலை வாக்கியங்களில் வருகிறது.

40. நீங்கள் உடன் என்னைக் கூப்பிட்டது நல்லது.

உண்டு என்ற குறைவினை ஒன்றுதான் இதற்குப் பயனிலையாக வருகிறது. இது பெரும்பான்மையும் ஒரு

நிகழ்ச்சியின் இறந்தகால உண்மையைக் குறித்து வருகிறது. சிறுபான்மை நிகழ்வெதிர் காலத்திலும் வரும்.

41. நான் சென்னைக்குச் சென்றது உண்டு.

42. நான் சென்னைக்குச் செல்கிறது உண்டு.

இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமையில் இது நேரடிச் செயப்படு பொருளாகச் (direct object) செயற்படுகிறது.

43. நீங்கள் நேற்றுக் கடைக்குப் போனதை நான் பார்த்தேன்.

மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமையில் காரணப் பொருளில் வருகிறது. கருவிப் பொருளில் வருவதில்லை.

44. அவன் கோபமாக என்னைத் திட்டினதால் (திட்டியதால்) போனேன்.

45. நான் சாவியைத் தொலைத்து விட்டதால் (சாவி தொலைந்து விட்டபடியினால்) கதவைத் திறக்க முடிய வில்லை.

உடனிகழ்ச்சிப் பொருளில் வருகிறது.

46. அவன் ஆபீஸில் வேலை பார்ப்பதோடு மாலை நேரக் கல்லூரியில் படிக்கவும் செய்கிறான்.

47. சினிமாவில் நடிப்பதோடு அவன் கதை வசனமும் எழுது கிறான்.

48. நாலு இட்லி சாப்பிட்டதோடு மூன்று தோசையும் தின்றான்.

மரபுத் தொடராக, சரி என்பது பெயர்ப் பயனிலையாக வரும் பொழுது, உடனிகழ்ச்சி பொருள் இல்லாமலும் வரும். இது மிக அருகிய வழக்கு.

49. அவன் வணக்கம் சொன்னதோடு சரி.

நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமையில் நோக்கப் பொருளில் வருகிறது.

50. உன்னைப் பார்ப்பதற்கு வந்தேன்.

51. காப்பி வாங்கிக்கொண்டு வருவதற்கு என் பையனை அனுப்பினேன்.

ஐந்தாம் வேற்றுமை

புடைபெயர்ச்சிப் பொருளில் வரும். நிகழ்ச்சி தொடங்கி இப் பொழுது - பேசுவது வரையிலும் உள்ள கால எல்லையைக் குறிக்கும்.

52. இங்கே வந்ததிலிருத்து என் மனமே சரி இல்லை.

53. அந்த ஹோட்டலில் சாப்பிட்டதிலிருந்து எனக்கு வயிற்று வலி.

ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமையில் உடைமைப் பொருளைத் தருகிறது. அது எனத் தொழிற் பெயர் முடிவதால், அன் என்பது இதற்கு ஆறாம் வேற்றுமை உருபாக வருகிறது.

54. நீங்கள் சொன்னதன் பொருள் எனக்குப் புரிகிறது.

55. படித்ததன் பயன் இப்பொழுதுதான் தெரிகிறது.

ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமையில் இவ்வாசகம் காரணப் பொருளிலு இடப் பொருளிலும் வருகிறது.

56. கதைகள் எழுதுவதில் எனக்கு மாதம் முந்நூறு ரூபாய் கிடைக்கும்.

57. தமிழ் படிப்பதில் எனக்கு ஆர்வம் மிகுதி.

2. 1. 2 தொழிற்பாங்கினைச் (mood) சுட்டல்

எ- என் வினாவொடு முக்காலத் தொழிற்பெயரும் மூன்றிடத்திலும் வரும். நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் ஆகார வினாவுருபோடும் தேற்ற வினாவுருபு தானே என்பதனோடும் வரும். இவை வேண்டா வெறுப்பான விருப்பத்தைக் குறிக்கும்.

2.1.2.1 தொழிற் பெயர்வாசகம் எ- என் வினாவோடு வருதல்

இவ்வினா முக்காலத் தொழிற் பெயரோடும் வரும். நிகழ்காலமோ, எதிர்காலமோ - இரண்டிலொன்றை அவ்விரண்டு காலங்களுக்கும் பயன் படுத்துகின்றனர். அது அவரவர் நடையைப் பொறுத்தது. இறந்த காலத்தில், வினாச்சொல் இறுதியில் வருவதே பெரும்பான்மை. மற்றக் காலங்களில் மாறி வருவது அருமை. அப்படி வரும் பொழுது வினாவிற்குச் சிறப்புக் கொடுக்கிறோம்.

59. நாம் என்ன செய்கிறது?

60. அவள் என்ன செய்வது?

61. நான் என்ன செய்தது / நான் செய்தது என்ன?

62. அவன் எங்கே போகிறது?

63. நீ போனது எங்கே?

64. நான் எப்பொழுது இங்கே வருகிறது?

65. நீங்கள் எப்பொழுது இங்கே வருவது?

66. அவன் இங்கே வருவது எப்பொழுது?

2.1.2.2 தொழிற்பெயர் வாசகம் வினாவுருபு ஆவொடு வருதல்

நிகழ்கால எதிர்காலத் தொழிற்பெயர் ஆகார உருபேற்று வரும். இறந்த காலத்தோடு வராது. பெரும்பாலும் இது எதிர்பாராத, விரும்பாத நிகழ்ச்சி உண்மைதானா என்றறியக் கேட்கப் படுகிறது.

67. இந்த வெயிலில் நான் சந்தைக்குப் போகிறதா (போவதா)?

68. இந்தச் சின்ன வீட்டில் நான் குடி இருக்கிறதா (குடி இருப்பதா)?

2. 1. 2. 3 தொழிற்பெயர் தேற்ற வினா தானே என்பதோடு வருதல்

தானே என்ற தேற்ற வினாவுருபு, நிகழ்வு, எதிர்வு ஆகிய இரண்டு காலத்திற்கும் உரிய தொழிற் பெயரோடு வரும். இரண்டிலொன்றை (இது அவரவர் நடையைப் பொறுத்தது) முக்காலத்திற்கும் பயன்படுத்துகின்றனர்.

69. அவன் நேற்று (இன்று) (நாளை) அங்கே போகிறது தானே.

70. நீ நேற்று (இன்று) (நாளை) அங்கே போவதுதானே.

2.1.2.3 இரட்டிக்கும் தொழிற்பெயர் வாசகம்

நிகழ்காலத் தொழிற் பெயர், தேற்றேகார உருபேற்றும் ஏற் காமலும், அவ்வினையின் நிகழ்கால வினைமுற்றோடு இரட்டித்து

வரும். அவ்வாறு வரும்பொழுது பேசுபவன் நிகழ்ச்சியை விரும்பாவிட்டாலும் தான் ஒத்துக் கொள்கிற பொருளைத் தருகிறது.

71. போகிறதே (போகிறது) போகிறான்; இரண்டு நாள் தங்கிவிட்டு வரட்டுமே.

72. இந்தச் சட்டையை வாங்கினதே (வாங்கினது) வாங்கினாய்; எனக்கும் ஒன்று வாங்கக் கூடாது.

2.1.2.4 தொழிற்பெயர் வாசகம் உம்மொடு வருதல்

இறந்தகாலத் தொழிற் பெயரோடு உம் உருபைச் சேர்க்கும் பொழுது, அதைத் தொடர்ந்து அடுத்து உடன் நிகழும் தொழிலைச் சுட்டும் வினை முற்றோடு வரும். ஆங்கிலத்தில் வருகின்ற *as soon as* என்பதற்கு நேரான பொருளில் இது பயன்படுகிறது. வினைமுற்று மூன்று காலத்திலும் வரும். ஆனால் தொழிற்பெயர் எப்பொழுதும் இறந்த காலத்திலேயே வரும்.

73. அவன் இங்கே வந்ததும் நான் கிளம்புகிறேன் (கிளம்புவேன்) (கிளம்பினேன்).

74. அங்கே கல்லூரி தொடங்கியதும் அவள் புறப்பட்டுப் போய்விட்டாள். (போய் விடுவாள்) (போய் விடுகிறாள்).

2.1.2.5 தொழிற்பெயர் உம் உருபேற்று இரட்டித்து வரல்

உம் உருபினைப் பெற்ற இறந்தகாலத் தொழிற் பெயரும், அதன் எதிர்மறை தொழிற் பெயரும் உம் உருபு பெற்று, அதன் மேல் வினையடை உருபுகளாகிய ஆய், ஆக என்பதனைப் பெற்றும் பெறாதும், இரண்டும் அடுத்தடுத்து வரும்பொழுது அது வினை முடிவுபெறாத நிலையையும், அதற்குள் மற்றொரு வினையின் நிகழ்ச்சியையும், அதன் விரைவினையும் குறிக்கும்.

75. அவன் வந்ததும் (வராததும்) வராததுமாகப் (வராததுமாய்) புறப்பட்டுப் போய்விட்டான்.

76. அவன் படுத்ததும் படுக்காததும் (படுக்காததுமாய்) (படுக்காததுமாக) தூங்கி விட்டான்.

மற்றொரு வகையில் உடன்பாட்டு நிகழ்காலத் தொழிற் பெயரும் எதிர்மறை தொழிற்பெயரும் உம் பெற்று அடுத்தடுத்து வந்து மாற்றுச் செயற் பொருளைத் தரும்.

77. போகிறதும் போகாததும் அவன் பொறுப்பு.

2.1.2.6 கூட்டுத் தொழிற் பெயர் தொடர்கள் அடுக்கி, இரண்டாவது தொடர் உம்மொடு ஆய்/ ஆக பெற்று வருதல்

மற்றொரு வகையில் உடன்பாட்டு நிகழ்கால அல்லது எதிர் காலத் தொழிற்பெயர்கள், உம் உருபேற்று அதே தொழிற்பெயர், அல்லது வேறு தொழிற் பெயர் அடுக்கி வந்து, இரண்டாவது தொழிற்பெயர் ஆக/ ஆய் என்ற வினையடை உருபேற்று வரும் பொழுது மாறி மாறி நிகழ்கின்ற நிகழ்ச்சியைக் குறிக்கும். இது இரு என்ற வினையின் வினைமுற்றினைப் பெற்று வரும். வினை முற்று முக்காலத்திலும் வரும்.

78. அவன் பணத்தை வாங்குவதும் டிக்கட் கொடுப்பதுமாக இருக்கிறான் இருந்தான்) (இருப்பான்).

79. அவன் சிரிக்கிறதும், ஜோக் அடிக்கிறதுமாய் இருந்தான் (இருப்பான்) (இருக்கிறான்).

(தொடரும்)

மொழியியல் 7.1 (1983)

# தெருக்கூத்து மொழிநடை

பொன். கோதண்டராமன்
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழில் பொதுவாகப் பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு என்று இருவகை வழக்குகள் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த இருவகை வழக்குகளும் தொல்காப்பியர் காலந்தொட்டே தமிழகத்தில் தொடர்ந்து நின்று நிலவி வருகிறது, என்பதை வரலாற்று நோக்கில் மொழி இயல் அறிஞர்கள் எடுத்துக்காட்டி உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்[1]. தெருக்கூத்துகளில் மிகப் பழைய இலக்கிய வழக்குகளையும் காண்கிறோம். இன்றைய பேச்சு வழக்கிற்குரிய சொற்களையும் காண்கிறோம். அண்மையில் பிறமொழித் தொடர்பால் இங்கு வந்து வாழ்வு பெற்ற குடியேற்றச் சொற்களையும் காண்கிறோம். இவற்றுக்கெல்லாம் மேலாகப் பேச்சு வழக்கிலும் இல்லாமல் இலக்கிய வழக்கிலும் இல்லாமல் நாடக ஆசிரியர் அறிந்தோ அறியாமலோ படைத்து வழங்கிய சில படைத்து மொழிச் சொற்களையும் காண்கிறோம்.

இவற்றைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

இராமச்சந்திர கவிராயர் அவர்களால் இயற்றப்பெற்ற சூது துகிலுரிதல் என்ற நாடகத்தை இங்கே ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நாடகம் சென்னையிலுள்ள பி. இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ் என்ற பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. முதன்முதல் வெளியிட்ட ஆண்டு முதலிய விவரங்கள் கிடைக்கவில்லை. இந்த நூல் 1978இல் ஒருமுறை பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. நூலாசிரியரைப் பற்றிய விவரங்களும் தெளிவாகக் கிடைக்கவில்லை. அபிதான சிந்தாமணியில் இராமச் சந்திர கவி என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு இந்த நூலாசிரியரைப் பற்றியதாகவே தெரிகிறது. இந்தக் குறிப்பின் படி இராமச்சந்திர கவிராயர் ஏறக்குறைய இருநூறு ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று கொள்ளலாம். தெருக்கூத்துக் காகப் பயன்படுத்தப்படும் நாடக நூல்களுக்கு ஒரு எடுத்துக்காட் டாகவே இதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நாடகத்தில் காணும் தெருக்கூத்துப் பண்புகள் ஏனைய தெருக் கூத்துகளுக்கும் பொருந்தும் என்றே தோன்றுகிறது.

இலக்கிய வழக்கு

1. காஞ்சமாயெண்ணிக் குலுங்க நகைத்தாளே சகுனி
மாமா அந்த
குக்கற்சிறுக்கியென் வெட்கங்கெடுத் தாளே - சகுனி
மாமா (ப.13)

2. சேயராமெங்களுக்குச் சிந்தையிற் குறைவே றுண்டோ
(ப. 37)

3. தோமறவே யோராட்டஞ் சொக்கட்டானாடுவீரே
(ப 41)

மேலே காட்டிய தொடர்களில் உள்ள குக்கல், சேய், தோம் ஆகிய சொற்கள் முழுக்க முழுக்கப் பழைய இலக்கியங்களுக்கே

உரிய செந்தமிழ்ச் சொற்கள். இன்றைய வழக்கில் குக்கல் என்பதற்குப் பதிலாக நாய் என்பதும் சேய் என்பதற்குப் பதிலாகக் குழந்தை, பிள்ளை, மக்கள் என்பனவும் தோம் என்பதற்குப் பதிலாக குற்றம், பிழை என்பனவும் பெரு வழக்காக வழங்கி வருகின்றன. நாடக ஆசிரியர் சிற்சில இடங்களில் விரும்பியே பழைய செந்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி இருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. பெரும்பாலும் இலக்கிய வழக்கிற்கே உரிய இப்படிப்பட்ட சொற்கள் விருத்தங்களில் ஆளப்பட்டிருக்கலாம் என்று நினைக்க இடம் உண்டு. நாடக ஆசிரியர் வில்லி பாரதம் முதலாய இலக்கியங்களைப் படித்து அதிலுள்ள செய்திகளை எளிமைப்படுத்தி மக்களுக்குக் கொடுக்கத்தான் நாடகம் என்ற வடிவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். விருத்தங்களை எழுதும்போது அவருடைய புலமை வளத்தின் காரணமாகவும் வில்லிபாரதம் போன்ற இலக்கியங்களில் உள்ள விருத்தங்களின் செல்வாக்குக் காரணமாகவும் சில பழைய இலக்கியச் சொற்கள் நாடகத்தில் இடம் பெற்றுள்ளன. இன்று வழக்கிலில்லாத பழைய இலக்கியச் சொற்களைத் திட்டமிட்டுத் தவிர்ப்பது அவருடைய நோக்கம் இல்லையாதலால் ஆங்காங்கே இத்தகைய அருஞ்சொற்கள் விரவிக் கிடப்பதில் நமக்கு வியப்பில்லை.

ஒரே பாடலில் இக்காலப் பேச்சு வழக்குச் சொல்லும் பழைய இலக்கிய வழக்குச் சொல்லும் கலந்து கிடப்பதைப் பார்க்கும்போது நமக்குக் கொஞ்சம் வியப்பாகவும் புதுமையாகவும் இருக்கிறது. இத்தகைய சூழலைத் தெருக்கூத்து மொழிகளில் மட்டுமே காண முடியும். ஆங்காங்குச் சில நாட்டுப்புறப் பாடல்களிலும் இத்தகைய பண்புகள் இருக்கலாம். அவை தனியே ஆராயத்தக்கன[3].

வேத நாலிருக்குஞானம் விளங்கு நூலிருக்கு நல்ல
நீதி சாஸ் திரமிருக்க நிபுணர்கள் பலரிருக்க
நூதனமாகச்செய்து நுவலுறு மண்டபத்தில்
சூதிது மடையர் செய்யும் தொழிலையோ செய்ய
வேண்டும் (ப.41)

மேலே காண்பது ஒரு அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம். இந்த விருத்தத்தில் நாலு, இருக்கு முதலாய சொற்கள் பேச்சு வழக்கிற்கேயுரியவை. இலக்கிய வழக்கில் இவை நான்கு, இருக்கிறது (அ) இருக்கின்றது என அமைய வேண்டும். மூன்றாவது அடியில் காணும் நுவலுறு மண்டபம் என்பதிலுள்ள நுவல் என்ற சொல் இலக்கிய வழக்குக்கே உரிய ஒரு பழஞ்சொல். இப்படி இலக்கிய வழக்குக்கே உரியதும் அருகியதுமான பழஞ்சொல்லையும் பேச்சு வழக்குக்கே உரியதாகி இன்றும் வழங்குகின்ற திரிசொல்லையும் ஒரே விருத்தத்தில் ஆண்டிருப்பது தெருக்கூத்து மொழி நடையில் நாம் நன்கு கவனிக்கத் தக்கது.

### பேச்சுவழக்கு

நாடகங்களில் பேச்சு வழக்கிற்குரிய சொற்கள் மிகுதியாகக் காணப்படுவதில் வியப்பில்லை. மிகப் பழங்காலத்திலிருந்தே இரு வகையான நாடகங்கள் வழக்கில் இருந்ததாக அறிகிறோம். அரசர்களுக்காக அரண்மனையில் நடந்த கூத்துகளுக்கு வேத்தியல் என்று பெயரிட்டு இருக்கிறார்கள். வேந்தர்களுக்காக நடந்த கூத்து வேத்தியல் என்று பெயர் பெற்றிருக்கிறது. பொதுமக்களுக்காகக் கோயில்களிலும் பொது இடங்களிலும் நடந்த கூத்துக்குப் பொதுவியல் என்று பெயர். பொதுமக்கள் பெரும்பாலும் கல்வி அறிவு பெறாதவர்கள் ஆதலாலும் இலக்கிய வழக்கில் அவர்களுக்குப் பயிற்சி இல்லை ஆதலாலும் மக்களுக்காக நடந்த கூத்துக்களில் இயல்பாகவே பேச்சு வழக்குச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

1. பேச்சு வழக்கில் பேச்சுத் தமிழுக்கு ஏற்றபடித் தமிழாக்கம் பெற்றுள்ள சில பிறமொழிச் சொற்களையும் கூத்துகளில் காண்கிறோம்.

2. பேச்சு வழக்கிற்கேயுரிய சில மரபுத்தொடர்களையும் கூத்துகளில் காண்கிறோம்.

3. பேச்சு வழக்கிற்கேயுரிய சில சொற்களையும் கூத்துகளில் காண்கிறோம்.

4. பேச்சு வழக்கில் மிகுதியும் பயன்படுகின்ற சில பழமொழிகளையும் கூறுதுக்களில் காண்கிறோம்.

இவற்றைப் பற்றிய விளக்கங்களை எடுத்துக்காட்டுகளோடு இங்கே சற்று விரிவாகப் பார்ப்போம்.

## தமிழாக்கம்

ஜனங்கள், கர்வம் முதலாய வடமொழிச் சொற்கள் பேச்சு வழக்கில் ஜெனங்கள், கெருவம் (ப.9) என்று தமிழாக்கம் பெற்றுள்ளன. இலக்கிய வழக்கில் இந்தச் சொற்கள் சனங்கள், கருவம் என்றுதான் தமிழாக்கம் பெறும். நாடகவழக்கில் அவை ஜெனங்கள், கெருவம் என்று தமிழாக்கம் பெற்றுள்ளன. சக்ரம் என்ற சொல் இலக்கிய வழக்கில் சக்கரம் என்று தமிழாக்கம் பெறுவது நமக்குத் தெரியும். ஆனால் இந்தச் சொல் சக்கிரம் (ப. 8) என்று பேச்சு வழக்கில் தமிழாக்கம் பெற்றுள்ளது.

## மரபுத் தொடர்கள்

சூது துகில் உரிதல் என்ற நாடகத்தில் யானை, சேனை, பண்டு பண்டாரம் ரொக்க ரோஷணை என்று ஒரு தொடரைக் காண்கிறோம் (ப. 14). ரொக்க ரோஷணை என்ற தொடர் பேச்சு வழக்கில் மட்டுமே காணப்படுகின்ற ஒரு மரபுத்தொடர். இதைப் போலவே துஜங்கட்டி (ப. 49), சூதுவாது (ப.57) முதலான தொடர்களையும் இந்த நாடகத்தில் காண்கிறோம். துஜங்கட்டி என்ற தொடர் இடைவிடாமல், தொடர்ந்து, விடாப்பிடியாக முதலான பொருள்களில் பேச்சு வழக்கில் ஆளப்படுகிறது. இந்தச் சொல்லினுடைய முதன்மைப்பொருள் கொடிகட்டி என்பதாகும். துவஜம் என்பது துஜம் என்று திரிந்தது. இந்த நாடகத்தில் துஜங்கட்டி என்ற தொடர் முதன்மைப் பொருளிலேயே ஆளப்படுகிறது.

## பேச்சுவழக்குச் சொற்கள்

பேச்சு வழக்கைப் பற்றி நாம் ஆராயும்போது பொதுநிலை வழக்கினையும் கிளை வழக்குகளையும் மனங்கொண்டு ஆராய

வேண்டும். பேச்சு வழக்கிலேயே குறிப்பிட்ட சில வழக்குகள் தமிழ் நாட்டில் உள்ள எல்லோருக்கும் விளங்குவதாக இருக்கும். அத்தகைய வழக்கை நாம் பொதுநிலை வழக்கு என்று குறிப்பிடு கிறோம். வேறு சில வழக்குகள் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்துக்கே அல்லது குறிப்பிட்ட ஒரு வட்டாரத்துக்குக்கே உரியதாகவும் மற்ற வருக்கு அன்னியமானதாகவும் இருக்கும். இத்தகைய வழக்கு களை நாம் கிளை வழக்குகள் என்று குறிக்கிறோம்.[3] அந்தக் கிளை வழக்கு சமுதாய வழக்கு, வட்டார வழக்கு என்று மேலும் பிரிக்கப்படும். அவாள், இவாள் போன்ற சொற்கள் பார்ப்பனர் வழக்கிற்கு உரியவை. ஒரு அண்ணம், ரெண்டு அண்ணம் (அண்ணம்-தடவை, முறை), பகரம் (பதிலாக) முதலாய சொற்கள் குமரி மாவட்டத்திற்குரிய வட்டார வழக்கு. இந்த நாடகத்தில் பாண்டவாள், சொல்லச்சே முதலான பார்ப்பனர் வழக்குகள் அரு கிய நிலையில் காணப்படுகின்றன. வட்டார வழக் கள் மிகுதியாக இல்லை யென்றே கூறலாம். பொதுநிலை வழக்குகளே மிகுதி யாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்குச் சில சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. வந்துதே (ப. 13) 2. இதுகள் (ப. 30)

3. சம்மதி (ப. 30) 4. தொந்தரை (ப. 30)

5. பசபசவென்று (ப. 42) 6. முழிக்கிறீர் (ப. 42)

மேலே காட்டிய சொற்கள் பேச்சு வழக்கிற்கேயுரிய இயல்பு களைப் பெற்ற பொதுநிலை வழக்குச் சொற்கள். சம்மதம் என்ற பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக சம்மதி என்ற வினைச்சொல்லே பெயராக ஆளப்பட்டிருத்தல் இங்கே காணும் ஒரு புதுமை. இந்தச் சொல் ஆளப்பட்டுள்ள சூழலை இங்கே இன்னும் விரிவாகத் தருவது பொருத்தமாக இருக்கும்.

சிறந்தவன்பெரிய தகப்பனுக்கிதுகள்
செப்பினாரவருஞ் சம்மதியாய்
ஆசையாயென்னை வரவழைத்து நீயேபோ
யிவ்வரை யழைத்துவாவென்றே
யடைவுடனெழுதிக் கொடுத்தவன்பெரிய
வப்பன்கை வோலேயிதப்பா.

சம்மதி என்ற சொல் இங்கே பெயராக ஆளப்பட்டிருத்தல் இப்போது நன்கு தெளிவாகும். இந்தச் சொல் பேச்சு வழக்கில் பெயராக ஆளப்படுதல் உண்டு. இந்த நாடகத்தில் ''அத்தானையல்லால் உற்றார் இனியுண்டோ'' (ப. 24) என்று ஒரு தொடர் வருகிறது. இந்தத் தொடரில் காணும் அத்தான் என்ற சொல் பொதுநிலைப் பேச்சு வழக்கிற்குரிய சொல். இந்தச் சொல் இந்தப் பொருளில் பழைய இலக்கியங்களில் பயின்று வந்ததாகத் தெரியவில்லை. நாடக ஆசிரியர்கள் பொதுவாகக் குறுவழக்குகளைத் தவிர்க்க முயன்றிருக்கிறார்கள் என்பதும், பொதுநிலைப் பேச்சு வழக்கிற்குரிய சொற்களை மிகுதியும் ஆள விரும்பி இருக்கிறார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்க செய்தியாம்.

சில மரபுத் தொடர்களும் பழமொழிகளும் இன்றைய பொதுநிலைப் பேச்சுவழக்கில் ஆளப்படுவது போலவே நாடக வழக்கிலும் ஆளப்பட்டுள்ளன. சூதுவாது (ப. 57) யானை சேனை பண்டு பண்டாரம் முதலாய மரபுத் தொடர்கள் நாடக வழக்கில் ஆளப்பட்டுள்ளமை பற்றி முன்பே குறிப்பிட்டோம். சில பழமொழிகள் பேச்சுவழக்கில் ஆளப்படுவது போலவே நாடக வழக்கில் வாய்ப்புக் கேற்பப் பயன்படும்போது பொதுமக்களுக்கு அந்த நாடகம் நெருக்கமாகி நாடகச்சுவை மிகுதியாகிறது. ''வேலிக்கு முள் போட காலுக்குத் தைத்துதே'' (ப. 13) என வரும் தொடர் வேலிக்குப் போட்ட முள் காலைக் குத்தியது என்ற பழமொழியை நினைவூட்டுகிறது. உரைநடையிலும் பாடல்களிலும் இப்படிப்பட்ட பழமொழிகள் ஆங்காங்கே ஆளப்பட்டுள்ளன.

### நாடக வழக்கு

மேலே கூறிய இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் நாடகங்களில் நாம் காண்கிறோம். நாடகங்களில் வருகின்ற பாத்திரங்களுக்கு ஒப்பவும் சூழ்நிலைகளுக் கேற்பவும் இந்த வழக்குகள் பயன்படுகின்றன. பொதுவாகப் பேச்சுவழக்கினையே மிகுதியாகக் காண்கிறோம். இந்த இரு வகை வழக்குகளோடு நாடகங்களில் சில புதுமை வழக்குகளையும்

காண்கிறோம். இந்தப் புதுமை வழக்குகள் தோன்றப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்க தலைமை யான ஒரு காரணம் மொழியில் வரலாற்று நோக்கில் நாம் பொதுவாகக் காணும் ஒப்புமையாக்கச் செயற்பாடு என்று கூறலாம். அதாவது மொழியில் ஏற்படுகின்ற சொல் மாற்றங்களுக்கும் தொடர் மாற்றங்களுக்கும் ஒப்புமையாக்கச் செயற்பாடு ஒரு இன்றியமையாத காரணம் ஆகும். அந்த ஒப்புமையாக்கச் செயற் பாட்டின்படி நாடக வழக்கில் சில புதிய வழக்குகள் உருவாகியுள் ளன. ஒப்புமையாக்கம் மொழியில் ஒருவித ஒழுங்கு அல்லது சீர்மைப்பாட்டையும் விளைக்கிறது. அதே ஒப்புமையாக்கம் ஒழுங் குக் குலைவு அல்லது சீர்மைக் குலைவுக்கும் காரணமாகி விடு கிறது என்ற உண்மையை இங்கே எண்ணிப் பார்க்கவேண்டும். நாடக வழக்கில் ஏற்பட்டுள்ள இந்தப் புதுமை வழக்குகள் சரி என்று ஏற்றுக்கொள்ளப் படுமா, தவறு என்று களையப்படுமா, புல மக்கள் வழக்கில் அல்லது பொது மக்கள் வழக்கில் இவை நிலையான இடம் பெறுமா என்ற வினாக்களுக்கெல்லாம் காலந் தான் விடை கூறவேண்டும்.

இங்கே குறிப்பிட்ட புதுமை வழக்குகளோடு ஒருசில வழுத் தொடர்களையும் விளங்காத சொல்லாட்சிகளையும் நாடக வழக்கில் காண்கிறோம் இவை பற்றியெல்லாம் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சூது துகிலுரிதல் என்ற நாடகத்தின் துணைகொண்டு மேலும் சற்று விளக்கமாகக் காண்போம்.

புதுமை வழ கு

தெருக்கூத்தில் காணப்படும் சில சொற்கள் இலக்கிய வழக்கு மில்லை, பேச்சு வழக்குமில்லை என்ற நிலையில் ஒருவகைப் புதுமைப் படைப்புகளாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகத் ''தோணு குது'' (ப. 14) என்ற ஒரு சொல்லை எடுத்துக் கொள்வோம். இந்தச் சொல் தோன்றுகிறது என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. தோன்றுகிறது என்பது இலக்கிய வழக்கு. தோணுது என்பது பேச்சு வழக்கு. தோணுகுது என்ற சொல் இருவகை வழக் கிற்கும் பொருந்தாத ஒன்று. இந்தச் சொல் ஒப்புமையாக்க நெறியில் உருவாக்கப்பட்டுள்ளது. இலக்கிய வழக்கிலேயே வரு

வன் என்பது வருகுவன் என்றும் செய்வான் என்பது செய்கு வான் என்றும் அருகிய வழக்காக ஆளப்படுதல் உண்டு. இந்தச் சொற்களில் குகரம் அடிச்சொல்லாக்க விகுதிபோல் ஆளப்பட்டது. அதே முறையில் தோணுகுது என்பதிலும் குகரம் அடிச்சொல் லாக்க விகுதிபோல் ஆளப்பட்டுள்ளது. கேட்க முடியாது, நினைக்க முடியாது முதலாய தொடர்கள் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இரண்டற்கும் உரியன. கேட்க இயலாது, நினைக்க இயலாது என்பது இலக்கிய வழக்கிற்கேயுரியன. இந்த நாடகத்தில் கேட்கப் போகாது, நினைக்கப் போகாது ப. 14) முதலாய தொடர்கள் கேட்க இயலாது, நினைக்க இயலாது என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளன. போ என்ற துணை வினை இங்கே ஒரு புதிய முறையில் புதிய பொருளில் ஆளப்பட்டுள்ளது. செய்ய முடியாத ராஜசூய யாகம் என்பது செய்யப் போகாத ராஜசூய யாகம் (ப. 15) என அமைந் துள்ளது.

நன்றாய்ச்சுது (ப. 15), நடக்கை (ப. 15), தாமிஷம் (ப. 17), தூணுகள் (ப. 2!), காண்பவா (ப.26), போகலாது (ப. 32), அடுமை (ப.64) முதலாய சொற்கள் நாடக வழக்கில் காணும் புதுமை வழக்குகளுக்கு மிக நல்ல எடுத்துக்காட்டுகளாம். இந்தச் சொற்கள் தோன்றிய முறைமை பற்றி இங்கு மேலும் சற்று விளக்கமாகக் காண்பது தகும்.

ஆயிற்று என்ற சொல் இலக்கிய வழக்கில் பயின்று வரும் சொல். ஆகவே பேச்சு வழக்கில் *ஆயித்து என்றும் *ஆயிச்சு என்றும் *ஆய்ச்சு என்றும் மாறி ஆச்சு என்று திரிந்து வழங்குகிறது. ஆச்சு என்ற சொல்லுக்கு மேலே அஃறிணை ஒ[illegible]றன்பால் விகுதியை மீண்டும் சேர்த்து ஆச்சுது என்ற ஒரு சொல் இங்கே உருவாக்கப் பட்டுள்ளது. ஆச்சுது என்பதை இலக்கிய வழக்காக மாற்றிடு தாகக் கருதி ஆசிரியர் ஆய்ச்சுது என்று ஒரு சொல்லை உருவாக்கி விட்டார். நடத்தை என்ற சொல் இலக்கிய வழக்கிற்குரிய சொல். பேச்சு வழக்கிலும் அந்தச் சொல் ஆளப்படுதல் உண்டு. கிடக்கை, படுக்கை என அமையும் சொற்களைப் போல நடக்கை

என்ற ஒரு சொல்லும் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. தாமதம் தாமசம் என அமையும் ஒரு சொல்லையே இங்கே வடமொழி மயமாக்கி ஆசிரியர் தாமிஷம் என ஒரு சொல்லை உருவாக்கியிருக் கிறார். தூண்கள் என்பது இங்கே தூணுகள் என்று மாறி இருக் கிறது. பேச்சு வழக்கில் பொதுவாக அஃறிணைப் பெயர்கள் பன்மை விகுதி ஏற்பதில்லை. சூழலுக்கேற்பப் பன்மைப்பொருள் ஒருமைப் பெயராலேயே உணர்த்தப்படும். இரண்டு காலும் வலிக்கிறது, இரண்டு காதும் கேட்கவில்லை முதலான தொடர்களில் ஒருமைப் பெயரே பன்மைப்பொருள் விளக்கியமை காண்க. வந்தவன், சென்றவன் எனவும் காண்பவன் கேட்பவன் எனவும் இவ்வாறு அமையும் வினையாலணையும் பெயர்கள் தமிழில் பொதுவாக விளியேற்பதில்லை. ஆண்டவன் என்ற சொல் அமைப்பினால் வினையாலணையும் பெயராக இருந்தாலும் அந்தச் சொல் இறைவன் என்று பொருள் பெற்று இலக்கண நிலையில் மாற்ற மெய்தி முழுமையான பெயராக மாறிவிட்டது. ஆகவே ஆண்டவன் என்ற சொல் ஆண்டவா என்று விளி ஏற்று வரலாம். ஒப்புமை யாக்க முறையில் இந்த நாடக ஆசிரியர் காண்பவா என்று விளி யேற்ற பெயர் ஒன்றை உருவாக்கியிருக்கிறார். இந்த வழக்கு இலக்கிய வழக்கிலும் இல்லை. பேச்சு வழக்கிலும் இல்லை. போகலாகாது என்ற சொல் போகலாது என்று மாறியிருக்கிறது. அடிமை என்ற சொல் நாடக வழக்கில் அடுமை என்று திரிந் திருக்கிறது.

இலக்கிய வழக்கிலும் இல்லாமல் பேச்சு வழக்கிலும் இல்லாமல் இப்படிப் பயின்றுவரும் புதுமை வழக்குகளை நாடக மொழி நடையில் மட்டுமே காணுகிறோம். இவற்றை நாடக நடைச் சிறப்புக் கூறுகள் என்று கூறுவது பொருந்தும்.

**வழுத் தொடர்கள்**

நாடக வழக்கில் சில வழுத் தொடர்களையும் காண்கிறோம். எடுத்துக் காட்டுக்குச் சிலவற்றைக் குறிப்பிட்டு இங்கே விளக்குதல் பொருந்தும்.

> பெரியோர்கள் சொல்லப்பட்ட வார்த்தையைத்
> தள்ளிவிடப்பட்ட துஷ்டத்தனமும் இருக்கிறது (ப.14)

மேலே காட்டிய தொடர் பெரியோர்கள் சொல்லிய வார்த்தையைத் தள்ளிவிடும் துஷ்டத்தனம் இருக்கிறது என்றோ அல்லது பெரியோர் களால் சொல்லப்பட்ட வார்த்தையை தள்ளிவிடும் துஷ்டத்தனம் இருக்கிறது என்றோ அமையலாம். பெரியோர்கள் சொல்லப்பட்ட வார்த்தை என்பது செய்வினை செயப்பாட்டு வினைகளில் ஏற்பட்ட குழப்பத்தால் உருவான வழு. தள்ளிவிடப்பட்ட என்பது இங்கே பொருத்தமில்லாத செயப்பாட்டு வினைத்தொடர். தள்ளிவிடும் துஷ்டத்தனம் என்பதற்குப் பதில் தள்ளிவிடப்பட்ட துஷ்டத்தனம் என வந்தது.

> வாருமப்பா சிற்பசாஸ்திரி! இங்கே மகா
> உன்னதமாக ஒரு சபா மண்டபஞ் செய்ய
> வேண்டும் அந்தப்படி செய்தாலுனக்கு நல்ல
> வெகுமதிகள் செய்வேன் பிள்ளாய். (ப. 78)

இந்த உரையாடல் பகுதி வாரும் என்று தொடங்கியிருக்கிறது. அதற்குரிய முன்னிலைப் பெயர் நீர் என்பதே ஆகும். நீர் என்பது நான்காம் வேற்றுமை ஏற்கும்போது உமக்கு என்றுதான் வர வேண்டும். இங்கே உனக்கு என்று வந்திருப்பது வழு.

> நூதனமாகச்செய்து நுட்பமாயலங்கரித்து
> சோதிசேர் மண்டபத்தில் துரை மக்கள் வந்துகூடிப்
> போதவே மகிழ்ச்சியாகப் பொழுதுபோப்படி யாயிங்கே
> ஏதொருகாலட்சேப மில்லாமலிருக்கலாமோ. (ப. 40)

மேற்கண்ட பாடலில் ஏதொரு காலட்சேபமும் இல்லாமல் என அமையவேண்டிய தொடர் உம்மையின்றி நின்றது. யார், எது, ஏது முதலாய வினாக் கிளவிகள் உம், ஓ, ஆவது ஆகிய இடைச் சொற்களைப் பெற்று வரும்போதுதான் வினாப் பொருளை இழக்கின்றன. இந்த இடைச்சொற்கள் இல்லாதபோது வினாக் கிளவிகள் வினாக்களாகவே இருக்கும். ஏதொரு காலட்சேபமும் இல்லாமல் இருக்கலாமோ என உம்மை பெற்று அமைவதே சரியான தொடர்.

நீங்கள் அடங்கலும் உங்கள் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் (ப. 43) என்ற தொடரில் நீங்கள் அடங்கலும் என்பது வழு. இந்தத் தொடர் நீங்கள் அனைவரும் என்றோ நீங்கள் எல்லோரும் என்றோ அமைய வேண்டும். அடங்கலும் என்பது அஃறிணைப் பெயர்களோடு வரலாமே தவிர உயர் திணைப் பெயர்களோடு வராது. இங்கு நீங்கள் என்பது உயர் திணை குறித்து நின்றது.

**விளங்காத சொல்லாட்சிகள்**

இரிக்கால் (ப. 48), நாலத்தோரஞ்சு (ப. 48), தோதகம் ப.57), விற்புத்தி (ப. 57), சர்பனை (ப. 57), சக்கட்டம் ப.66), சளுக்காதே (ப.71), முதலாய சொற்கள் என்ன பொருளில் ஆளப்பட்டுள்ளன என்பது விளங்கவில்லை.[4] தெருக் கூத்து மொழியில் இப்படிப்பட்ட சொற்கள் மேலும் பல காணப் படுகின்றன. இப்போதைய நிலையில் இந்தச் சொற்களுக்குப் பொருத்தமான நல்ல விளக்கங்கள் புலப்படவில்லை[5].

இங்கே நிகழ்த்திய இந்தச் சிறிய ஆய்வின்மூலம் நாடக வழக்கு என்பது ஒரு தனி வழக்கு என்பதும், இந்த வழக்கு இலக்கிய வழக்கு பேச்சு வழக்கு ஆகியவற்றைத் தன்னுள் கொண்டிருப்ப தோடு சில பிழை வழக்குகளையும் விளங்காத சொல்வழக்கு களையும் நாடகத்துக்கேயுரிய சில புதுமை வழக்குகளையும் தன்னுள் கொண்டது என்பதும், இங்கே குறிப்பிட்ட இந்தச் செய்திகள் மேலும் விரிவாக ஆராய வேண்டிய அளவுக்கு வாய்ப்புகளும் தேவைகளும் உடையவை என்பதும் நன்கு விளங்கும்.

## குறிப்புகள்

1. தமிழில் உள்ள இலக்கிய வழக்கு பேச்சு வழக்கு ஆகிய இரு வகை வழக்குகளைப் பற்றி முதன்முதலாக விரிவாக எண்ணிப்பார்த்தவர் 'பெஸ்கி' என்ற வீரமாமுனிவர். இக் காலத்தில் மொழியியல் நோக்கில் இந்த இருவகை வழக்கு களையும் பற்றி டாக்டர் மு. சண்முகம் பிள்ளை, டாக்டர்

கமில் ஸ்வலபில் முதலானோர் ஆய்வு நிகழ்த்தி தனித்தனிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். இந்த இருவகை வழக்கையே டாக்டர் பட்ட ஆய்வுப் பொருளாகக் கொண்டு டாக்டர் ந. தெய்வசுந்தரம் ஆய்வு நிகழ்த்தியிருக்கிறார்.

2. நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புறக் கதைகள் ஆகியவற்றில் காணும் மொழி நடையும் தெருக்கூத்தில் காணும் மொழி நடையும் பல கூறுகளில் ஒத்துச் செல்வது இயல்பே. நாட்டுப் புறப் பாடல்களில் காணும் மொழி நடை பற்றித் திரு. சாமி பிச்சைப் பிள்ளை ஆய்வு நிகழ்த்தி வருகிறார். நாட்டுப்புறக் கதைகளில் காணும் மொழிநடை பற்றித் திரு ம. சத்திய மூர்த்தி ஆய்வு நிகழ்த்தி வருகிறார்.

3. இது பற்றி விரிவான செய்திகளுக்குக் காண்க: டாக்டர் கோ. சீனுவாச வர்மாவின் கிளைமொழியியல்.

4. இரிக்கால் என்ற சொல் இருகால் என்ற சொல்லின் திரிபே என்று எண்ணத் தோன்றுகிறது. என்றாலும் சரியாக விளங்க வில்லை. இரிக்கால், நாலந்தோரஞ்சு போன்ற சொற்க ளெல்லாம் சூதாட்டத்தில் பயன்படும் குழூஉக்குறிகள் போலும்.

5. உணர்ச்சி வேகத்தில் சொற்கள் வெளிப்படும்போது ஒலி ஓட்டத்திலேயே பொருள் நோக்கம் இல்லாமல் சொற்கள் உருவாக்கப்பட்டனவோ என்று எண்ணும் வகையில் சில தொடர்கள் அமைந்துள்ளன (எ. டு., தோதகம், பேதகம், துர்புத்தி, விற்புத்தி, சொற்பனை, கற்பனை).

## துணை நூல்கள்

### தமிழ்

இராமச்சந்திர கவிராயர், ஸ்ரீ மகாபராத விலாசம் அல்லது சூது துகிலுரிதல், சென்னை- 1, 1978.

சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, புதுதில்லி, மறுபதிப்பு, 1981.

ஆங்கிலம்

Beschi C.J., A Grammar of the common dialect of the Tamil language called Kotuntamil (Translated from Latin by A. M. George William Mahon), Madıas, 1848.

Deivasundaram, N., Diglossic Situatiou in Tamil, Ph.D. thesis submitted to the University of Madras, 1981.

Shanmugam Pillai, M., Collected Papers-1, Madurai, 1978.

மொழியியல் 7.1 (1983)

# அமெரிக்க அமைப்பு மொழியியல் கொள்கைகள் - ப்ளூம் ஃபீல்டின் கருத்துக்கள்

செ. சண்முகன்
மைசூர் பல்கலைக்கழகம், மைசூர்

எந்த ஒரு பொருளோ, செயலோ, தொடர்போ வளரவேண்டுமானல் அதற்கென ஒரு சூழ்நிலை அமைய வேண்டும். மனிதன் எந்த ஒரு பொருளை, செயலை, தொடர்பை உருவாக்குகிறானோ அங்கு சூழ்நிலைகளோடு அவனது விருப்பு வெறுப்புகளும், பொதுவாக அவனது மனமும் இணைந்து செயல்படும். மொழி இயல் கோட்பாடுகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ''மொழியியல் கோட்பாடு'' (Linguistic theory) என்றால் அது மொழியைப் பற்றிய சில கருத்துக்களின் தொகுப்பே. அக்கருத்துக்கள் மொழியமைப்பை வெளியிடுவனவாயிருக்கலாம். மொழியை விவரிக்கும் வகையில் அமைந்த கருத்துக்களாயிருக்கலாம். பலர் ஒரு மொழியியல் கோட்பாடு உருவாக காரணமாயிருப்பர். பலருடைய

ஆராய்ச்சிகளில் சிதறிக்கிடக்கும் கருத்துக்களைத் தொகுத்து அதற்கு தன் பாணியில் உருக்கொடுத்து பின்னால் வருபவர்கள் அந்த இடைவெளி குறைவான கருத்து உருவை உபயோகிக்கும் வண்ணம் வகை செய்பவன் ஒரு "கோட்பாட்டின் வாதி" (Theoretician) ஆகிறான்.

இங்கு நாம் "கோட்பாடு" என்பதை, சிலரால் வளர்க்கப் பட்ட, கோர்வையாக ஆக்கப்பட்ட கருத்துகள் என்று கொள்ள லாம். சில கருத்துக்களைக் கோர்த்து, அவற்றைத் தனியே நிறுத்தி, அவை பிறர் கருத்திலிருந்து வேறுபட்டவை எனக்காட்டு பவன் "கோட்பாட்டு வாதி" ஆகிறான். பலவகை மொழிக் கோட்பாடுகளையும், மொழி இயுல் கோட்பாடுகளையும் இன்றைய மொழி இயல் சூழ்நிலையில் நாம் காண்கிறோம். அவற்றை நாம் ஆங்கிலத்தில் "ஸ்கூல் ஆஃப் தாட்" என்று கூறுகிறோம். ஒவ்வொரு நாட்டிலும் சில மொழி ஆராய்ச்சியாளர்கள் தோன்றி சில கோட்பாடுகளைக் கூறி, நிலை நாட்டி மறைகின்றனர். மொழி இயல் கோட்பாடுகளை அவை எந்த நாட்டில் தோன்றி னவோ அதன் பெயரில் குறிப்பது மரபு. சில கோட்பாடுகள் அவைகளை உருவாக்கியவர்களின் பெயரில் நிலைபெற்று நிற்கும். எடுத்துக்காட்டாக சசூர் என்பார் எடுத்துக் கூறிய மொழியியல் கருத்துகளை "சசூரின் மொழி இயல் கோட்பாடு" என்றும் "ஜெனீவா மொழியியல் கோட்பாடு" என்றும் பெயரிட்டு அழைக் கிறோம்.

இங்கு நாம் "அமெரிக்க அமைப்பியல்" (அமைப்பு மொழி இயல்) கோட்பாட்டை அல்லது "ப்ளும் ஃபீல்டின்" மொழி இயல் கோட்பாட்டை விளக்க முயல்வோம். மொழி இயல் கோட்பாட் டின் கீழ் இரண்டு வகையான கருத்துகள் இடம்பெறும். ஒன்று, "மொழியைப் பற்றிய கருத்துகள்", மற்றொன்று "மொழியை விவரிப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்படும் கருத்துகள்". இவைகளை. முறையே "மொழிக்கோட்பாடு" என்றும் "மொழி விவரணை கோட்பாடு" என்றும் அழைக்கலாம். எல்லா மொழி இயல் கோட்பாடுகளும் இவ்விரண்டு வகை கோட்பாடுகளைத் தன் னகத்தே கொண்டு நிற்கும்.

அமெரிக்க ''அமைப்பு மொழி இயல் கோட்பாடு'' உருவாகுவதற்கு சில சூழ்நிலைகள் காரணமாக நின்றன. அவை பின் வருமாறு.

அமெரிக்க அமைப்பு மொழி இயல் கோட்பாடு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றி நடுப்பகுதி வரையில் வளர்ந்தது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழி இயலார் மொழியின் வளர்ச்சியையும், தொடர்பான பலமொழிகள் ஒரு மூல மொழியிலிருந்து உருவாயின என்பதையும் விளக்கினர். மொழி காலத்தால் வேறுபட்டுத் தோன்றுவதையும், காலத்தின் ஊக்கத்தால் ஒரு மொழியிலிருந்து பல புதுமொழிகள் உருவாவதையும் விவரித்தனர். தொடர்பான பல மொழிகளை, அவற்றின் அக அமைப்புக்களை ஆராய்ந்து, அவற்றின் ஒற்றுமையை அறிந்து அதன் மூலம் அம்மொழிகள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன் நிலை பெற்றிருந்த ஒரு தனி மொழியிலிருந்து பிறந்தன என்ற ஊகத்தை ஆராய்ச்சி மூலம் வெளிப்படுத்தினர். இத்தகைய சூழ்நிலையில்தான் சசூர் என்பார் ஜெனீவாவில் மொழி ஆராய்ச்சியாளர்கள் மொழியின் வளர்ச்சியை விளக்குவதோடு மட்டுமல்லாமல், மொழி எவ்விதம் நிலைபெற்றிருக்கிறது என்பதையும் ஆராய வேண்டும் என்று கூறி ''மொழி ஆராய்ச்சி''யை ''மொழி வளர்ச்சி ஆராய்ச்சி'', ''மொழி நிலைபேறு சம்பந்தமான ஆராய்ச்சி'' என இருவகையாகப் பிரித்தார். இதன் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் மொழி இயலார் மொழி எவ்விதம் ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட இடத்தில் நிலை பெற்றிருக்கிறது என்பதையே மொழி இயல் விளக்க முற்படவேண்டும் என வலியுறுத்தினர். மொழியின் நிலை பேற்றை விளக்க மொழியின் அமைப்பை விளக்க வேண்டும். ப்ளூம்ஃபீல்டும் மொழியின் அமைப்பை விளக்குவதே மொழி இயலின் குறிக்கோள் என்று கூறினார். இத்தகைய மொழி இயலே ''விஞ்ஞானரீதி''யில்மைந்தது எனவும் கூறுவார்.

விஞ்ஞான ரீதியில் அமைந்த துறைகள் மூன்று விதமான செயல்களை ஏற்று நடத்தும். 1. மொழியைப் பற்றிய ''செய்தி''களை சேகரிப்பது 2. சேகரித்த செய்திகளை

சோதனைக்கு உட்படுத்தி சில ''கருத்து''களை உருவாக்குவது. 3. உருவாக்கிய கருத்துக்களை சரி அல்லது தவறு என நிலை நாட்டுவது. மொழி இயலின் முக்கிய குறிக்கோள் மொழியின் அமைப்பை விவரிப்பதாதலால் முதலில் ''கள ஆய்வு'' (Field work) மூலம் மொழியைப் பற்றிய செய்திகளை சேகரிக்க வேண்டும். பின்னர் சில ''வழிமுறைகளை''ப் பயன் படுத்தி (procedures) மொழியின் அமைப்பை விவரிக்கவேண்டும். பின்னர், விவரணை சரியா இல்லையா, நிலை நாட்டின மொழியமைப்பு வேறு சில மொழியைப் பற்றிய குறிப்புகளால் பாதிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இத்தகைய செயல்களை மொழி இயல் தன்னுள் அடக்குவதனால் மொழி இயல் விஞ்ஞான ரீதியில் அமைந்தது என்பார் ப்ளும்ஃபீல்ட். முக்கியமாக, கள ஆய்வின் பங்கு மொழியியலில் என்ன என்பதையும், சில தெளிவான வழிமுறைகள் மூலம் மொழியின் அமைப்பை விளக்க முடியும் என்றும் கூறுவர் அமெரிக்க அமைப்பு மொழியியலறிஞரான ப்ளும்ஃபீல்டும், அவர் வழிவந்தவர்களும்.

ப்ளும்ஃபீல்டும், அவரைச் சார்ந்தவர்களும் ஒரு மொழியை மிகக்குறுகிய காலத்தில் விவரிக்கும் வகையையும், மொழியின் அமைப்பை எளிதில் அறிந்து கொள்ளும் வகையையும் விளக்கினர். இத்தகைய செயல்களில் அவர்கள் கவனம் செலுத்த முக்கிய காரணமாக இருந்தவை ''அமெரிக்க இந்திய மொழி''களே. ப்ளும்ஃபீல்டின் மொழி ஆய்வு காலத்தில் பெரும் பான்மையான அமெரிக்க இந்திய மொழிகளுக்கு இலக்கணங்கள் இல்லாதிருந்தன. சில மொழிகள் அழியும் தறுவாயில் இருந்தன. சில மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருந்தது. மேலும் இந்திய மொழிகளுக்கு "வரிவடிவம்" (script) இல்லாதிருந்தது. எல்லா அமெரிக்க இந்திய மொழிகளும் பேசுவாரற்று அழிந்து போகும் முன்னால் குறுகிய காலக்கட்டத்தில் அவற்றைப் பற்றிய செய்திகளை, அவற்றின் அமைப்பு பற்றிய செய்திகளை சேகரிக்க வேணடும்; இதனுடனே அம்மொழிகளின் இலக்கணங்களையும் உடனுக்குடன் உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை ''அமெரிக்க விவரணை மொழியியல்'' (Descriptive Linguistics) உருவாகக் காரணமாயிருந்தது.

மொழியை விவரிப்பதற்கான சில "விதிமுறைகளை" வகுத்துக் கொண்டால் அவ்வழிமுறை அல்லது விதிமுறைகளைப் பின்பற்றி எவரும் ஒரு மொழியின் ஒலி, சொல், சொற்றொடரமைப்புகளை எளிதில் குறுகிய காலத்தில் விளக்கி விடமுடியும் என்ற எண்ணமே "மொழி விவரணை வழிமுறைகள்" பல அமெரிக்க மொழியியலில் உருவாகக் காரணமாக அமைந்தது. மொழிகள் வரிவடிவம் கொண்டதாக இருந்தால் வழிவழியாக வழக்கிலிருந்து வரும் முறைகளைக் கைக்கொண்டு இலக்கணம் படைக்க முடியும். அமெரிக்க இந்திய மொழிகளுக்கு வரிவடிவம் இல்லாதிருந்தால் அவைகளுக்கு இலக்கணம் படைக்க வேண்டுமானால் "கள ஆய்வு" "அமைப்பு விவரணை வழிமுறைகள்" ஆகியனவற்றை கடைபிடிக்கவேண்டும். இந்தநிலை உணர்வு அமெரிக்க விவரணை இயல் உருவானதற்கு ஒரு காரணம்.

அமெரிக்க மொழி இயல் சூழ்நிலையில் முதன் முதலில் பங்கெடுத்த மொழியியலார் எல்லோரும் மானிடவியலில் ஈடுபாடு கொண்டவர்கள். ஆதலால் அவர்கள் மொழியை சமுதாயத்தோடு இணைத்துப் பார்த்து, மொழி சமுதாயத்தில் எந்த விதமான பங்கைப் பெறுகிறது, மொழிக்கும் சமுதாயத்திற்கும் இடையே எவ்வித தொடர்பு வெளிப்படுகிறது எனான போன்ற கேள்விகளுக்கு விளக்கம் காண முயன்றனர்.

அமெரிக்க "அமைப்பு மொழி இயல்" (குறிப்பாக 'விவரணை மொழி இயல்') வளர்ச்சியில் ப்ளூம்ஃபீல்டு என்பாரும் அவருக்கு முன்னால் சபீர், போயஸ் என்பவர்களும், ப்ளூம்பீல்டின் பின்னால் ப்ளாக், ட்ரேகர், ஹாக்கெட், ஹேரிஸ் என்ற அறிஞர்களும் பங்கு கொண்டனர். மேற்கூறிய எல்லோருடைய கருத்துக்களும் (மொழிக் கருத்துகள், மொழி விவரணைக் கருத்துகள்) எல்லா வகையிலும் ஒன்றாகக் காணப்படா விட்டாலும், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது அவைகளிடையே தொடர்பைக்காண முடியும். பரவலாக எல்லோரும் மொழியின் அமைப்பை விவரிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, அமைப்பை விவரிக்கும் வகையில் மொழியின் வெவ்வேறு நிலைகளில் காணப்படும்

மொழிக்கூறுகளையும், அவைகளினிடையே தோன்றும் தொடர்பு களையும் (முக்கியமாக 'தொடர் நிலைத் தொடர்பு') விவரிக்க முயல்வர்.

இங்கு நாம் அமெரிக்க மொழி இயலார் கொண்ட சில பரவ லான மொழிக் கருத்துகளையும், மொழி இயல் கவித்துகளையும் காண்போம். பின்னர் அதை வளர்த்தவர்களின் குறிப்பான கொள்கைகளை விளக்குவோம்.

மொழி

''மொழி'', நமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், இச்சைகளையும் நாம் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக உப யோகிக்கின்ற, நாமே உவருாக்கிய குறிகளால் ஆன சீரான அமைப்பு, என விளக்குவார் சபீர். மொழியை ஒரு வகையான செயல் என்பார் ப்ளும்ஃபீல்ட். டிரேகர் என்பார் மொழியை, செய்திகளைப் பரிமாற நாம் உபயோகிக்கும், வாயுறுப்புகளா உருப் பெறும், இயற்கையாக பொருளைக் குறிக்காத ஒலிக்குறிகளின் அமைப்பு என்று கருதுவார். ''பேச்சை'' மொழியின் வெளிஉரு என்று எல்லா அமெரிக்க மொழி இயல் அறிஞர்களும் ஒத்துக் கொள்வர்.

மொழியில் பல மட்டங்கள் அல்லது நிலைகள் காணப் படுகின்றன. அமெரிக்க மொழியியலார் ஒலியமைப்பை ஒரு மட்டத்திலும், சொல்லமைப்பை இன்னொரு மட்டத்திலும், வாக்கிய அமைப்புகளை வேறொரு மட்டத்திலும் அடக்குவர். மொழி, ஒலிகளையும், ஒலியமைப்பையும், பொருளையும் தெரி விக்கும் ஒன்று என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மொழினது குறிக்கும் பொருளையும், மொழியின் ஒலியமைப்பு ஏற்பட காரணமாயிருந்த வெவ்வேறு ஒலிகளையும் தனித்தனி மட்டத்தில் அடக்கினாலும் அம்மட்டங்களை மொழியின் முக்கிய அமைப்பில் பங்கு பெறாதவை என்றே கருதினர். மொழியின் ஒலியமைபை ''மொழியின்ஒலி'' அல்லது ''ஒலியன்''என்ற

மொழிக்கூறாலும், மொழியின் சொல்லமைப்பை ''உருபன்'' (morpheme) என்ற மொழிக்கூறாலும், மொழியின் வாக்கியம், சொற்றொடர் இவைகளின் அமைப்பை ''சொல்'' என்ற மொழிக் கூறின் மூலமும் விளக்குவர் அமெரிக்க மொழி இயலார். ஒலியன் களின் தொடர்நிலை, உருபன்களின் தொடர்நிலை, சொற்களின் தொடர்நிலை ஆகியவற்றையும் விளக்க முயல்வர்.

மொழியில் காணப்படும் ''மட்டங்களில்'' (levels) இரண்டு விஷயங்களைப் பற்றிப் பேசுவர். 1. ஒவ்வொரு மட்டத்திற்கென அமைந்த ''அடிப்படை மொழிக்கூறுகள்'' 2. அடிப்படை மொழிக்கூறுகளின் தொடர்நிலைத் தொடர்பு. மொழியில் அவர்கள் கண்ட மட்டங்கள் பின்வருமாறு: ஒலிநிலை, ஒலியன்நிலை, உருபன் - சொல் நிலை, சொல்- சொற்றொடர் நிலை, பொருள் நிலை என்பன. இவைகளில் ஒலியன்நிலை, சொல் நிலை, சொற் றொடர் நிலை என்பவைகளே மொழி அமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கின்றன என்பர். ''ஒலிநிலை''யில் (phonetic level) சாதாரணமான ஒலிகள் எவ்விதம் தங்கள் அமைப்பைப் பெறு கின்றன என விளக்குவர். ஒலிகளைப் பொதுவான முறையில் விளக்குவதால் அவ்விளக்கமுறை ''மொழியின் அமைப்பு விளக்க முறை''யில் இடம் பெறாது. ஒலிநிலையை விளக்கும் இயலை ''ஒலியியல்'' phonetics) எனலாம். ஒலியியல் ஒலியை விளக்கு முகத்தான் மூவகைப்படும். 1. ஒலிஉச்சரிப்பு இயல் (Articulatory phonetics 2. ஒலி பரவு இயல் (acoustic phonetics)3 ஒலி கேட்பு இயல் (Auditory phonetics). இதில் முதல் வகை ஒலிகள் எவ் விதம் உச்சரிக்கப் படுகின்றன; ஒலிகள் எவ்விதம் உருப்பெறுகின்றன; ஒலி உருவாக்கத்தில் நுரையீரல், வாயுறுப்புகள், உதடு, நாக்கு முதலியனவற்றின் பங்கு என்ன; ஒலிகளை எவ்விதம் வகைப் படுத்தலாம் என்ற பல கருத்துக்களை விளக்கும். இரண்டாம் வகை, உச்சரித்த ஒலிகள் காற்றில் கலந்து எவ்விதம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்தற்கு பரந்து செல்கின்றன, பரவும் ஒலி அலைகளின் அமைப்பு, அவ்வலைகளின் பௌதீகத் தன்மைகள் ஆகியவற்றை விளக்கும். இந்த விவரணை பௌதீக இயலோடு தொடர்புடையது. மூன்றும் வகை, உச்சரித்த அதன்

பின் பரந்த ஒலிகள் எவ்விதம் ஒருவருடைய காதில் விழுகின்றன, ஒலியலைகள் எவ்விதம் காதில் சலனங்களை உருவாக்கி பின் ஒலியாக உணரப்படுகின்றன என்பதனை விளக்கும். இவ் விளக்கங்களைக் கொடுப்பதில் செவி முதலிய புலன்களை ஆராயும் உடலியல் ஆராய்ச்சியாளர்கள் முக்கிய பங்கினை ஏற்பர்.

ஒவ்வொரு மட்டத்திலும் அம்மட்டத்திற்கான அடிப்படை மொழிக் கூறுகளும் அவற்றின் தொடர்புகளும் விளக்கப்பட வேண்டும். ஒலியன் மட்டத்தில் அடிப்படை ''மொழியொலி'' (ஒலியன்) களையும், அவை தொடர்ச்சியாக நின்று உருவாக்கும் வேறு மொழிக்கூறுகளையும் விளக்கவேண்டும். ஒலியன்கள் பொருள் கொண்டவை அல்ல.

''சொல் மட்டத்தில்'' அதன் அடிப்படைக் கூறான உருபனை யும், உருபன்களில் தொடர்ச்சி நிலையால் உருவாகும் 'சொற் களையும்'' விளக்கவேண்டும். மேலும் உருபன்களின் வகைகளையும் விளக்கவேண்டும். உருபன்கள் மிகச்சிறிய பொருள் கொண்ட மொழிக் கூறுகள்.

''சொற்றொடர் மட்டத்தில்'' அதன் அடிப்படைக் கூறான சொல்லையும், சொற்கள் தொடர்நிலையில் நின்று உருவாக்கும் சொற்றொடர், வாக்கியம் ஆகிய கூறுகளையும், வாக்கியத்தில் காணப்படும் மொழிக்கூறுகளின் ''படிபோன்ற அமைப்பை''யும் (Hierarchical structure) விளக்கவேண்டும்.

ஒரு மட்டத்திலுள்ள அடிப்படை மொழிக்கூறுகள் அதே மட்டத்திலுள்ள வேறு கூறுகளோடு தொடர்ச்சி நிலைத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதால் மேல்மட்ட அடிப்படைக் கூறுகள் உருவாகின்றன. அதாவது கீழ்மட்ட அடிப்படைக்கூறுகளின் தொடர் அதன் மேல் மட்டத்தில் அடிப்படைக் கூறுகளை உருவாக்கு வதால், இரண்டு அடுத்தடுத்து வரும் மட்டங்களின் கூறுகளுக்கு மிடையே ''கூட்டு அல்லது உருவாக்கத் தொடர்பு ''Constituency relationship) இருப்பதாகக் கருதுவர் அமெரிக்க மொழி இயலார். இரண்டு அல்லது மூன்று ''ஒலியன்கள்'' தொடர்ச்சியாக நிற்கும்

போது அங்கு ''ஒலியன் தொடர்'' உருவாகிறது. ஒலியனையும், ஒலியன் தொடரையும் 'ஒலியன் மட்டத்தில்' விளக்குவோம். சிறிய ஒலியன் தொடர்கள் பொருள் கொண்டவை யாயிருந்தால் அவை ''உருபன்கள்'' ஆகின்றன. உருபன் தொடர்களால் (சொற்கள்) சொற்றொடர் நிலையின் அடிப்படைக் கூறான ''சொல்'' ஆகிறது. இதிலிருந்து ஒலியனுக்கும் உருபனுக்கும் இடையேயும், உருபனுக்கும் சொல்லுக்குமிடையேயும் ''கூட்டுத் தொடர்பு'' இருக்கிற தென்பதை உணரமுடியும்.

ஒலியன்களும் உருபன்களும் தொடர்ச்சியாக நிற்கும்போது அவற்றின் அமைப்பில் மாற்றங்கள் தோன்றலாம். ஒலியனின் மாறுபட்ட தோற்றங்களை ''மாற்று ஒலி'' எனலாம் (allophone) உருபன்களில் மாறுபட்ட உருவங்களை ''மாற்று உருபன்'' (allomorph) எனலாம், தமிழில் ''க்'' என்ற ஒலியன் சொல்லின் தொடக்கத்தில் 'க்' k) என்ற மாற்று ஒலியையுர (க்+அ+ட்+அ+ல்=கடல்), மெல்லின மெய்யொலியின் பின்னுல் ''க்'' (g) என்ற மாற்றொலியையும் (த்+அ+ங்+க+ம்= தங்கம்), இரண்டு உயிரொலியன்களின் இடையே ''ஹ'' (h) என்ற மாற்றொலியையும் காட்டும். ஆகவே k, g, h என்ற மாற்றொலிகள் 'க்' என்ற ஒலியனின் அங்கங்கள் எனக் கூறமுடியும். இதேபோல் 'கள்' என்ற பன்மை உருபன் '-gal என்ற மாற்றுருபனை 'மரம்' போன்ற உருபன்களின் பின்னரும், -hal என்ற மாற்றுருபனை 'இறகு' போன்ற உருபன்களின் பின்னரும் காட்டும். மாற்றுருபன்களும், மாற்றொலிகளும் சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல் (அமைப்பு சூழ்நிலை) உருவெடுக்கின்றன எனவும் அவைகளை சூழ்நிலைகளால் விவரிக்கமுடியும் என்பதால் பல மாற்றுலிகளையும் மாற்றுருபன்களையும் முறையே ஒரே ஒலியன், உருபன்களில் அடக்க வேண்டும் எனவும் வலியுறுத்துவர் அமெரிக்க மொழிஇயலார்.

எவ்வாறு ஒலியன்களைத் தெரிந்து கொள்கிறோம் என்பதை விளக்க சில வழிமுறைகளைக் கூறினர் அமெரிக்க மொழிஇயலார் இரண்டு பொருள் வேறுபாடுகொண்ட உருபன்கள் தங்கள் ஒலி

யமைப்பில் ஒரே ஒரு ஒலியில் மாறுபட்டு காணப்படுமேயானால் அவைகளைக் ''குறைந்த வேற்றுமை காட்டும் இணை'' (minimal pair) எனலாம். இத்தகைய இணைக் கூறுகள் தங்களது ''பொருள் வேறுபாட்டை'' ஒரே ஒரு ஒலி வேற்றுமையால் தெரிவிக்கின்றன. மொழிக்கூறுகளின் பொருள் வேற்றுமை ஒரே ஒரு ஒலியால் நிர்ணயிக்கப்படுமானால் அந்த ஒலிகள் அனைத்தையும் ''ஒலியன்'' களாகக் கருதமுடியும். <புலி,புளி> என்ற சொற்களின் பொருள் வேறுபாடு 'ல' 'ள' என்ற மெய்களினால் நிர்ணயிக்கப்படுவதால் 'ல' வையும் 'ள' வையும் ஒலியன்களாகக் கருதுகிறோம். இதைப் போல் <மலை, மழை> என்ற சொற்களின் பொருள் வேறுபாடு 'ல', 'ழ' வால் நிர்ணயிக்கப்படுவதால் ல' 'ழ' என்ற ஒலிகளை ஒலியன்களாக கருதுகிறோம்.

மொழியின் ஒரு மட்ட அடிப்படைக்கூறுகள் அதன் மேல் மட்ட அடிப்படைக்கூறுகளை உருவாக்குகின்றன மேல் நிலை அடிப்படைக்கூறுகளை கீழ்நிலை அடிப்படைக் கூறுகளின் தொடர் என கருதமுடியும். ஆனால் இத்தகைய கொள்கையால் சில இடையூறுகள் உருவாயின. அந்த இடையூறுகள் அமெரிக்க அமைப்பு மொழியியல் வரலாற்றில் ''உருபன் ஒலி'' (morpho phoneme) என்ற ஒலி தோன்றவும், உருபனொலிக்காக ஒரு தனி மட்டம் மொழியியல் விவரணையில் ஏற்படவும் காரணமாக அமைந்தன.

ஒலியன்கள் தொடர்ச்சியாக நின்று உருபன்களை உருவாக்கு கின்றன என வைத்துக் கொள்வோம். 'மரம்' என்ற உருபனில் ம்+அ+ர்+அ+ம் என்ற ஒலியன்கள் காணப்படுகின்றன. ஒலியன்களை மாற்றினால் சொல்லும், உருபனும் வேறுபடும். மேற்கூறிய எடுத்துக்காட்டில் முதலில் தோன்றும் 'ம்' எனும் ஒலியனுக்குப் பதிலாக 'த்' அல்லது 'க்' என்ற ஒலியன்களை உபயோகித்தால் வெவ்பேறான உருபன்கள் உண்டாகி விடும். (தரம், கரம்). ஆகவே ஒலியன் வேறுபாடுகள் உருபன் வேறு பாட்டை உண்டாகும் எனலாம்.

ஆங்கிலத்தில் 'ஒய்ஃப்' என்ற உருபன் மனைவியைக் குறிக்கும். இவ்வுருபன் 'ஸ்' என்ற பன்மை உருபனுடன் சேரும்

போது 'ஒய்வ்' என்றாகிறது. 'ஒய்ஃப்' என்ற உருபனின் மாற்றுரு பனாக 'ஒய்வ்' வருகிறது. அவ்விரண்டு உருபனுக்கும் இடையே பொருள் வேறுபாடு இல்லை. ஆனால் இங்கே ஒரு இடையூறு உருவாகிறது. ஆங்கிலத்தில் 'ஃப்' என்ற மெய்யும், 'வ்' என்ற மெய்யும் வெவ்வேறு ஒலியன்கள். (வேன் : ஃபேன் – van : fan . முன்னர் கூறியது போல் ஒலியன்களின் வேறுபாடு உருபன்களில் வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இங்கு 'வ்' 'ஃப்' என்பவை ஒலியன்களாக இருந்த போதிலும் உருபன் வேறு பாட்டை ஏற்படுத்த வில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் நாம் பின்வரும் கொள்கைகளைக் கையாளவேண்டும்: 1) ஒலியன்கள் உருபன்களை உருவாக்குகின்றன; ஒலியன்களின் பேற்றுமை சில சமயங்களில் உருபன்களின் வேற்றுமைக்குக் காரணம்; சில சூழ் நிலைகளில் ஒலியன் வேற்றுமை உருபன் வேற்றுமையை உண்டு பண்ணாது. இத்தகைய கொள்கையை எல்லோரும் ஏற்று கொள்ள மாட்டார்கள். மேற்கூறிய கொள்கைகளை புறக் கணிக்கும் வகையில் சிலர் ''ஒலியன்கள் உருபன்களை உருவாக்கு வதில்லை'' என்றும் ''உருபன்களில் காணப்படும் ஒலிகள் ஒலியன் கள் போன்றிருந்தாலும் அவை ஒலியன்களல்ல ஆனல் 'உருபன் ஒலிகள்' ''என்றும் கூறினர். இத்தகைய கருத்தால் உருபன்கள் காட்டும் ஒலி 'உருபன் ஒலி' என்றும் உருபன் ஒலிகள் மொழியில் இருக்கின்றன என்றும், உருபன் ஒலி அதன் தொடர் நிலத் தொடர்பு ஆகியனவற்றை ''உருபன்ஒலி மட்டத்தில்'' (morpho phonemic level) விளக்க வேண்டும் என்றும் கூறுவர் சில அமெரிக்க மொழி இயலார். உருபன் ஒலிமட்டத்தை உருபன் மட்டத்திற்கும், ஒலியன் மட்டத்திற்கும் இடையே நிறுத்தி, உருபன் ஒலிகள் ஒரு மொழியில் ஒலியன்களாக மாறுபாடு அடையும் எனவும் விளக்குவர்.

### மொழி விவரணை :

மொழியின் அமைப்பை விளக்குவதற்காக அமெரிக்க அமைப்பு மொழியியலார் 'சிதைப்பு வகை முறைகளை'க் கையாண்டனர். சிதைப்பு வகை முறை என்பது மொழிக் கூறுகளை சிதைப்பதையும்,

சிதைப்பதால் கிடைக்கும் மொழிக்கூறுகளை வகைப்படுத்தலையும் குறிக்கும். சொற்றொடர், வாக்கியம், சொல் ஆகியனவற்றை மொழி இயலார் கள ஆய்வின் மூலம் சேகரிப்பர். அத்தகைய மொழிக்கூறுகளை சிதைத்து, அவைகளில் இடம் பெறும் சிறு மொழிக்கூறுகளை கண்டுபிடிக்கும் முறையை விளக்குவர். பின்னர், அவ்வாறு கண்டு பிடித்த சிறு மொழிக்கூறுகளின் பொதுத்தன்மையை வைத்து அவைகளை வகைப்படுத்துவர். சிறு மொழிக்கூறுகளின் பொதுத்தன்மை, அவை பெரிய மொழிக் கூறுகளில் நிற்கும் இடங்களைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுவ தால் சிறிய மொழிக் கூறின் பொதுத்தன்மையை அறிய அவை களின் முன்னாலும், பின்னாலும் தோன்றுகின்ற இதர மொழிக் கூறுகளை நோக்க வேண்டும். இரண்டு மொழிக்கூறுகள் ஒரு பெரிய மொழிக்கூறில் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் நிற்கின்றன என்பதை "பெயற்சி சோதனை" (substitution test) மூலம் அறிய லாம். (A, B, C) என்ற மொழிக்கூறுகள் உள்ளடங்கிய ஒரு பெரிய மொழிக்கூறில் (ABC, முதல் மொழிக்கூறு நிற்குமிடத்தில் இன் னொரு மொழிக்கூறைப் (A') போட்டால் அதனால் உருவாகும் பெரிய மொழிக்கூறு (A'BC), இலக்கண ரீதியில் உரு இல்லா மலும், ஒரு குறிப்பிட்ட பொருளை குறிக்கும் வகையிலும் இருக்குமானால் முதல் மொழிக்கூறும் (A) அதனைப் பெயற்சி செய்த இன்னொரு மொழிக்கூறும் (A') ஒரே வகையைச் சார்ந் தவை எனக்கூற முடியும்.

சிதைப்பு வகை இயலையே மொழி விவரணைக்கான முறை என்றனர் அமெரிக்க மொழி இயலார். மேலும் மொழிகள். மொழிக்கூறுகளைத் தேர்ந்தெடுப்பதிலும், அவற்றின் வகைகளைக் காட்டுவதிலும் வேறுபடுகின்றன எனவும் கூறினர். அமெரிக்க மொழி அமைப்பு விவரணை, மரபு இலக்கண விவரணையி லிருந்தும், ப்ளும்ஃபீல்டின் பின்னர் வந்த "உற்பத்தி மொழி யியலார்" (Generative grammarians) விவரணையிலிருந்தும் வேறுபட்டது.

மரபு இலக்கணத்தார் இன்னின்ன மொழிக்கூறுகள் ஒரு மொழியில் இருக்கும், இருக்க வேண்டும் என்ற கொள்கையை

முதலில் ஏற்றுக் கொண்டு மொழிகளில் அவைகளைக் காண முயல்வர். இவர்களும் மொழிக் கூறுகளைக் கண்டு பிடிக்கின்றனர்; மனதில் நினைத்துக் கொண்ட மொழிக்கூறுகள் இருக்கின்றனவா என்று கண்டு பிடிக்கின்றனர். மொழிக்கூறுகளை, அவர்கள், அவை நிற்கும் இடங்களின் அடிப்படையில் வகைப்படுத்துவதில்லை. முதலிலேயே மொழிக்கூறுகளை பொருளினடிப்படையில் விளக்கிவிட்டு மொழிக்கூறுகளை, கொடுத்த விளக்கத்தின் மூலம் வகைப்படுத்துவர். ஆகவே மரபு இலக்கணத்தார் மொழிக் கூறுகளை வகைப்படுத்தும் விதத்தில் அமைப்பு மொழியியலாரிடமிருந்து வேறுபடுவர்.

உருவாக்க உற்பத்தி) மொழியியலாரின் மொழிவிவரணை ப்ளும்ஃபீல்டு மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் மொழியமைப்பு விவரணையிலிருந்து, குறிப்பாக சிதைப்பு வகை மொழிவிவரணையிலிருந்து வேறுபட்டது. பெரிய மொழிக்கூறுகளை மொழியின் அமைப்பை வெளிப்படுத்தும் கூறுகளாக எடுத்து அவற்றில் காணப்படும் சிறிய மொழிக்கூறுகளை சிதைப்பு வகையைப் பின்பற்றி கண்டு கொள்ள வேண்டும் என்பதே ப்ளூம் ஃபீல்டின் கொள்கை. இதற்கு எதிராக 'உருவாக்க மொழியியலார்'' (Gener tive Lingui ts), சிறிய மொழிக்கூறுகளை முதலில் எடுத்துக் கொண்டு பெருமொழிக்கூறுகளான வாக்கியம், சொற்றொடர் இவை உருவாகும் வகையை விளக்குவர். ''உருவாக்க மாற்றிலக்கணம்'' (Generative Transformational grammar) இத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறது. சொற்களை முதற் பொருளாக எடுத்துக் கொண்டு, சில விதிகளை இயக்குவதன் மூலம் சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் உருவாக்க முடியும் என விளக்குவர். ஆகவே இத்தகைய விவரணையை ஆக்க (உருவாக்க) விவரணை எனலாம்.

ஒரு மொழியை விவரிக்க வேண்டுமானால் அதைப் பற்றிய குறிப்புகள் (செய்திகள்) வேண்டும். ஒரு மொழி வரிவடிவம கொண்டிருந்தால் சில சமயங்களில் அம்மொழிக்கென சில நூல்கள் காணப்படும். நூல்கள், கல்வெட்டுக்கள், காப்பியங்கள், சுவடிகள் உலோகத்தகட்டுக்குறிப்புகள் முதலியன மொழியின் அமைப்பை

விளக்கும் வகையில் ஏற்றுக் கொள்ளப்படும் கருவூலங்களாகும். அவைகளை வைத்துக் கொண்டு அவைகளில் உபயோகிக்கப்பட்ட மொழியின் அமைப்பையும் கண்டு கொள்ள முடியும். வரலாற்று மொழியியலாரும், மரபு மொழி இயலாரும் இத்தகைய எழுத்துப் படிகளை மொழி விவரணைக்குப் பயன்படும் குறிப்புகளாக பயன் படுத்தினர். அமெரிக்க மொழியியலார் பேச்சு மொழிக் குறிப்பு களையே மொழியின் விவரணைக்கு பயன்படுத்த வேண்டும் என்று கொண்டனர். இதன் ஒரு காரணம் அவர்கள் விளக்க முயன்ற அமெரிக்க இந்திய மொழிகள் எழுத்து வடிவம் அற்றதா யிருந்ததே. மொழி வர்ணனை, இலக்கணம் படைத்தல் ஆகியன கள ஆய்வில், ஒரு மொழியைப் பேசுவோரிடமிருந்து பேச்சு வடிவில் சேகரிக்கப்பட்ட மொழிக் குறிப்புகள், மொழி அமைப்புக் குறிப்புகள் ஆகியனவற்றைத் தழுவியே அமைய வேண்டும் எனவும் கூறினர். இத்தகைய கருத்தை அமெரிக்காவில் அமைப்பு மொழி யியலாரின் பின்னால் தோன்றிய 'உருவாக்க மொழி இயலார்' ஏற்றுக் கொள்வதில்லை. மொழியின் இலக்கணத்தை அம்மொழி பேசும் மொழியியல் ஆராய்ச்சியாளரே சீரிய முறையில் எழுத முடியும் என்றும், மொழி பேசுவோரிடமிருந்து பெறும் செய்திகள் மூலம் (வேறு மொழி பேசும்) மொழியியலார் சிறந்த இலக் கணத்தைப் படைக்க முடியாதென்றும், மொழி விவரணையில் பிறரிடமிருந்து சேகரிக்கும் விஷயங்களைவிட மனதில் அல்லது உள்ளுணர்வில் (intuition) வெளிப்படும் விஷயங்கள் தான் முக்கிய மானவை எனவும் கூறுவர். இத்தகைய கருத்துகள் "மன அடிப் படை இலக்கணங்கள்" (mentalistic grammars) உருவாகக் காரணமாயமைந்தன.

ப்ளூம்ஃபீல்டும், அவரைச் சார்ந்தவர்களும் பரப்பிய மொழி வர்ணனைக் கொள்கைகளை ஏற்று எழுதப்படும் இலக்கணங்கள், "இயக்க இலக்கணங்கள்" (mechanistic grammars) எனும் பெயர் பெறும். இதன்படி, முதலில் மொழியமைப்பு பற்றிய சில குறிப்புக்களை சேகரிக்க வேண்டும். அத்தகைய குறிப்புகள் ஒலி யமைப்பை, சொல்லமைப்பை, சொற்றொடரமைப்பை குறிப்பன வாயிருக்கும். பின்னர், விவரணைக்காக உபயோகிக்கப்படும்

விவரணை விதிகளைக்கையாண்டு மொழியின் ஒலிகள், ஒலித் தொடர்கள், உருபன்கள், உருபன் தொடர்கள், சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றையும், அவற்றின் நிலைகளையும் கண்டு பிடித்து வெளியிட வேண்டும். ''உள்ளுணர்வில்'' தோன்றும் மொழிபற்றிய குறிப்புகளை விவரணையில் புகுத்தக் கூடாது.

மொழி விவரணை, எல்லா மொழிகளிலும் காணப்படும் சில 'ஒத்த அமைப்புகளை விளக்கும் நோக்கத்தைக்' கொள்ளக்கூடாது. ஒவ்வொரு மொழியின் அமைப்பும், இன்னொரு மொழியின் அமைப்பிலிருந்து வேறுபட்டது. ஆதலால் ஒரு மொழியின் விவரணையும் இன்னொரு மொழியின் விவரணையிலிருந்து வேறு பட்டே காணப் படவேண்டும். 'பொது இலக்கணம் படைப்பதை தம் கொள்கையாகக் கொண்டவர்கள் மொழியின் சிறப்பு அம்சங் களைக் காண விழைவதில்லை. ஆகவே ஒரு மொழியின் இலக்கணம் 'சிறப்பு இலக்கண'மாக இருக்க வேண்டும் என்பர் ப்ளூம்பீல்டும் அவரைச் சார்ந்தவர்களும். இத்தகைய கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மரபு இலக்கணத்தாரும். உருவாக்க (பிறப்பு) இலக்கணத்தாரும்.

அமெரிக்க அமைப்பு மொழியியலார் மொழி விவரணைக்காக சில விதிகளை, சில ''அடிப்படை நிபந்தனைகளை'' வகுத்தனர் என்றோம். இத்தகைய நிபந்தனைகள் மொழிக் கூறுகளை கண்டறிய உதவும் நிபந்தனைகள் எனலாம். ஒவ்வொரு மட்டத் திலும் காணப்படும் அடிப்படை மொழிக் கூறுகளை கண்டறிய அந்த மட்டத்திற்கே உரித்தான சில விதிமுறைகள், செயல்முறைகள் இருக்கும். அந்த செயல்முறைகளை (மொழியியலாரால் உருவாக்கப் பட்ட செயல் முறைகள்) பின்பற்றினால் மட்டக்கூறுகளை எளிதில் விளக்க முடியும் என்ற கொள்கையையும் கொண்டிருந்தனர் அமைப்பு மொழியியலார். விவரணையில் காணப்படும் மொழியியலாரால் நிறுவப்பட்ட) கூறுகளும், அமைப்புகளும்சேகரித்த குறிப்புகளோடு தொடர்பையும், ஒற்றுமையையும் கொண்டிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்துவர்.

அமெரிக்க மொழி இயலாரின் அமைப்பு விவரணையில் ''பொரு ளமைப்பு'' பற்றிய விவரணை இடம் பெறாது. இதன் முக்கிய

காரணம் அவர்கள் ''பொருளை'' மொழியின் அமைப்பிலிருந்து வெளியேற்றியதுதான். ஏன் வெளியேற்றினர் என்பதற்கான காரணங்களையும் கூறுவர். ஒரு மொழிக்கூறின் பொருளை அறிய வேண்டுமானால் அந்த மொழிக் கூறு எந்த சூழ்நிலையில் நிற்கிறது என்பதை விளக்க வேண்டும். சூழ்நிலையை பேச்சும், பேச்சுக்கூறும் எழ வகை செய்த ஒன்று என்பார். ஆகவே பேச்சுக்கூறுகளின் பொருளை அறிய வேண்டுமென்றுல் பேச்சுக் கூறுகள் எந்த சூழ்நிலையில் உருவாகின்றன என்பதை அறிய வேண்டும் என்பார். பேச்சுக்கூறுகள் எவ்வித விளைவுகளை கேட்போரிடத்தில் உரு வாக்குகின்றனவோ அவ்விளைவுகளும் அப்பேச்சுக் கூறுகளின் பொருளை நிர்ணயிக்கும் எனவும் கூறுவார். மொழிக்கூறு (பேச்சுக் கூறு) எழக்காரணமாயிருந்த சூழ்நிலைகளையும், மொழிக்கூறு ஏற்படுத்தும் விளைவுகளையும் விளக்குவது எளிதல்ல; ஏனென்றால் அவை காலத்தால், இடத்தால் வேறுபடுபவை. அவைகளை விளக்க வேண்டுமானால் வெளியுலகப் பொருள்களையும் மொழியைப் பயன்படுத்துபவரின் மனநிலைகளையும் விளக்க வேண்டும். அத்தகைய விளக்கங்கள் மொழியைப் பற்றியதல்ல. ஆகவே மொழிக்கூறுகளின் 'பொருளை' மொழி அமைப்பின் உள்ளே அடக்கமுடியாது. மேலும் சூழ்நிலைகளைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்கும் அளவுக்கு விஞ்ஞானம் வளர வில்லை என்றகொள்கையை ப்ளூம்ஃபீல்டு கொண்டிருந்தமையால் பொருள் அமைப்பு குறித்த விவரணையில் கவனம் செலுத்த வில்லை. பொருள்அமைப்பு குறித்து கூறாவிடினும், பொருள் சம்மந்தப்பட்ட கருத்துக்களை சில மொழிக்கூறுகளைக் கண்டறியும் செயல்முறைகளோடு இணைப்பர். 'ஒலியன்' என்ற மொழிக் கூறை சொற்களின் பொருள்களை வேறுபடுத்தும் ஒலி எனவும், 'உருபன்' என்பதனை பொருள் பொதிந்த சிறு மொழிக்கூறு எனவும் விளக்குவதிலிருந்து 'பொருள்' என்ற கருத்து எவ்விதம் மொழிக்கூறுகளை விளக்க பயன்படுகிறது என்பது விளங்கும். மேலும் ப்ளூம்ஃபீல்ட் ஒவ்வொரு மொழிக்கூறுக்கென அமைந்த 'பொருளை' தனித்தனிப் பெயரால் அழைப்பர். மேற்கூறியதி லிருந்து, ப்ளூம்ஃபீல்ட் 'பொருளை' விவரிக்க முயல்வதில்லை என்பதும், ஆனால் பொருளை மொழிக்கூறுகளோடு ஒன்றிய அங்கம் எனக் கொண்டார் என்பதும் தெளிவாகிறது. மேலும்

மொழி அமைப்பு விவரணையில் 'பொருளை' பயன் படுத்தலாம் என்பதை ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவாகிறது.

அமெரிக்க 'விவரணை மொழி இயலில்' காணப்படும் 'இலக்கண விவரணைகள்' இரண்டு வகையானவை. இலக்கண விவரணை, உருபன்களையும், உருபன்கள் தொடர்ச்சியாக நின்று உருவாக்கும் சொல்லையும், சொற்கள் தொடர்ச்சியாக நிற்பதால் உருவாகும் சொற்றொடர், வாக்கியம் ஆகியனவற்றையும் விளக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டது. சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் இவற்றின் அமைப்பை விளக்கும் வகையில் அமைந்த இரண்டு வகையான விவரணைகளை நாம் அமெரிக்க மொழியியலில் காணலாம். அவையாவன 1. தொடர்நிலை விளக்கம் (Item and Arrangement description) 2. உருவாக்க விளக்கம் (Item and process description). ''உருவாக்க விளக்கம்'' முதலில் தோன்றிய ஒன்று. போயஸ், சபீர் என்பவர்களின் ஆராய்ச்சிகளில் இந்த விளக்கத்தைப் பரவலாகக் காணலாம். இதன்படி, பெரிய மொழிக்கூறுகள் (சொற்கள், வாக்கியங்கள் முதலியன) அவற்றின் அடிப்படைக் கூறுகளிலிருந்து உருவாக்கப்படும். அடிப்படை மொழிக்கூறுகள் சில ''செயல்களுக்கு'' (process) உட்படுத்தப் பட்டு பெரிய மொழிக் கூறுகளைத் தோற்றுவிக்கின்றன என்ற கருத்தும் உருவாக்க விளக்கத்தில் காணப்படுகிறது. மொழிக்கூறுகள் சில ''இலக்கண செயல்களைக்'' காட்டுகின்றனவா என்பது ஒரு கேள்வி. மொழியைப் பேசுபவர்களும், விளக்குகிறவர்களும் பெருமொழிக்கூறுகளை உருவாக்குகிறார்கள் என்றும் அவ்வுருவாக்கம் அடிப்படை மொழிக்கூறுகளை தேர்ந்தெடுப்பதன் மூலமும், தேர்ந்தெடுத்த மொழிக்கூறுகள் ''இலக்கண செயல்களுக்கு'' உட்படுத்தப் படுவதன் மூலமும் விளங்கும் எனவும் கூறுவர் 'உருவாக்க விளக்கம்' கொடுப்பவர்கள். சில அமெரிக்க அமைப்பு மொழி இயலார் ''உருவாக்க விளக்கக் கொள்கையை'' ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதற்கு காரணம் உண்டு. ''இலக்கணச் செயல்கள்' என்ற கருத்து உருவாகக் காரணமாக நிற்பது பத்தொன்பதாம் நூற்றாண்டு வரலாற்று மொழியியலாரால் விளக்கப்பட்ட ''மொழி மாற்றம்'' (Linguistic change) என்ற கருத்தே. பத்தொன்பதாம் நூற்

றாண்டில் விவரிக்கப் பட்ட ''மொழிமாற்றக் கொள்கை'' (மொழி வெவ்வேறு காலக்கட்டங்களில் மாற்றமடையும் சாதனம் என்ற கருத்து) அமைப்பு மொழியியலில் ''உருவாக்க கொள்கை'' ஏற்பட காரணமாயிருந்தது. இந்த 'மாற்றம்' 'உருவாக்கம்' என்ற கலைச் சொற்கள் வரலாற்று மொழியியலில் இடம்பெற வேண்டியவை என்றும், ஒரு குறுகிய காலக் கட்டத்தில் நிலை பெறும் மொழியின் அமைப்பை விளக்க முனையும் போது அமைப்புகள் எவ்விதம் நிலை பெறுகின்றன, புலப்படுகின்றன என் பதை விளக்க வேண்டுமேயன்றி, அமைப்புகள் எவ்விதம் சிறு மொழிக் கூறுகளிலிருந்து உருவாகின்றன என்பதை விளக்கக் கூடாது என்றும் கூறுவர் சில அமைப்பு மொழியியலார். பொது வாக மொழி அமைப்பு விவரணையில், வரலாற்று மொழியியல் கருத்துக்களான ''மாற்றம்'' (change), 'உருவாக்கம்' (formation) என்ற கருத்துகள் இடம் பெறக்கூடாது என்பர்.

'உருவாக்க விளக்கம் கொடுப்பவர்கள் <கற்கள்> என்ற சொல் <கல்> என்ற தனி உருபனும் <-கள்> என்ற சார்பு உருபனும் சேர்வதால் ஏற்படுகிறதென்றும், <கல்> என்ற தனி உருபன் <-கள்> என்ற சார்பு உருபனுடன் புணர்தலுக்கு உட் படுத்தப்பட்டு <கற்கள்> உருவாகிறது என்றும் கூறுவர். இங்கே ''புணர்தல்'' என்ற இலக்கணச் செயல் முக்கிய அங்கமாகிறது. சொல் உருவாக்கம் பல செயல்களால் ஏற்படும் எனவும் கூறுவர். சார்பு உருபன்களைத் தனி உருபன்களின் முன்னாலோ, பின் னாலோ, நடுவிலோ நிறுத்துவதன் மூலமும், உருபன்களை இரட் டிப்பிப்பதன் மூலமும், உருபன்களில் காணப்படும் சில ஒலிகளை விலக்குவதன் மூலமும், விலக்கிய ஒலி முன்னால் நின்ற இடத்தில் வேறு ஒலிகளை இடுவதன் மூலமும் வெவ்வேறு வகையான சொல் நிலை மொழிக்கூறுகளை உருவாக்கமுடியும் என்பர் ''உருவாக்க விளக்கம் கொடுப்பவர்கள்''. உருபன் இணைப்பு, உருபன் அமைப்பு ஒலி விலக்கல், உருபன் அமைப்பு ஒலி பெயர்ச்சி, உருபன் இரட்டிப்பு ஆகியனவற்றை ''இலக்கணச் செயல்கள்'' என்ற பெய ரால் அழைப்பர்.

மொழி அமைப்பு விவரணையில் வரலாற்று மொழியியல் கலைச் சொற்களான 'மாற்றம், உருவாக்கம்' என்பவைகளை

இணைக்க விரும்பாத மொழியியலார் கொள்கையை ''தொடர் நிலை விளக்க கொள்கை'' எனலாம். இத்தகைய கொள்கையை ப்ளும் ஃபீல்ட், ஹாக்கெட் என்பவர்கள் கொண்டிருந்தனர். இவர்கள், 'பெருமொழிக்கூறு, சிறு மொழிக்கூறுகளிலிருந்து உருவாக்கப்படுகிறது' என்ற கருத்தை ஏற்பதில்லை. பெரு மொழிக்கூறுகளுக்கும் சிறுமொழிக் கூறுகளுக்கும் இடையே தொடர்பு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு, பெருமொழிக்கூறை விளக்க, சிறு மொழிக் கூறுகளையும் அவை நிற்கும் சூழ்நிலைகளையும் விவரிப்பர். <கற்கள்> என்ற சொல் 'கல்+கள்' என்ற அமைப்பைக் காட்டுகிறது. இந்த அமைப்பின் காரணம் <கல்> என்ற தனி உருபன் மற்றும் <-கள்> என்ற ஒட்டு உருபன்களின் நிலைபேறு என விளக்குவர். ஆனால் உருவாக்க விளக்கம் கொடுப்பவர்கள் <கல்> என்ற சொல் உருபனிலிருந்து <கற்கள்> என்ற சொல் உருவாகிறது என்பர்.

உருவாக்க விளக்கத்துக்கும், தொடர்நிலை விளக்கத்துக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை தெளிவாக ஹாக்கெட் எடுத்துரைப்பார். இதற்காக கணிதத் துறையிலிருந்து எடுத்த ஒரு எடுத்துக்காட்டையும் கூறுவார் (ஹாக்கெட் 1954) இரண்டு விளக்கங்களும் விவரணைக்காக ''அடிப்படை மொழிக்கூறு'' என்ற ஒன்றை எடுத்துக் கொள்கின்றன. இது அவைகளின் ஒற்றுமை. உருவாக்க விளக்கக் கொள்கை 'அடிப்படைக் கூறுகள் பலவகை இலக்கணச் செயல்களுக்கு உட்படுத்தப்படு (நம்மால்) வதன் மூலம் பெருமொழிக்கூறுகள் உருவாகின்றன' என்று கூறும். தொடர்நிலை விளக்கம், பெருமொழிக் கூறுகள், சின்ன மொழிக்கூறுகளையும் அவற்றின் இடையே காணப்படும் தொடர் நிலையையும் வெளிப்படுத்தி நிற்கும் அமைப்பு' எனக் கொள்ளும். உருவாக்க விளக்கம் ''மெ ழிக்கூறு அமைப்பு உருவாக்கத்தையும்'', தொடர்நிலை விளக்கம் ''மொழிக்கூறு அமைப்பு நிலையையும்' விளக்கும். 'இரண்டோ'டு 'மூன்று' சேர்வதால் 'ஐந்து' பிறக்கிறது' என்பது உருவாக்க விளக்கம்.

'ஐந்து, இரண்டையும் மூன்றையும் தொடர்புப் படுத்துகிறது'' என்பது தொடர்நிலை விளக்கம்.

அமெரிக்க அமைப்பு மொழி இயலில், இலக்கண விவரணைக்கு உருவாக்க விளக்கம் சிலராலும், தொடர்நிலை விளக்கம் சிலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்விரண்டிலிருந்தும் வேறுபட்ட ''சொல் - சொல் தொகுப்பு விளக்கத்தை'' (word and paradigm description) அமெரிக்க மொழி இயலார் ஏற்றுக் கொள்வதில்லை. சொல் - சொல் தொகுப்பு விளக்கம் ஐரோப்பிய மரபு மொழி இயலாரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விளக்கம்.

போயஸ் (1858 – 1942):

பேச்சுமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து அம்மொழியை விவரிக்கும் போது மரபு இலக்கணத்தார் காட்டிச் சென்ற இலக்கண அமைப்புகளை எதிர்பார்க்காமல், மொழியில் எந்த இலக்கண அமைப்பு காணப்படுகிறதோ அதை அப்படியே விளக்க வேண்டும் என்ற கருத்தை விளக்கிச் சென்றார் போயஸ். இவருடைய கருத்துகள் இவர் பின் வந்த மொழியியலறிஞர்களான சபீர், ப்ளும்ஃபீல்டு போன்றவர்களின் மொழி ஆராய்ச்சிகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். போயஸ் தொகுத்த புத்தகமான ''Hand book of American Indian Languages'' (1941) மொழிகளின் சிறப்பு அம்சங்களைப் பொதுவாகவும், மொழி ஆராய்ச்சி முறைகளைக் குறிப்பாகவும் விளக்குகிறது.

ஒரு மொழி ஆராய்ச்சிக்கான குறிப்புகளை அம்மொழி பேசுவோரிடமிருந்து, அம்மொழி நிலவும் சூழலின் பின்னணியில் சேகரிக்க வேண்டும். ஏடுகளில் காணப்படும் மொழியைப் பற்றிய ஆராய்ச்சி, பேச்சு மொழியைப் பற்றிய ஆராய்ச்சியிலிருந்து வேறுபட்டது. மொழியை ஆராயும் போது, மொழி எந்த அமைப்பைக் காட்டுகிறதோ அந்த அமைப்பை முழுமையாக விளக்க வேண்டும். மரபு இலக்கணங்களின் தாக்கத்தால் நாம் மனதில் இலக்கணக் கூறுகள், இலக்கணக் கூறுகளின் அமைப்பு முதலியனவற்றைப் பற்றிய கருத்துகளைக் கொண்டிருக்கிறோம். ஒரு மொழியை நாம் ஆராயும் போது, அம்மொழியில் நம் மனதில் கொண்டிருக்கும்

இலக்கணக் கூறுகள், அமைப்புகள் போன்றவை இருக்கவேண்டும் என எதிர்பார்த்து ஆராயக் கூடாது. மேற்கூறிய கருத்துகளை நாம் போயஸ் என்பாரின் மொழியாராய்ச்சி விவரணையில் காண முடியும்.

''சமுதாயம்'' சம்பந்தப்பட்ட சில கருத்துக்களை தெளிவாக விளக்குவார் போயஸ். ''சமுதாயம்'' சூழ்நிலையால் எழுவதில்லை, ''கலாச்சாரம்'' பாரம்பரியத்தால் உருப்பெறுகிறது. சமுதாயத்தில்தான் மொழி நிலை பெறுகிறது. ஒரு மொழியின் அமைப்பு கலாச்சார நிலையால் ஏற்படுகிறது; ஆனால் கலாச்சார சூழ்நிலை மொழியால் நிர்ணயிக்கப் படுவதில்லை. மொழிக்கும் மனிதனின் ''சிந்தனைக்கும்'' தொடர்பு உண்டு. மொழியின் தாக்கம் மொழி பேசுவோரின் சிந்தனையிலும், சிந்தனையால் வெளியாகும் ''எண்ணங்களிலும்'' காணப்படும். ''க்வாக்யூதல்'' என்ற மொழியில் காதல், இரக்கம் என்ற தனிச்சொற்களைக் காணமுடியாது. அவனது காதல், அவளது காதல், அவனது இரக்கம்' போன்ற கூட்டுச் சொற்களைக் காணமுடியும். இதிலிருந்து அம்மொழி பேசும் மக்கள் விஷயங்களைக் குறிப்பாக சொல்வதை விரும்புபவராகவும் பரவலாக (பொதுவாக) சொல்ல விரும்பாதவராகவும் இருப்பதை உணரமுடியும். இத்தகைய மொழிகளால் பொதுவான எண்ணங்களை வெளிப்படுத்தமுடியாது என்று கூறுவது தவறு. இரண்டு மொழிகள் ஒரே வகையில் பொருளைக் குறித்தாலும், அம் மொழிகளில் காணப்படும் கூறுகளின் பொருள்கள் வேறுபடும். ஒரே விதமான சூழ்நிலையை இலக்கண முறையில் இரண்டு மொழிகள் இரண்டு விதமாக விளக்குவனவாயிருக்கும். ஆகவே மொழிக் கூறுகளின் பொருள்கள் வேறுபடுகின்றன. மேலும் இரண்டு மொழிகளில் இரண்டு விதமான அமைப்புகளும் இருக்கக்கூடும். ஆகவே ஒரு மொழி இன்னொரு மொழியிலிருந்து வேறுபட்டு காணப்படும் ஒவ்வொரு மொழியும் அம்மொழி நிலவும் சூழ்நிலை யோடும் மொழி பேசுவோரின் சிந்தனை சக்தியோடும் தொடர்பு கொண்டிருப்பதை விளக்க ''தொடர்புத்தத்துவம்'' (Relativity) என்ற கருத்தைப் பயன்படுத்தலாம். மேற்கூறிய கருத்துகளால் போயஸ் மொழிக்கும், சமுதாயம், கலாச்சாரம், மனிதமனம் ஆகியன வற்றிற்கும் இடையே காணப்படும் தொடர்பை விளக்குவார்.

மொழி பேச்சால் வெளிப்படுகிறது. மனிதரால் பேசப்படும் மொழிகள் எல்லாம் வளர்ச்சி அடைந்தவைகளே. ''பழங்குடி மக்களின் மொழி வளர்ச்சியற்றது; அம்மொழிகளின் ஒலியமைப்பு, உச்சரிப்பு முதலியன ஒழுங்கற்றன'' என்று சிலர் கூறும் கருத்து தவறானது என்பார் போயஸ். ஒரு மொழியில் காணப்படும் ஒலிகள் எண்ணத்தில் மிகுதியாகக் காணப்பட்டாலும் சில குறிப்பிட்ட ஒலிகளே மொழியின் ''முக்கிய ஒலிகள்'' ஆகின்றன; முக்கிய ஒலிகள் எதேச்சையாகவும், சூழ்நிலைக்குத் தகுந்தாற்போலும் மாறுபாடு அடையும் தன்மை கொண்டவை என்றும் கூறுவார். இத்தகைய கருத்துகள், பின்னர் அமெரிக்க மொழியியலில் ''ஒலியன்'' என்ற பொது ஒலி குறித்த கருத்து உருவாகக் காரணமாயின.

இலக்கணக்கூறுகள் எல்லா மொழியிலும் காணப்படும் பொருளைக் கொண்ட ஒலித் தொடர்கள் இலக்கணக் கூறுகள் எனப்படும். வெளியுலகில் காணப்படும் பொருள்களையும், நடக்கும் நிகழ்ச்சிகளையும் மனிதன் உணரும்போது அங்கு ''அனுபவங்கள்'' பிறக்கின்றன. அனுபவங்களிலிருந்து ''எண்ணங்கள்' பிறக்கின்றன. பெரு எண்ணங்களில், எண்ணத் துளிகளைக் காணமுடியும். சில எண்ணத்துளிகளோடு சில ஒலித் தொடர்களை இணைக்கிறான் மனிதன். இங்கே மொழிக்கூறு (இலக்கணக்கூறு) உருவாகிறது. ஒலித்தொடர்கள் எண்ணத்துளிகளுடன் இணைக்கப்படுவதால் தான் அவை மொழிக்கூறுகளாக உருவெடுக்கின்றன; பொருள் கொண்டவை ஆகின்றன. வெவ்வேறு மொழிகள் வெவ்வேறு வகையில் எண்ணத்துளி - ஒலித்தொடர் இணைப்பைக் காட்டும். மொழிகளை ஒப்புமைப்படுத்தும்போது இது விளங்கும். ஏரி, ஆறு, நீரோடை, மழை, பனித்துளி, அலை முதலியன வெவ்வேறான பொருள் கொண்ட சொற்கள் என கருதப்பட்டாலும் அவை எல்லாம் 'நீர்' என்ற அடிப்படை எண்ணத்தோடு தொடர்புடையன. ஆங்கிலத்தில் காணப்படும் kick, bite, be near to, pound என்ற வினைச் சொற்கள் தொடர்பற்றவை. ஆனால் ''டகோட்டா'' என்ற அமெரிக்க இந்திய மொழியில் மேற்கூறிய ஆங்கில சொற்கள் காட்டும் பொருள்கள் (எண்ணங்கள், grip என்ற

அடிப்படை எண்ணத்திலிருந்து உருவானவை என விளக்கப்படும். ஒரு மொழியை ஒருவர் ஆராயும்போது, தன் தாய் மொழியில் இருக்கும் எண்ணத்துளிகள் ஆராயும் மொழியில் இருக்கக்கூடும் என ஊகிக்கக்கூடாது. இரண்டு மொழிகளில் மொழிக்கூறுகள் காட்டும் எண்ணத்துளிகளும், எண்ணத்துளிகளை மொழிக்கூறுகள் காட்டும் விதமும் வேறுபடுவதால் ''மொழிபெயர்த்தல்'' கடினமாகிறது. ஒருமொழி மிகுதியான ''குறிச் சொற்களைக்'' (எண்ணத் துளியைக் குறிக்கும் சொற்கள்) கொண்டிருந்தால், அம்மொழியின் இலக்கண அமைப்பு சிக்கலில்லாததாக இருக்கும். இது போன்ற போயஸின் கருத்துக்கள் அவர் கொண்டிருந்த ''தொடர்புத்தத்து' வத்தை'' வெளிப்படுத்தும் வகையிலும் விளக்கப்பட்டன.

வாக்கியங்களையும், சொற்களையும் தனித்தனியே விளக்குவார் போயஸ். மொழியின் முக்கிய கூறு வாக்கியமே. அவைகள் தான் பேச்சில் தோன்றுகின்றன. சொற்கள், மொழிக் கூறுகள் தாம் என்றாலும் அவை இயற்கையானவை அல்ல; அவை ஆராய்ச்சியாளர்களால் நிலை நாட்டப்படுவன. இவ்வாறு நிலை நாட்டப் படுவதால்தான் அவை நிலையான ஒலிவடிவம், பொருள் முதலியனவற்றைக் கொண்டவை எனவும், தனிநிலையுடையவை எனவும் கருதப்படுகின்றன.

இலக்கணக்கூறுகளை வெவ்வேறு இலக்கணமுறைப்படி வகைப்படுத்தலாம். ஐரோப்பிய மொழிகள் பெயர்ச்சொல்லை பால், எண் முதலியவற்றால் வகைப்படுத்தும். சில மொழிகளில் பெயர்ச் சொல் எண்ணைக் காட்டுவதில்லை. 'க்வாக்கியூத்தல்' என்ற மொழியில் ''அங்கே ஒரு வீடு இருக்கிறது'' என்ற பொருளும் ''அங்கே வீடுகள் இருக்கின்றன'' என்ற பொருளும் ஒரே வாக்கியத்தால் குறிக்கப்படும். சில மொழிகளில் (சினூக் என்ற மொழி) ''வேற்றுமை'' என்ற இலக்கணக்கூறைக் காணமுடியாது. மொழிகளில் வினைச்சொற்களும், பெயரீட்டு சொற்களும் வெவ்வேறு இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும் என்ற கருத்தையும் போயஸ் குறிப்பிடுவார்.

**சபீர் (1884-1939)**

சபீர் என்பாரின் ஆராய்ச்சிகளில் போயஸ் என்பாரின் கருத்துகள் பிரதிபலிப்பதைக் காணமுடியும். சபீர், அமெரிக்க இந்திய மொழிகளை ஆராய்வதிலும், வகைப்படுத்தலிலும் அதிக கவனம் செலுத்தினார். அவருடைய புத்தகமான "Language" (1921, 'மொழி') என்பதில் மொழி என்பதனைப் பற்றிய விவரணை மொழிக்கும் கலாச்சாரம், இனம் என்பனவற்றிற்கும் இடையே நிலவும் தொடர்பு, மொழிகளில் காணப்படும் ஒலிகள், அவைகளை விளக்கும் முறை, மொழியில் காணப்படும் இலக்கண அமைப்பு' அதனை விளக்கும் முறை, மொழியை வகைப்படுத்தல் முதலியன பற்றிய கருத்துக்களைக் காணலாம்.

மொழி பயன்படுத்தலில் உள்ளத்தின் ஈடுபாடு அதிகமென்றும் மனம் சம்மந்தப்பட்ட அம்சங்கள் மொழி பயன் படுத்தலில் தாக்கம் ஏற்படுத்துகின்றன எனவும் கூறுவார் சபீர். 'மொழி' என்பது எண்ணங்கள், உணர்ச்சிகள், இச்சைகள் ஆகியனவற்றைப் பிறருக்கு தெரியப்படுத்த பயன்படும் ஒரு வழிமுறை; அம்முறை மனிதனால் தன்னிச்சையோடு உருவாக்கப்பட்டு உபயோகிக்கப்படும் குறிகளின் தொகுப்பால் ஆனது. மொழியும், மொழியில் காணப்படும் சில கூறுகளும் பொருள் கொண்டவை. ஆனால் மொழியின் பொருளைக் குறிப்பதும், 'மொழியின் பொருள் மனித மனத்தில் (மூளையில்) சில பகுதியில் நிலை பெற்றிருக்கிறது' என கூறுவதும் எளிதான செயல்கள் அல்ல. பேச்சுக்கும், அது காட்டும் பொருள்களுக்கும் இடையே தொடர்பு காணப்படும். அத்தொடர்பு வெளிப்படையானதல்ல. எண்ணங்களும் (மொழிக்கூறின் பொருள் அம்சம் பேச்சும் வெவ்வேறானவை. எண்ணங்கள் பேச்சின் மூலம் வெளிப்படுவன என கொண்டபோதிலும், அவை தனி நிலை கொண்டவை பேச்சை வெளிப்படுத்தாமல் ஒருவர் சில எண்ணங்களை நினைத்துப் பார்க்க முடியும். எண்ணங்களை நினைக்கும் போதே பேச்சு வெளிப்படாமலிருந்த போதிலும் சில சமயங்களில்) ஒரு எண்ணத்தை நினைப்பதற்கு மொழி தேவைப் படுகிறது. மொழியைப் பயன்படுத்தும் போது (பேசும்போது) வெளிப்படை

யாகத் தோன்றுவது ஒலிகளும், ஒலித் தொடர்களுமேயன்றி எண்ணங்களல்ல. மொழியை ஆராயும் போதும், விவரிக்கும் போதும்தான் எந்த மொழிக்கூறுகள் எந்த எண்ணங்களுடன் தொடர்பு கொண்டிக்கின்றன என்பதை வெளிப்படையாக விவரிக்கிறோம். மேற்கூறிய சபீரின் கருத்துகளை மொழிபற்றிய கருத்துகள் என பொதுவாகக் கூறலாம்.

பின்வரும் கருத்துகள் ஒரு மொழி எவ்விதம் அம்மொழி நிலவும் கலாச்சாரத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை விளக்க சபீர் ஏற்றுக் கொண்ட கருத்துக்கள். மொழியின் புறத்தொடர்பை (மொழியானது கலாச்சாரம், இனம் என்பவைகளோடு கொண்ட தொடர்பு) மொழி, கலாச்சாரம், மொழி பேசுவோரின் இனம் ஆகியவற்றை ஒப்பிடும்போது அறிந்து கொள்ளலாம். ஒரு சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிலைபேற்றைப் பெற்ற செயல்கள், நடத்தைகள், எண்ணங்கள் முதலியனவற்றின் கூட்டமைப்பை 'கலாச்சாரம்' எனலாம். இத்தகைய அமைப்பு ஒரு கலாச்சாரத்தின் கீழ்வரும் மக்களின் வாழ்வில் ஒன்றியதாகவும், அவர்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துவதாகவும் அமையும். கலாச்சார அமைப்பை, கலாச்சார கூறுகளை மக்களின் செயல்கள் மூலம் குறிப்பாக அறியமுடியும். மொழி, மக்களின் சமுதாய சூழ்நிலை, எண்ணங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பிரதி பலிக்கும் அமைப்பு. ஒரு மொழியின் சொல்லகராதியை நோக்குவதன் மூலம், அம்மொழி பேசுவோரின் கலாச்சார அமைப்பில் முக்கியத்துவம் பெறும் பொருள்கள், செயல்கள் ஆகியனவற்றை அறியலாம். எஸ்கிமோ மொழியில் 'பனி'யைக் குறிக்க பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதிலிருந்து எஸ்கிமோ கலாச்சார சூழ்நிலையில் 'பனி' ஒரு முக்கியமான பொருள் என்பதை உணரலாம். ஒரு மொழியில், அம்மொழி நிலைபெறும் இடம், சமுதாய சூழ்நிலை, அம்மொழி மக்களின் செயல்கள் இவற்றைப் பிரதிபலிக்கும் பலவகையான சொற்கள் காணப்படும்.

சபீரும், ஊர்ஃப் என்பாரும் அவர்களது அமெரிக்க இந்திய மொழியாராய்ச்சியின் அடிப்படையில் மொழிகளை, அவைகளைப் பேசுவோரின் சிந்னைகளை நெறிப்படுத்தும் கருவி என விளக்குவர்.

வெவ்வேறு மொழி பேசுவோரின் சிந்தனைத்திறன் வெவ்வேறாக இருக்கும் என்றும், வெவ்வேறு மொழிகளைப் பேசுவோர், வெளியுலகப் பொருள்களை வெவ்வேறான கோணங்களில் நோக்குவர் என்றும், அவ்வித 'நோக்கக் கோணங்களை' மொழிதான் நிர்ணயிக்கிறது எனவும் கூறுவர். வெளியுலகப் பொருள்கள், நிகழ்ச்சிகள் எல்லா மனிதர் கண்ணிலும் ஒரே வகையாகத் தென்பட்டாலும் அவைகளை எண்ணக்கூறுகளாக மாற்றி, மொழிக்கூறுகளாக ஆக்கும் விதத்(எண்ணங்களை ஒலித்தொடர்புகளுடன் இணைத்தல்)தில் ஒருமொழி பேசுவோர் இன்னொரு மொழி பேசுவோரிடமிருந்து வேறுபடுவர். எண்ண வேற்றுமைகள் மொழியின் அடிப்படையில்தான் எழுகின்றன. 'ஹோபி' என்ற மொழியில் "காலம்" என்ற எண்ணக்கூறு "வெளிப்படுத்தப்பட்ட காலம்", "வெளிப்படுத்தப்படாத காலம்" என இருவகையில் நிலைபெறும். ஐரோப்பிய மொழிகளில் "காலம்" என்ற கூறு "இறந்தகாலம்", "நிகழ்காலம்", 'எதிர்காலம்" என மூன்று வகையில் நிலை பெறும். ஆகவே ஹோபி மொழி பேசுவோர் உலக நிகழ்ச்சிகளை, செயல்களை இரண்டு வகையாகவும், ஐரோப்பிய மொழி பேசுவோர் மூன்று வகையாகவும் பிரிக்க முற்படுவர். இதிலிருந்து இவ்விரண்டு மொழிபேசுவோரின் எண்ணத்திறனும், நோக்கக் கோணங்களும் வேறுபட்டவை என்பதை உணரலாம்.

பேச்சில் காணப்படும் ஒலிக்கூறுகளைப்பற்றிய தெளிவான கருத்துக்களையும், அவைகளை விவரிக்கும் முறைகளையும் எடுத்துரைத்த பெருமை சபீருக்கு உண்டு. அத்தகைய கருத்துகள் பல பின்வருமாறு:

பேச்சு என்பது ஒலிகள், அடிப்படை மொழிக்கூறுகள் ஏனையமொழிக்கூறுகள், அவற்றின் அமைப்பு ஆகியவைகளைத் தாங்கி நிற்கும் தன்மை கொண்டது. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு குறிப்பிட்ட ஒலிகளும், ஒலித்தொடர் அமைப்பும் உண்டு. ஒலிகள் இருவகைப்படும். 1. சாதாரணஒலிகள் 2. பயன்ஒலிகள். சாதாரண ஒலிகளை உச்சரிப்பு வகைகளால் விளக்க முடியும். பயன்ஒலிகளை, 'சொற்களை வேறுபடுத்தும் தன்மையன' என விளக்கலாம். பயன் ஒலிகளை ஒரு மொழியின் முக்கிய ஒலிகளாகவும், மொழி

பேசுவோரின் மனதில் நிலைபெறுவனவாகவும் கருதலாம். சாதாரண ஒலிகளில் சில சூழ்நிலைகளால் எழுவனவாயிருக்கும். இவைகளை 'சூழ்நிலை சார் சாதாரண ஒலிகள்' எனலாம். 'பையூட்'' என்ற மொழியின் ஒலி வகைகளைக் குறிப்பிடுகையில் p, β, mp p°, p என்ற ஒலிகளை சூழ்நிலை சார்ந்த சாதாரண ஒலிகள் எனக் குறிப்பிடுவர். இத்தகைய சூழ்நிலை ஒலிகளையே பின்னர் ''மாற்றொலி'' allophone) என்ற தலைப்பில் கொண்டு வருவார் ப்ளூம்ஃபீல்டு என்பார். ஆங்கிலத்தில் bad, bat என்ற சொற்களில் காணப்படும் இறுதி ஒலிகளை, அவைகளின் 'சொல் வேறுபடுத்தும் தன்மையின் அடிப்படையில் பயன்ஒலிகள்'' என்பார் சபீர்.

அடிப்படை மொழிக்கூறுகள், இலக்கணக்கூறுகள், சொற்கள், வாக்கியங்கள் முதலியனவற்றை பொருள் கொண்ட மொழிக் கூறுகள் எனலாம். அடிப்படை மொழிக்கூறுகளும், இலக்கணக் கூறுகளும் 'உருபன்' போன்றவை. மொழிக்கூறுகளின் அமைப்பு இலக்கணக் கூறுகளை வெளிப்படுத்துவனவாயிருக்கும்; எந்த வகையான இலக்கண உருவாக்க முறையால் மொழிக்கூறுகள் உரு வாக்கப் பட்டன என்பதையும் காட்டி நிற்கும். மொழியை விளக்கும் போது அதில் காணப்படும் ''சொல் வேறுபடுத்தும் தன்மை கொண்ட'' பயன் ஒலிகளையும், ஒலித்தொடர்களால் ஆன, பொருள் கொண்ட, இலக்கணத்தில் அங்கம் வகிக்கும், மொழிக்கூறுகளையும் விளக்க வேண்டும். ஒலிகளும், ஒலித் தொடர்களும் பொருள்களைக் காட்டும் போதும், இலக்கணத்தில் பங்குபெறும் போதும் மொழிக்கூறாக ஆகின்றன. உதாரணமாக wh- என்ற ஒலியைத் தனியாக எடுத்தால் அதை மொழிக்கூறு என கருதுவதில்லை. ஆனால் when என்ற சொல்லில் வரும் ஒலியான wh-ஐ (இலக்கண ரீதியில் முக்கியத்துவம் அடைவதால்) ஒரு மொழிக்கூறு என்கிறோம்.

பொருள் குறிக்கும் மொழிக்கூறுகள் மூன்று வகைப்படும். அவையாவன 1. வாக்கியம் 2. சொற்கள் 3. அடிப்படை பொருள்சார் மொழிக்கூறு. வாக்கியங்கள், நிகழ்ச்சிகளை விளக்க பயன்படுகின்றன. வாக்கியங்கள், சொற்களால் உருவாக்கப்

படும். தனித்தியங்கும் தன்மை கொண்ட, பொருள் கொண்ட மொழிக்கூறுகள் 'சொற்கள்' எனப்படும். தனித்தனியாக எண்ணங்களைக் குறிக்கும் இலக்கணக்கூறுகளை எல்லாம் அடிப்படை பொருள்சார் மொழிக்கூறு எனலாம். அவை தனிக்கூறுகளாகவோ சார்புக் கூறுகளாகவோ இருக்கும். எண்ணங்களை விளக்கப் பயன்படுதலே மொழியின் முக்கிய தன்மையாகிறது. மொழிக்கூறுகளின் அமைப்பை விளக்கும் வகையில் சில ''குறியீடுகளை'' சபீர் பயன்படுத்துவார். அக்குறியீடுகள் சீர்திருத்தப்பட்டவை அல்ல. பெரிய எழுத்துக்கள் 'A', சிறு எழுத்துக்கள் 'a', கூட்டல் குறி '+', அடைப்புக்குறி '( )', ஆகியவை சபீரால் உபயோகிக்கப்பட்ட குறியீடுகள். பெரிய எழுத்துக்கள் அடிப்படை மொழிக்கூறுகளைக் குறிக்கும்; சிறு எழுத்துக்கள் அடைக்கூறுகளைக் குறிக்கும்; கூட்டல் குறி, தொடர் நிலையைக்குறிக்கும்; அடைப்புக்குறி, மொழிக்கூறுகள் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் வரும் தன்மையைக் குறிக்கும்.

உம். பச்சைக்கிளி (B) A = (பச்சை) கிளி
பச்சை தொப்பிக்காரனை (B, A (a) (b) = (பச்சை) தொப்பி (காரன்) (ஐ)

அடிப்படை மொழிக்கூறுகளின் முன்னரும், பின்னரும் வேறு மொழிக்கூறுகள் நிற்கலாம். ஆகவே மொழிக்கூறுத்தொடரில், மொழிக்கூறுகள் இடதுபுறமிருந்து தொடங்கி, வலது புறம் முடியும் வகையில் தொடர்நிலையில் நிற்கும் என கூறமுடியாது

நம் மனதில் தோன்றுவனவற்றை எல்லாம் பிறருக்கு, நாம் மொழியை உபயோகித்து, தெரிவிக்கமுடியும். எல்லா மொழிகளும் தம் அமைப்பில் முழுமையானவை. மொழியின் ஒலித்தொடர்கள் தமக்கென 'பெரு உருவை'யும் ஏற்படுத்தி இயங்கும். அடிப்படை மொழிக்கூறுகள் ஒரு குறுகிய, ஆனால் தனித்தன்மை கொண்ட எண்ணத்தைக் குறிக்கும். அடிப்படை மொழிக்கூறிலிருந்து பெருமொழிக்கூறுகளை உருவாக்கலாம். பெருமொழிக்கூறு உருவாக்கத்தில் சில 'இலக்கணச்செயல்கள்'' பங்கெடுக்கின்றன. மொழிக்கூறுகளை (குறிப்பாக அடிப்படை மொழிக்கூறுகளை) தொடர்நிலையில் நிறுத்தல், அடைக்கூறுகளை

இணைத்தல், மொழிக்கூறுகளின் அக ஒலியமைப்பை மாற்றல், கூறுகளை இரட்டித்தல், மொழிக்கூறுகளின் அழுத்த உச்சரிப்பில் மாற்றம் ஏற்படுத்துதல் ஆகியவை இலக்கண அமைப்பில் தாக்கம் செய்வதால் அவைகளை "இலக்கணச் செயல்கள்" எனலாம்.

மொழிக்கூறுகளை தொடர்நிலையில் நிறுத்தி பெருமொழிக் கூறுகளை உருவாக்கலாம். தொடர்நிலையில் நிறுத்தப்படும் போது சில மொழிக்கூறுகள் சில குறிப்பிட்ட இடங்களில்தான் நிற்கும். ஒரு குறிப்பிட்ட மொழிக்கூறு நிற்கும் இடத்தில் மாற்றம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் பெருமொழிக்கூறு ஏற்றுக் கொள்ளப்படாத வகையில் இருக்கவும் கூடும். மொழிக்கூறுகளின் இடமாற்றம் பெருமொழிக்கூறுகளின் பொருள் மாற்றம் ஏற்படவும் காரணமாயிருக்கும். (Rama saw Sita : Sita saw Rama) இரண்டு அடிப்படை பொருள் கொண்ட மொழிக்கூறுகளை இணைப்பதன் மூலம் கூட்டுச் சொல் உருவாகும். இதன் அடிப்படை இலக்கணச் செயலை "கூட்டுச்சொல் உருவாக்கல்" என்கிறோம். (பச்சைக் கிளி). அடைக்கூறுகளான முன்னடை, பின்னடைக்கூறுகளை வேறு மொழிக்கூறுகளோடு இணைத்தலை "அடை இணைத்தல்" என்கிறோம். (பற-வை-கள்). ஒரு மொழிக்கூறின் அக ஒலி யமைப்பை மாற்றி அதன் மூலம் வேறு மொழிக்கூறை உருவாக்க லாம். அத்தகைய ஒலியமைப்பு மாற்றலாகிய செயலை "ஒலி யமைப்பு மாற்றல்" எனலாம். (sing – sang – sung) மொழிக் கூறுகளை இரட்டித்தலின் மூலம் வேறு மொழிக்கூறுகளை உரு வாக்கலாம். இத்தகைய செயலை "சொல் இரட்டித்தல்" என லாம் (pooh pooh, ding dong, ஒவ்வொரு, பல பல, சில சில). ஒரு மொழிக்கூறின் அழுத்த உச்சரிப்பை மாற்றுவதன் மூலமும் புது மொழிக்கூறுகளை உருவாக்க முடியும். ஆங்கிலத்தில் import என்ற சொல்லின் அழுத்த உச்சரிப்பு முதல் அசையில் தோன்றி னால் அது பெயர்ச்சொல்லாகவும், அழுத்த உச்சரிப்பு இரண்டாம் அசையில் தோன்றினால் அது வினைச்சொல்லாகவும் கருதப்படும். மேற்கூறிய "இலக்கண செயல்கள்" எல்லாம் சொல்லோடு தொடர்புடையன. வாக்கியங்களில் பலவகையான இலக்கண

செயல்கள் தோன்றுவதை சபீர் தெளிவாக விளக்குவார். "The Farmer kills the duckling" என்ற வாக்கியத்துக்கு அவர் கொடுக்கும் விளக்கம் மேற்கூறியதை விளக்கும்.

| | |
|---|---|
| அடிப்படை மொழிக்கூறு : | Farm(N) kill(V) duck N) |
| உருவாக்க மொழிக்கூறு : | -er (Farmer) ling (duck-ling) |
| தொடர்பு காட்டும் மொழிக் கூறும் இலக்கண செயல் களும்: | the<br>மொழிக்கூறுத்தொடர்ச்சி(subject + verb + object<br>எழுவாய்த்தன்மை (farmer-before) verb)<br>பயனிலைத்தன்மை (duckling-after verb)<br>பெயரின் ஒருமைத்தன்மை(farmer, duckling)<br>காலம் காட்டும் தன்மை (kill-s) |

மொழிக்கூறு காட்டும் "எண்ணக் கூறுகளை" நான்கு வகையாகப் பிரிப்பார் சபீர். அவையாவன 1. உருப்படியான எண்ணக் கூறு 2. தொடர்பு குறிக்கும் கலப்பில்லா எண்ணங்கள் 3. உருவாக்க எண்ணங்கள் 4. உருப்படியான தொடர்பு குறி எண்ணங்கள். ஒரு மொழிக்கூறோடு தொடர்புடைய எண்ணங்கள் (மொழிக்கூறு காட்டும் எண்ணங்கள்) வெளியுலக, ஸ்தூலமான பொருள்களோடோ, செயல்களோடோ, நிகழ்ச்சிகளோடோ, தொடர்புள்ளவையாக இருக்குமானால் அத்தகைய எண்ணங்களை "உருப்படியான எண்ணம்" எனலாம். (மரம், ஆடு, பாடு, இரு, கூட்டம் ஆகியன உருப்படியான எண்ணத்தைக் குறிப்பன), மொழிக்கூறுகளை தொடர்புபடுத்த உபயோகமாகும் சொற்கள், மொழிக்கூறுகள் ஆகியன "தொடர்பு குறிக்கும் கலப்பற்ற எண்ணம் காட்டும் கூறுகள்" எனப்படும். (உள்ளே, மேலே என்ற சொற்கள் அத்தகையன). ஒரு மொழிக் கூறிலிருந்து,

இலக்கண ரீதியில் வேறுபட்ட இன்னொரு மொழிக் கூறை உருவாக்கும் வகையில் முதல் மொழிக்கூறோடு சேர்க்கப்படும் ''அடைக் கூறுகள்'' உருவாக்க எண்ணத்தை குறிப்பனவாகும். – காரன் (பால் காரன்) – தலை (விடுதலை) முதலியன அத்தகைய கூறுகள். ஒரு மொழிக்கூறோடு அடையாகச் சேரும் சில மொழிக்கூறுகள் அம் மொழிக்கூறை வேறொரு மொழிக்கூறோடு இணைக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டால் அவற்றை உருப்படியான, தொடர்பு குறிக்கும் எண்ணங்களைக் காட்டும் கூறு என்கிறோம். (வேற்றுமை அடைகள் இத்தகைய வகையைச் சார்ந்தன).

மேற்கூறிய எண்ணவகைகளையும், அவைகளைக் காட்டும் தன்மை மொழிக்கூறுகளுக்கு உண்டு என்பதனையும் ஏற்றுக் கொண்டு, பெரு மொழிக் கூறுகளை சிதைத்து, எவ்விதம் இலக்கண ரீதியில் எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவார் சபீர். சபீர் காட்டும் சிதைப்பு விவரணை மரபு இலக்கணத்தார் விவரணையிலிருந்து வேறுபட்டது. மரபு இலக்கணத்தார் மொழிவிவரணையில் மொழியின் பொதுத் தன்மையை விளக்க முயல்வர். அதோடு மட்டுமல்லாமல் மொழியை விளக்கும் முன்னரே விளக்கத்திற்காக ஒரு கொள்கையைத் தேர்ந்தெடுத்து அதன் மூலம் விளக்குவர். சபீர் ''தனி இலக்கணம்'' படைப்பதையும் மரபு இலக்கண கொள்கைளை சாராதிருப்பதையும் தமது கொள்கையாகக் கொண்டார்.

அவர் குறிப்பிட்ட எண்ண வகைகள், இலக்கணக்கூறுகளை வைத்து மொழிகளை வகைப்படுத்துவதையும் விளக்கினார். உலக மொழிகளை அவற்றின் பிறப்பின் அடிப்படையிலும், அமைப்பின் அடிப்படையிலும் விளக்கலாம். மொழிவளர்ச்சியை ஆராய்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழி இயலறிஞர்கள் இவ்விரண்டு வகைகளையும் விளக்கினர். அமைப்பு வகையில் மொழிகளை தனிக்கூறுமொழிகள் (isolated languages), ஒட்டமைப்பு மொழிகள் (agglutinative languages) கூட்டமைப்பு மொழிகள் (synthetic languages) என பிரிக்கலாம். சபீர், மொழிக்கூறின் அமைப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட மொழிவகைப்

படுத்தலை ஏற்றுக்கொள்ளவில்லை. மொழிகளின் பலவகைத் தன்மைகளையும் ஒன்றுபடுத்தி அத்தன்மைகளின் அடிப்படையில் மொழிகளை வகைப்படுத்துவார். மொழிக்கூறுகள் காட்டும் எண்ணங்கள், மொழிக்கூறுகளில் வெளிப்படும் இலக்கணச் செயல்கள் ஆகியவைகளின் ஒற்றுமை, வேற்றுமைகளை வைத்து சபீர் நான்கு வகை மொழிகளை பிரித்தெடுப்பார். அவையாவன 1. தனியான, கலப்பற்ற தொடர்பு மொழிக்கூறு மொழிகள் 2 கூட்டான கலப்பற்ற மொழிக்கூறுகளைக் கொண்ட மொழிகள் 3. தனியான, கலப்புள்ள தொடர்பு மொழிக்கூறுகளைக் கொண்ட மொழிகள் 4. கூட்டான, கலப்புள்ள தொடர்பு மொழிக்கூறுகள் கொண்ட மொழிகள். இவைகளை, மொழிக்கூறு இணையும் தன்மையைப் பொறுத்து, மீண்டும் மூன்று வகையில் பிரிப்பர். அவையாவன 1. தனிமொழி 2. ஒட்டுமொழி 3. கூட்டுமொழி. மொழியை வகைப்படுத்துதலில் ''எண்ண வகைகள்'', மொழிக்கூறுகளின் தன்மை, மொழிக்கூறுகள் வேறு கூறுகளோடு இணையும் தன்மை ஆகியனவற்றை ஏற்றுக்கொண்டு ''பல்தன்மை'' அடிப்படையிலான மொழிவகைப்படுத்தலை விளக்குவார் சபீர். அமெரிக்க இந்திய மொழிகளை, அமைப்பு வகையில் அவர் வகைப்படுத்திய விதம் பின்னர் மிகவும் பிரசித்தி பெற்றது.

மேற்கூறிய மொழிபற்றிய, மொழி அமைப்பு பற்றிய, ஒப்பீடு பற்றிய கருத்துகளையன்றி மொழிவரலாறு பற்றிய சில கருத்துகளையும் சபீர் கூறிச் சென்றார். மொழி காலத்தின் தாக்கத்தால் மாற்றமடையும். மொழிமாற்றம் (மொழிக்கூறு மாற்றம்) இயந்திர இயக்கம் போன்றதல்ல. மொழிக்கூறு மாற்றத்தில் ''மனம்'' முக்கிய பங்கை வகிக்கிறது. மொழிக்கூறுகளை பயன் படுத்துவதில் மொழி பேசுவோருக்கு சிக்கல்கள், திணறல்கள் ஏற்படும். இத்தகைய திணறல்கள் மொழி, மாற்றம் அடையும் நிலையில் நிற்பதை உணர்த்தும். ஒலி மாற்றங்கள் மனத்தின் ஈடுபாட்டாலும், சில பயன்களின் அடிப்படையினாலும் எழும். மேலும் ஒலிமாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட திசையில்தான் செல்லும். ஒலி மாற்றங்கள் மூன்று வகைப்படும். 1. அழுத்த உச்சரிப்பு நெடில் உச்சரிப்பு வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் ஒலிமாற்றம்.

2. ஒழுங்கற்ற அமைப்பை (வேறு சில ஒலிமாற்றங்களினால் எழுவனவாயிருக்கும்) சரி செய்யும் வகையில் அமைந்த ஒலி மாற்றம் 3. ஒலிமாற்றத்தால் ஏற்படும் ஒழுங்கற்ற உருபன் அமைப்பை சரி செய்யும் வகையில் ஏற்படும் ஒலிமாற்றம். பிற மொழிகளோடு ஒரு மொழி தொடர்பு கொள்ளுவதாலும் மொழியில் மாற்றங்கள் ஏற்படலாம். சபீர் கூறிச்சென்ற மொழிக் கருத்து களும், மொழி விவரணை கருத்துகளும், மொழி, கலாச்சாரம் என்பனவற்றின் தொடர்பு சம்பந்தமான கருத்துகளும் அமெரிக்க மொழி இயல் வளர்ச்சியில் நிலையான அடிப்படை கருத்துகளா யின என்பதில் ஐயமில்லை.

ப்ளும் ஃபீல்டு (1887-1949)

மொழியைப் பற்றிய கருத்துகளையும், மொழி விவரணை பற்றிய கருத்துகளையும் தெளிவாக விளக்கியவர்களில் ப்ளும் ஃபீல்டும் ஒருவர். அவருடைய புத்தகமான "Language" (மொழி : 19:3) இன்றும் அமெரிக்க அமைப்பு மொழியியலாரால் ஒரு 'மறைநூல்' என கருதப்படுகிறது. "அமைப்பு மொழியியல்" வரலாற்று மொழியியலை பின்னணியாகக் கொண்ட காரணத்தால் நாம் ப்ளும்ஃபீல்டின் புத்தகத்தில் மொழி வரலாறு சம்பந்தமான கருத்துகளும் இடம் பெறுவதைக் காண முடியும். மொழி என்பது ஒருவகைச் செயல்; ஆகவே மொழி விவரணை என்பது செயல் விவரணையே. மொழியில் ஒலி, ஒலியமைப்பு, சொல், சொல் லமைப்பு, சொற்றொடர், வாக்கியம், அவைகளின் அமைப்பு ஆகியன காணப்படும். அவைகளை முறையே ஒலியியல், சொல் லியல், சொல் தொடர் இயல் என்ற தலைப்புகளின் கீழ் விவரிக்க வேண்டும். மொழிக்கூறுகளின் பொருள், சொல் தொகுதிகள் ஆகியனவற்றை 'அமைப்பு கெள்கைகள்" மூலம் விளக்க முடியாது. ஆகவே அவைகளை மொழி விவரணையில் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை. மேற்கூறிய கருத்துகள் ப்ளும்ஃபீல்டால் பர வலாக விளக்கப் பட்டவை. இங்கே நாம் அவர் கொண்டிருந்த, விளக்கிய மொழியைப் பற்றிய கருத்துகளையும், மொழி விவரணை பற்றிய கருத்துகளையும் விளக்க முயல்வோம்.

மொழிவிவரணை தனிநிலை பெற்றதாயும், விஞ்ஞான ரீதியில் அமைந்ததாகவும் இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார் ப்ளும்ஃபீல்ட். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரலாற்று மொழியியலார் மொழியை உயிருள்ள பொருள் என்றனர். உயிருள்ள பொருள்களைப் போன்று மொழியும் பிறந்து, வளர்ந்து, இனப்பெருக்கம் செய்கின்றது என்றனர். ஆகவே மொழி விவரணையில் ''உயிரியல்'' கொள்கைகளை பயன்படுத்தலாம் என்றனர். சபீர், ப்ளும்ஃபீல்டு போன்ற அறிஞர்கள் மொழிவிவரணைக்கு, வேறு துறைகளில் நிலவும் விவரணைக் கொள்கைகளை ஒருவர் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்பர். மேலும் மொழியை வேறு துறைப் பொருள்களோடு ஒப்புமைப் படுத்தி ஆராயாமல், அதற்கென தனிநிலை கொடுத்து, அதன் உள்ளமைப்பை ஆராய வேண்டும் என்றும், இத்தகைய தனிநிலை ஆராய்ச்சி மொழியின் கூறுகளையும், அவை கொண்டிருக்கும் தொடர்பையும் விளக்குமாறு அமைய வேண்டும் எனவும் விளக்குவார் ப்ளும்ஃபீல்டு.

மொழி விவரணை விஞ்ஞான ரீதியில் அமைய வேண்டும். மொழிவிவரணையில் மொழி காட்டும் ஸ்தூலமான செய்திகள் இடம் பெற வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழி விவரணையும் விஞ்ஞான ரீதியில் அமைந்ததென்றாலும் அது வரலாற்று விவரணை. ப்ளும்ஃபீல்டின் மொழி அமைப்பு விவரணை மொழியின் நிலைபேற்றை விளக்கும் தன்மை கொண்டது.

கண்ணுக்கு புலனாகுவனவற்றைத்தான் விஞ்ஞான ரீதியில் விளக்க முடியும். ப்ளும்ஃபீல்டு, மொழியை விஞ்ஞான ரீதியில் விளக்க முற்பட்ட காரணத்தால் அதை கண்ணுக்கு புலப்படும் ஒன்று என்றார். மொழியில் காணப்படும் மொழிக்கூறுகளும் அவைகளின் அமைப்பும், கண்ணுக்கு புலனாகுபவை.

மொழிக்கூறுகள் வெளிப்படையாகப் புலனாகுபவை என்பதை விளக்கத் தேவையில்லை. நாம் பேசும் போது அவைகளைக்

கேட்கிறோம்; நாம் எழுதும் போது அவைகளைப் பார்க்கிறோம். மொழிக்கூறுகளின் பொருள்கள் வெளிப்படையாக புலனாகுபவை அல்ல. தத்துவமேதைகள் மொழிக்கூறுகளின் பொருளை, மனதால் உணரவேண்டும் என்பர். இதைப் புறக்கணிக்கும் வகையில், மொழிக்கூறுகளின் பொருள்களும் வெளிப்படையாக ஒருவருக்கு புலனாகும் என்பார் ப்ளூம்ஃபீல்டு. வாட்சன் என்பார் காட்டிய "செய்கைக் கொள்கைகளை"ப் பின்பற்றி மொழிக்கூறுகளின் பொருளை விளக்குவார். எல்லாவித செயல்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் பின்னணியில் சில காரணங்களும், முன்னணியில் சில விளைவுகளும் தோன்றும்; ஆகவே எல்லா செயல்களையும், நிகழ்ச்சிகளையும் அவற்றோடு தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகளால் விளக்க முடியும் என்பார் வாட்சன். வெளியுலகப் பொருள்களின் தாக்கமும், ஒரு பிராணியின் உடலில் ஏற்படும் சலனங்களும் அப்பிராணியின் சில செயல்கள் ஏற்பட காரணமாகின்றன. இத்தகைய செயல்கள் பின்னர் வேறு சில செயல்களை விளைவுகளாகச் செய்யும். "மனம், எண்ணம், நினைத்தல் ஆகியன கண்ணுக்கு புலனாகாதவை; ஆகவே மாயத்தன்மை கொண்டவை" என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது. "நினைப்பு" என்ற செயலையும் காரண - விளைவு விவரணைக்கு உட்படுத்தமுடியும். அதை கண்ணுக்கு புலனாகும் "உடல் சலனங்களால்" விவரிக்கமுடியும். "நினைப்பு" என்பது வாயின் உள்ளே சப்தம் வெளிப்படாமல் பேசப்படும் பேச்சு. இத்தகைய கருத்துகளை வாட்சன் என்பார் கொண்டிருந்தார்.

மொழி என்பது பொருள் கொண்ட ஒன்று. மொழியில் பொருள் கொண்ட கூறுகள் காணப்படுகின்றன. மொழிக்கூறுகளின் பொருள்கள் மனதில் நிலை பெறுவதால் அவை வெளிப்படையாக தெரிவன அல்ல என்பார் சிலர். ப்ளூம்ஃபீல்டு மொழிக்கூறுகளின் பொருள்கள் வெளிப்படையானவை என்றும், அவைகளை அறிய வெளியுலகப் பொருள்கள், நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும் எனவும் வலியுறுத்துவார். இதைப் பின்வரும் கருத்துகளால் விளக்குவார்.

மொழி பேச்சால் வெளிப்படுகிறது. பேசும் போது மொழிக் கூற்றுத் தொடர்கள் தோன்றுகின்றன. பேசுதல் ஒரு செயலாத லால் அதன் முன்னால் சில காரணங்களும், அதன் பின்னால் சில விளைவுகளும் தோன்றும். பேச்சில் தோன்றும் மொழிக்கூறுத் தொடர்களும் சில காரண-விளைவுகளின் இடையே நிற்கும். ஒரு மொழிக்கூறுத் தொடரின் பொருள் என்பது அத்தொடர் உருவாகக் காரணமாயிருந்த ஊக்கச்சூழலும், அத்தொடர் கேட்போரிடத்தில் ஏற்படுத்தும் விளைவுமே. மொழிக்கூறுத் தொடரின் ஊக்கச்சூழல், வெளியுலகப் பொருள்கள், நிகழ்ச்சிகள், பேசுவோரின் உடலில் ஏற்படும் சலனங்கள் ஆகியனவற்றால் ஆனது. மொழிக் கூறுத்தொடர்கள் ஏற்படுத்தும் விளைவுகள் அத்தொடர் கேட்போரிடத்தில் ஏற்படுத்தும் சலனங்களால் ஆனது. ஆகவே ஊக்கச்சூழலும், விளைவும் கண்ணுக்கு புலனாகு பவை. மொழிக்கூறின் பொருள்கள் (ஊக்கச்சூழல் மற்றும் விளைவு கள்) கண்ணுக்கு புலனாகின்ற காரணத்தால், அவைகளையும் விஞ்ஞான விவரணைக்கு உட்படுத்த முடியும். வெளியுலகப் பொருள் களையும், உடல் சலனங்களையும் தெளிவாக விளக்கும் வகையில் நமது விஞ்ஞான அறிவு வளர்ச்சியடையவில்லை என்ற காரணத் தைக் காட்டி, பொருளை விளக்குவதை தள்ளி வைத்துவிட்டு, மொழியின் இலக்கண அமைப்பு, ஒலியமைப்பு ஆகியனவற்றை விளக்குவதை தமது முதற்கடனாகக் கொண்டார் ப்ளூம்ஃபீல்டு.

மொழி, குறிகளைக் கொண்ட ஓர் அமைப்பு. குறிகளின் அமைப்பை தனியாக, குறிகாட்டும் பொருள்களை எடுத்துக்கொள் ளாமல், விளக்க முடியும், "மொழி" விவரணைக்காக பேச்சுமொழி யையும், பேச்சுக்கூறுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்; ஏனென்றால் அவை கண்ணுக்கு புலனாகுபவை. மேற்கூறிய ப்ளூம்ஃபீல்டின் கருத்துகள் சசூரின் கருத்துகளிலிருந்து வேறுபட் டவை. சசூர் "பேச்சையும்," அதன் அடிப்படையான 'மொழி' யையும் வேறுபடுத்திய போதிலும், விவரணைக்காக "மொழி யையே" (மனதில் நிலைபெற்றது) எடுத்துக் கொள்வார். ப்ளூம்ஃபீல்டு "மனம்" என்ற ஒன்றையும், "மனதில் மொழி நிலை பெற்றிருக்கிறது" என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்வ தில்லை.

பேச்சுமொழி ஒருவகை செயல். அதற்கு எழுத்து வடிவமும் கொடுக்கலாம். பேச்சுமொழி, சில ஊக்கச்சூழலால் ஏற்படும் அது சில விளைவுகளை கேட்போரிடத்தில் ஏற்படுத்தும். பேச்சில் தோன்றும் கூறுகள், சில ஊக்கச்சூழலோடும், விளைவுகளோடும் இணைக்கப் படுவதால் ''பொருள் கொண்டவை'' ஆகின்றன. ஒரு மொழிக்கூறின் பொருள் என்பது அம்மொழிக்கூறோடு தொடர்பு படுத்தப்பட்ட ஊக்கச்சூழலும், விளைவுமே. இத்தகைய பேச்சுக்கூறு - பொருள் விளக்கத்தை காரண - காரிய விளக்கம் எனலாம். இவ்விளக்கம் மொழிக்கூறு - எண்ண விளக்கத்தி லிருந்து வேறுபட்டது. மொழிக்கூறு - எண்ண விளக்கத்தை 'மனநிலை விளக்கம்' எனலாம். இவ்விளக்கம் ஒரு மொழிக் கூறின் பொருளை கண்ணுக்கு புலப்படாத தன்மை கொண்ட எண்ணம், விருப்பம், உணர்ச்சி என்பவைகளோடு தொடர்பு படுத்தும். எனவே இவ்விளக்கம் விஞ்ஞான ரீதியில் அமைந்த தல்ல. காரண - காரிய விளக்கம் பேச்சுக்கூறுகளின் பொருளை, உடல் சலனங்களோடு (சூழ்நிலை - விளைவு) தொடர்பு படுத்துவ தால், அதை ''உடல் சலன விளக்கம்'' எனவும் அழைக்கலாம். பேச்சுக் கூறுகளின் பொருளை விளக்க அப்பேச்சுக்கூறுகளோடு தொடர்புடைய மூன்று வகையான உடல் சலனங்களை விளக்க வேண்டும். அவையாவன 1. பெருஞ்சலனங்கள் (பசியினால் வயிற்றில் ஏற்படும் சலனம், தலைவலியால் தலையில் ஏற்படும் சலனம் முதலியன) 2. சிறு சலனங்கள் (தசை சுருக்கங்கள், சுரப்பிகள் நீர் சுரப்பது, கண்களில் பிற பொருள்கள் ஏற்படுத்தும் தாக்கம் முதலியன) 3. வாயுறுப்புகள் சப்தம் செய்யாமல் அசைதல். மேற்கூறிய கருத்துகள் மொழிக்கூறுகளின் பொருளை விளக்க ப்ளும்ஃபீல்டு ஏற்றுக் கொண்ட கருத்துகள்.

ஒரே வகையான பேச்சு முறைகளைக் கையாளும் மக்கள் ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இரண்டு பேச்சு வகைகள் செய்தி பரிமாற்றம் ஏற்படா வகையில் செயலாற்றினால் அவை இரண்டும் வேறுபட்ட மொழிகள் ஆகும். இரண்டு பேச்சு வகைகள் குறைந்த அளவு செய்திபரிமாற்றம் ஏற்படும் வகையில் செயலாற் றினால் அவைகள் கிளை மொழிகள் ஆகும். ஒரே வகையான

பேச்சு முறைகளை கையாளும் மக்களின் பேச்சிலும் வேறுபாடுகள் காணப்படும். இத்தகைய பேச்சு வித்தியாசங்கள் மொழிபேசுவோரின் இடத்தாலும், குடும்பத்தாலும், சமூக நிலையாலும், எழுத்தறிவாலும் நிர்ணயிக்கப்படும்.

பேச்சில் பேச்சுக் கூறுகள் காணப்படும். பேச்சுக் கூறுகளையும், அவை காட்டும் அமைப்புகளையும் தனியாக (அவற்றின் பொருளோடு தொடர்பு படுத்தாமல்) விளக்கமுடியும். பேச்சுக் கூறுகளில் ஒலியும், ஒலியமைப்பும் காணப்படும். அவற்றை ''ஒலியியலிலும், ஒலியனியலிலும்'' விளக்கவேண்டும். பேச்சில் பொருள் கொண்ட கூறுகளான உருபன், சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியன காணப்படும். உருபன், சொல் ஆகியவைகளையும், அவற்றின் அமைப்பையும், ''சொல்லியலில்'' விளக்க வேண்டும். சொற்றொடர், வாக்கியம், அவற்றின் அமைப்பு முதலியனவைகளை ''சொல் தொடர் இயலில்'' விளக்க வேண்டும் சொல்லியலும், சொல் தொடர் இயலும் ''இலக்கண இயலின்'' அங்கமாகும். பேச்சில் காணப்படும் மேற்கூறிய கூறுகளையும் அவைகளை விளக்கும் முறைகளையும் தெளிவாக எடுத்துரைத்த பெருமை ப்ளும்ஃபீல்டைச்சாரும்.

### ஒலியியல்

பேச்சும், பேச்சுக் கூறுகளும் ஒலித்தொடர்களால் ஆனவை. ஒலித்தொடர்களே பொருள் கொண்ட பேச்சுக் கூறுகளின் உருவமைப்பை உருவாக்குகின்றன. ஒலித்தொடர்கள் மொழிக்கு மொழி வேறுபட்டு காணப்படும். பேசும் போது காதில் விழுகின்ற ஒலிகளை எல்லாம் ''ஒலிகள்'' என பொதுவாக அழைத்தாலும் சில ஒலிகளே மொழியின் அமைப்பில் பங்கு பெறுகின்றன. ஆகவே மொழியில் நாம் இரண்டு வகை ஒலிகளைக் காணலாம். அவை யாவன 1. முக்கியத்துவம் பெற்ற ஒலிகள் 2. முக்கியத்துவம் பெறாத ஒலிகள். முக்கிய ஒலிகளை ''ஒலியன்'' எனலாம்; அவை மொழியின் ஒலியமைப்பில் காணப்படும் சிறு கூறுகள். அவைகளை ''குறைவான ஒலி வேறுபாடு கொண்ட சொல்லிணை நிலை நிறுத்த சோதனை'' (minimal pair test) மூலம் அறிய

முடியும். வெவ்வெறு பொருள் கொண்ட இரண்டு சொற்களின் இடையே நிலவும் சொல் வேறுபாடு ஒரு குறிப்பிட்ட ஒலியினால் நிர்ணயிக்கப்படுகிறது என அறிந்து கொண்டால், நிர்ணயிக்கும் ஒலிகளை ''ஒலியன்கள்'' என அழைக்க முடியும். ஆங்கிலத்தின் pin என்ற சொல்லும், tin என்ற சொல்லும் பொருளால் வேறு பட்டவை. இவற்றின் வேறுபட்டை சொல் முதல் ஒலிகளான p, t என்பவை நிர்ணயிக்கின்றன. ஆகவே p யும் t யும் ஒலியன்கள். ஒற்றை ஒலியால் சொல் வேறுபாடு நிர்ணயிக்கப்பட்டால், நிர்ண யிக்கும் ஒலிகள் ஒலியன்கள் ஆகும் (pin : tin <p : t> pin : pit <n : t) pin : pen <i : e>) வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு ஒலியன்களைக் காணலாம். மொழியின் முக்கிய ஒலியான ஒலிய னைக் குறிக்க, இரண்டு சரிவான கோடுகளை குறியீடாக பயன் படுத்துவர் ப்ளூம்ஃபீல்டும், அவரைச் சார்ந்தவர்களும். ஒலியன் கள் சரிவான கோடுகளின் உள்ளே நிறுத்தப்படும் (/p/).

ஒலியன்கள் மூன்று வகைப்படும். அவையாவன 1. தனி ஒலியன் 2. கூட்டு ஒலியன் 3. இரண்டாம் தர ஒலியன். பிரிந்து நிற்கும் முக்கிய உயிர், மெய் ஒலிகள் தனி ஒலியன்கள் (க், ச், ண், அ, இ, உ); இரண்டு முக்கிய ஒலிகள் சேர்ந்து ஒன்று பட்டு நிற்கும் ஒலித்தொடரை கூட்டு ஒலியன் எனலாம் (ஐ, ஔ). முக்கியத்துவம் வாய்ந்த அழுத்த, நாத உச்சரிப்புகள் இரண்டாம் தர ஒலியன்கள் எனப்படும்.

ஒலியன்களின் உடலாக நிலை பெறும் ஒலிகளை சப்த ஒலிகள், (வல்லின ஒலிகள், spirants, trills) இசை ஒலிகள் (nasal, lateral, vowel) மெய் ஒலிகள், உயிரொலிகள் என வகைப்படுத்துவார் ப்ளூம்ஃபீல்டு. இத்தகைய ஒலிகளை மேலும் பலவகைகளில் வகைப் படுத்த முடியும். ஒரு மொழியில் காணப்படும் ஒலியன் வகைகளும், எண்ணிக்கையும் இன்னொரு மொழியின் ஒலியன் வகை, எண்ணிக்கை ஆகியவற்றிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படும். ஆங்கிலத்தில் 9 உயிரொலிகளும், ஸ்பேனிஷ் மொழியில் 5 உயிரொலிகளும் டாகலாக், பிரஞ்சு, டர்க்கிஷ் என்ற மொழிகளில் முறையே 3, 15, 8 உயிரொலிகளும் இருப்பதை நாம் காணலாம்.

நீட்டல் உச்சரிப்பு, சப்த உச்சரிப்பு, நாத உச்சரிப்பு "இ" என்ற ஒலியைத் தழுவிய உச்சரிப்பு ஆகியன தனி ஒலியன்களை சிறிது வேறுபடுத்தும் வகையில் நிலைபெறுவதையும் காண முடியும். ஒரு மொழியில் காணப்படும் ஒலியன்கள், பலவகைப் பட்ட உச்சரிப்புகளின் தாக்கத்தால் வேறுபடுவதையும் (சிறிது மாற்றமடைவதையும்) காணலாம். ஒலியன்கள் தொடர் நிலையில் நின்று "அசை" களை உருவாக்கும். அசைகளில் சப்த ஏற்ற இறக்கங்களையும் சப்த சிகரத்தையும் காணமுடியும். சப்த சிகர ஒலியன்களை "அசை கரு ஒலி" எனவும் சப்த ஏற்ற இறக்க ஒலியன்களை "அசை கரு சார் ஒலி" எனவும் அழைக்கலாம். ஒலியன்கள் தொடர்நிலையில் நின்று கூட்டு ஒலியன்களை உண்டாக்கும். ஒலியன் தொடரை "ஒலியமைப்பு" எனலாம். ஒலியனமைப்புகள், மொழிக்கூறுகளான அசை, கூட்டொலியன், பொருள் குறி மொழிக்கூறுகள் ஆகியனவற்றில் காணப்படும்.

மொழியில் காணப்படும் எல்லா ஒலிகளையும் "உச்சரிப்பு ஒலியியல்" என்ற தலைப்பின்கீழ் விளக்கலாம். ஒலியன்கள் உச்சரிப்புத்தன்மையை மட்டுமன்றி, சில வேறு தன்மைகளையும் (சொற்களை பிரிக்கும் தன்மை) காட்டுவதால், அவைகளை "உச்சரிப்பு ஒலியியல்" என்ற தலைப்பில் விளக்க முடியாது.

ஒலியையும், ஒலியாராய்ச்சி, ஒலிவிவரணை இவைகளைப் பற்றியும் ப்ளூம்ஃபீல்டு கொண்டிருந்த கருத்துகளை பின்வருமாறு தொகுத்து கூறலாம். ஒலிகள், மொழி விவரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் கீழ்மட்டக் கூறுகள். மொழியில் ஒலியும், ஒலியன் களும் காணப்படும். ஒலியன்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒலிகள். ஒலியன்கள் ஒலியமைப்பின் அங்கங்கள். ஒலியன்கள் தொடர் நிலையில் நிற்கும் போது வேறு ஒலியன்களின் தாக்கத்தால் சிறிது உருவ வேற்றுமை அடையும். உருவ வேற்றுமை அடைந்த வேறுபட்ட ஒலியன் உருக்களை "மாற்றொலி" என அழைக்கலாம். ஒரு ஒலியனின் கீழ் இரண்டு அல்லது மேற்பட்ட 'மாற்றொலி' களை அடக்கலாம். ஒலியன்கள் தொடராக நின்று ஒலியன் தொடர்களை உருவாக்கும். ஒலிசம்பந்தமான விவரணை இரண்டு வகைப்படும். 1. சாதாரண ஒலிகளின் உச்சரிப்பு விவரணை,

2. ஒலியன்களின் விவரணை. ஒலியன்களின் விவரணையில் ஒலியன்களின் எண்ணிக்கை அவைகளின் கீழ் வரும் மாற்றொலி ஆகியனவற்றையும் குறிக்க வேண்டும். ஒலியாராய்ச்சியில் ஒலியன் களை கண்டுபிடிக்கும் விதத்தைக் கூறுவார் ப்ளூம்ஃபீல்டு. ''சொல்லிணை நிலை நிறுத்த சோதனை'' ஒருவகை முறை. ஒலி, ஒலியன் ஆராய்ச்சியில் ப்ளூம்ஃபீல்டின் பின்னால் வந்தவர்கள் சில கொள்கைகளைப் பயன்படுத்தினர். அவையாவன ''பேதம் காட்டும் நிலை கொள்கை'' (Principle of contrast), ''மாறுபாட்டு தன்மை கொள்கை'' (Principle of complementation) ''உரு பொருந்து நிலைக்கொள்கை'' (Principle of neatness of pattern), ''சிக்கனக் கொள்கை'' Principle of economy) என்பன.

சொல்லியல்

ஒலித்தொடர்களை அமைப்பாகக் கொண்ட பொருள் காட்டும் கூறுகளை ''பொருள் சார் கூறுகள் அல்லது இலக்கணக் கூறுகள்' எனலாம். இலக்கணக் கூறுகள், தனிக்கூறுகளாகவோ, சார்புக் கூறுகளாகவோ, கூட்டுக்கூறுகளாகவோ இருக்கும். ஒரு மொழிக் கூறு பொருள், ஒலியமைப்பு இவைகளால் வேறு மொழிக்கூறு களோடு ஒத்ததாயில்லாமல் இருந்தால் அம்மொழிக்கூறை ''தனி மொழிக்கூறு'' எனலாம். சொற்களை தனிக்கூறு எனவும், உருபன் களை ''சிறிய தனிக்கூறு' எனவும் கொள்வார் ப்ளூம்ஃபீல்ட். உருபன்கள் காட்டும் ''பொருளை'' குறுபொருள் எனலாம். ஒரு மொழிக்கூறு ஒலியமைப்பு, பொருள் இவைகளால் பிற கூறுகளோடு ஒத்ததாயிருந்தால் அம் மொழிக்கூறை ''கூட்டுக்கூறு'' எனலாம். ஒரு மொழியின் இலக்கண விளக்கம் தனி, சார்பு மற்றும் கூட்டுக் கூறுகளை விளக்கும் வகையில் அமையவேண்டும். இலக்கண விளக்கம், மொழிக்கூறுகளின் தொடர்நிலைத்தன்மையை விளக்க வேண்டும். இலக்கண இயலில், சொல்லியல், சொற்றொடர் இயல் என்ற இரண்டு வகைகள் உண்டு. உருபன்கள் சொல்லியலில் பங்கெடுக்கும் அடிப்படைக் கூறுகள். உருபன்கள் எல்லாம் ஒன்றாகத் தொகுக்கப்பட்டால் 'அகராதி'' உருவாகும்.

சிறிய மொழிக்கூறுகள் தொடர்நிலையில் நின்று பெருமொழிக் கூறுகளை உருவாக்கும். பெருமொழிக்கூறுகளின் உருவாக்கத்தில்

சில இலக்கண முறைகள் பங்கெடுக்கும். அதாவது பெருமொழிக் கூறுகளை உருவாக்க வேண்டுமென்றால் சிறு மொழிக்கூறுகளை தொடர்நிலையில் நிறுத்தவேண்டும். மேலும் அவைகளை சில இலக்கண செயல்களுக்கு உட்படுத்தவேண்டும். ''வரிசைநிலை இரண்டாம் தர ஒலி வேறுபாடு, ஒலிமாற்றம், தேர்வு முதலியன வற்றை இலக்கண முறைகள் எனலாம். ஒருபெருமொழிக்கூறு இரண்டு விதமான செய்தியை வெளிப்படுத்தி நிற்கும். அவை யாவன: 1. அம்மொழிக்கூறில் பங்கெடுக்கும் சிறு மொழிக்கூறுகள் 2. அதன் உருவாக்கத்தில் பங்கெடுத்த இலக்கண முறைகள். ''இடைச்சி' என்ற பெருமொழிக்கூறு இடை, - த்தி என்ற சிறு மொழிக் கூறுகளைக் கொண்டது. அது வெளிப்படுத்தும் இலக்கண முறைகள் பின் வருமாறு.

வரிசை இடை + த்தி. என்ற உருபன்களின் வரிசை

ஒலிமாற்றம் த்தி → ச்சி. என்ற ஒலிமாற்றம்.

தேர்வு இடை, அண் —, பேர்- என்ற அடி உருபன் களைக் கொண்ட தொகுதியிலிருந்து இடை-தேர்வு செய்யப்பட்டது.

-த்தி. இ-, - அச்சி, - அள் என்ற உருபன் தொகுதி (பெண்பால் உருபன் தொகுதி) யிலிருந்து தேர்வு செய்யப்பட்டது.

சிறு மொழிக் கூறுகள் காட்டும் பொருளை 'சிறுபொருள்'' எனவும் ''பெரு மொழிக்கூறுகள்'' காட்டும் பொருளை ''பெரும் பொருள்'' எனவும் கூறலாம்.

வாக்கியங்கள், வாக்கிய அங்கங்கள் ஆகியவைகளும் மொழிக் கூறுகளாக விளங்கும். வாக்கியங்கள் இரு வகைப்படும். 1. பூர்த்தியானவை 2. சிறியதானவை· எழுவாய், பயனிலைகளைக் கொண்ட வாக்கியங்கள் பூர்த்தியான, (முழுமையான) வாக்கியங் கள். எழுவாய், பயனிலைகளைக் கொண்ட வாக்கியங்கள் ''நிகழ்ச்சிகளைக்'' குறிப்பனவாயிருக்கும். வாக்கியங்களின் அங்கமாக சொற்றொடர்கள் காணப்படும். சொற்றொடர்கள் தனி மொழிக்கூறுகள். இவை தன்னகத்தே வேறுசில தனிக் கூறுகளை அடக்கவும் செய்யும். சொற்றொடர்கள் தன்னகத்தே சொற்களைக்

கொண்டிருக்கும். சொற்களும் தனிக்கூறுகளே. மொழிக்கூறுகள் தனிக்கூறுகளா என்பதை ''மொழிக்கூற்று இடப்பெயற்சி'' சோதனை மூலம் அறியலாம். சொற்றொடர்களும், கூட்டு சொற்களும் சொற்களால் ஆனவை. சொற்றொடர்களை கூட்டுச் சொற்களிலிருந்து பிரித்தறிய சில வழிமுறைகள் உண்டு. குறிப்பிட்ட தனி அழுத்த உச்சரிப்புகள், இடைவெளியற்ற அமைப்பு, அசை அமைப்பு, உயிர் ஒலித்தொடர் மாற்றம் ஆகிய சில தன்மைகளின் உதவியால் சொற்றொடர்களை கூட்டுச் சொற்களிலிருந்து பிரித்தறிய முடியும்.

மொழியின் இலக்கண அமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கும் கூறுகள் இரண்டு. அவையாவன; 1. சொல் 2. சொல் தொடர்நிலையில் நின்று உருவாகும் கூறுகள். சொற்களை விவரிக்கும் இயல் ''சொல்லியல்''. சொற்களில் உருபன்களின் தொடர்ச்சியைக் காணலாம். உருபன்கள் தனியானதாகவோ, சார்பானதாகவோ இருக்கும். உருபன்கள், பொருள் கொண்ட மிகச் சிறு கூறுகள். உருபன்களைக் கண்டு பிடிப்பது எளிதல்ல. அதற்கென சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். சில உருபன்கள் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட பொருள் களையும் குறிக்கலாம். சில உருபன்களுக்கு ஒலியமைப்பு இருப்பதில்லை.

சொற்களில் ''முதல் தர சொல்'', ''இரண்டாம் தர சொல்'' என இருவகைகள் உண்டு. முதல் தர சொற்களில், ''தனி சொல்'' ''உருவான சொல்'' என இரண்டு வகைகளைக் காணலாம். முதல்தர தனி சொல் ஒரு தனி உருபனால் ஆனது (ஆடு, கோழி). முதல்தர உருவான சொல்லில் இரண்டு சார்பு உருபன்கள் தொடராக நிற்கும் (அ- வன், அ- வள்). இரண்டாம்தர சொற்களில் ''கூட்டுச் சொல்'', ''உருவான சொல்'' என்ற இரு வகைகளைக் காணலம். இரண்டாம் தர கூட்டுச் சொல், இரண்டு தனி உருபன்களால் ஆனது. (மண்தரை, பச்சைக்கிளி). இரண்டாம் தர உருவான சொல்லில் ஒரு தனி உருபனும், ஒரு சார்பு உருபனும் காணப்படும் (மரங்- கள்), செய்- கை).

மொழிக்கூறு அமைப்பில் சில இலக்கண முறைகள் வெளிப்படுத்தப்படும் என்று முன்னர் கூறினோம். பெருமொழிக் கூறு உருவாக்கத்தில் பங்கெடுத்த இலக்கண செயல்களே, பெரு மொழிக்கூறு வெளிப்படுத்தும் இலக்கண முறைகள். சொல் அமைப்பும் இலக்கண செயல்களை வெளிப்படுத்தி நிற்கும். உருபன் வரிசை நிலை, உருபன் ஒலி மாற்றம், உருபன் தொடரில் இரண்டாம்தர ஒலிகளின் மாற்றம், உருபன் தேர்வு ஆகியவை களை சொல் அமைப்பு வெளிப்படுத்தும். தொடர்பு நிலையில் நிற்கும் உருபன்கள் அவற்றின் அமைப்பில் பங்கெடுக்கும் ஒலியில் மாற்றங்களைக் காண்பிக்கலாம். அத்தகைய மாற்றங்கள் பிற உருபன்களின் ஒலியமைப்பின் தாக்கத்தாலோ, பிற உருபன்களின் இலக்கண நிலையின் தாக்கத்தாலோ ஏற்படும். பன்மை உருபன் -கள் இரண்டு விதமான ஒலிவடிவம் கொண்டது. (-கள், -ஹள்; செயல்-ஹள், மரங்கள்) இத்தகைய மாறுபட்ட உருபன் வடிவங் களை "மாற்றுருபன்" எனலாம். ஒரு உருபனின் கீழ் பல மாற்றுருபன்கள் காணப்படலாம். ஒரு உருபனின் கீழ் வரும் மாற்றுருபன்களில் சில வேறுபட்ட தொடர்பற்ற ஒலியமைப்பைக் கொண்டிருக்கலாம். ஒலியமைப்பே இல்லாத மாற்றுருபனையும் ஒரு உருபன், தன் கீழ் அடக்கலாம். உருபன் தொடர்கள் சொற் களை உருவாக்கும்.

சொற்கள் மூன்று வகைப்படும். அவையாவன "தனிச் சொற்கள்" "கூட்டுச்சொற்கள்", "கலவைச்சொற்கள்" என்பன. "தனிச்சொற்கள்" ஒரு தனி உருபனாலோ (ஆண், பெண், கொடு) இரண்டு சார்பு உருபன்களாலோ (இரண்டு சார்பு உருபன்களில் ஒன்று அடிப்படையானது, அ-வன், அ-வள்) ஆனவையாயிருக்கும்.

இரண்டு தனிச் சொற்கள் தொடராக நின்று ஒரு "கூட்டுச் சொல்லை" உருவாக்கும். கூட்டுச் சொல்லுக்கும் சொற் றொடருக்கும் இடையே வேற்றுமை காணப்படும். சொற்கள் தொடர் நிலையில் நின்று சொற்றொடரையும், கூட்டுச் சொல்லை யும் உருவாக்கும். ஆங்கிலத்தில், கூட்டுச் சொற்களை சொற் றொடரிலிருந்து பிரிக்கும் வகையில் அமைந்த சில தன்மைகள்

உண்டு. கூட்டுச் சொற்களில் அழுத்த ஒலி (ஒருவகை)யும், அசாதரணமான ஒலித்தொடரும் காணப்படும். கூட்டுச்சொற்களில் காணப்படும் உருபன் தொடர் நிலை மாற்ற முடியாததாயிருக்கும் கூட்டுச் சொற்களை வகைப் படுத்த இரண்டு அடிப்படைக் கொள் கைகளை ஏற்கலாம். 1. கூட்டுச் சொற்களில் பங்கெடுக்கும் அங்கச் சொற்களினிடையே காணப்படும் தொடர்பு. 2. கூட்டுச் சொல்லுக் கும் அதில் பங்கெடுக்கும் அங்கச் சொற்களுக்கும் இடையே நிலவும் அடங்கு - அடக்குத் தொடர்பின் வகை. முதல் அடிப் படைக் கொள்கையின் மூலம் கூட்டுச் சொற்களை, ''சொற் றொடரை மூலமாகக் கொண்ட கூட்டுச்சொல்'', ''சொற்றொடரை மூலமாகக் கொள்ளாத கூட்டுச்சொல்'' என இரு வகையாக பிரிக்கலாம். ''சொற்றொடர் மூலக் கூட்டுச் சொல்''லை ''சொற் றொடர் குறுகிய கூட்டுச் சொல்'' எனவும் அழைக்கலாம். (உம். 1. கருநீலம், பால் மனம் . தங்கவயல், ஊதயல் - இயந்திரம்). இரண்டாம் வகையில் கூட்டுச் சொற்களை ''உள் மைய கூட்டுச் சொல்,'' ''வெளி மையக் கூட்டுச் சொல்'' என இருவகையாகப் பிரிக்கலாம். உள் மைய கூட்டுச் சொல்லில் இரண்டு சொற்கள் அங்கம் வகிக்கும்; கூட்டுச் சொல்லும், அதில் அங்கம் வகிக்கும் ஒரு சொல்லும் ஒன்றை ஒன்று இடப் பெயற்சி செய்யும் தன்மை கொண்டதாயிருக்கும். 'பச்சைக்கிளி' என்ற கூட்டுச் சொல்லும் அதில் காணப்படும் 'கிளி' என்ற சொல்லும் பெயற்சி நிலைத் தொடர்பில் நிற்கும் பச்சைக்கிளி பறந்தது: கிளி பறந்தது). ஆகவே 'பச்சைக்கிளி' என்ற கூட்டுச் சொல் ''உள் மைய கூட்டுச் சொல்''. ஒரு கூட்டுச் சொல்லும் அதில் அங்கம் வகிக்கும் ஒரு சொல் லும், பெயற்சி நிலைத் தொடர்பைக் காட்டாது நிற்கக் கூடும். அத்தகைய கூட்டுச் சொல்லை ''வெளி மைய கூட்டுச் சொல்'' என அழைக்கலாம்.

கலவைச் சொற்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தனி உருபன்களும், ஒரு சார்பு உருபனும் காணப்படும் (மரங்-கள் கை விரல்-கள்) கலவைச் சொற்களில் காணப்படும் சார்பு உருபன் கள், தனி உருபன்களின் இலக்கண நிலையை மாற்றும் வலிமை பெற்றதாகவோ, மாற்றும் வலிமை பெறாததாகவோ இருக்கும். -அல் எனும் சார்பு உருபன் செய் எனும் தனி உருபனுடன் சேர்ந்து

அத்தனி உருபனின் இலக்கண நிலையை மாற்றுகிறது. அதாவது 'செய்' வினைச்சொல்; 'செய்-அல்' (செயல்), பெயர்ச் சொல். ஆகவே 'செயல்' என்ற சொல்லில் தோன்றும் சார்பு உருபன் ''இலக்கண நிலை மாற்றும் வலிமைபெற்ற உருபன்''. -கள் என்ற 'சார்பு உருபன்' இலக்கண நிலையை மாற்றும் உரிமையற்ற சார்பு உருபன். இது 'மரம்' என்ற பெயர்ச் சொல்லோடு (தனி உருபன்) சேர்வதால் ஏற்படும் கலவைச் சொல்லும் (மரம்–கள்) பெயர்ச் சொல்லே. ஆகவே இங்கு இலக்கண நிலை மாற்றம் ஏற்பட வில்லை. சில சொற்களை கலவைச் சொற்களே என்று கொண்டாலும், அவைகளின் சார்பு உருபன்களை தனியாக பிரிக்கமுடியாது. இதனால் அக்கலவைச் சொற்களின் அடிப்படை உருபன்களைக் கண்டு பிடிப்பதும் கடினமாகிறது. ஆங்கிலத்தில் பன்மை காட்டும் சொற்கள் கலவைச் சொற்கள் (book-s). men என்ற ஆங்கிலச் சொல்லை ஒரு கலவைச் சொல் என்று கொள்ளவேண்டும். அதன் சார்பு உருபனைப் பிரித்தெடுக்க இயலாததால், அக்கலவைச் சொல்லில் ''அடிப்படைச் சொல்'' எது? சார்பு உருபன் எது? எனக் கூறுவது கடினமாகிறது.

சொற்களில் சிலவற்றை ''ஈட்டுச் சொற்கள்'' எனலாம். இவை, பொருட்கள், காலம், இடம் இவைகளைக் குறிக்கும் பெயர்ச் சொற்களுக்கு ஈடாக பயன்படுத்தப்படும். ஆகவே பயன் வகையில் இவை பிற தனித்தன்மை கொண்ட சொற்களுக்கு ஈடானவை. (உ. ம். இங்கே, இப்போது, இவன் போன்ற சொற்கள்). ஈட்டுச் சொற்களை வாக்கியங்களில் காணலாம். ஈட்டுச்சொற்களால் பெயற்சி செய்யப்பட்ட சில ''முழுச் சொற்கள்'', ஈட்டுச் சொற்களின் முன்னால் வாக்கியங்களில் நிற்பதையும் காண முடியும். 'வாத்தியாரிடம் கேள், அவர் சொல்வார்' என்ற வாக்கியத்தொடரில் 'அவர்'' என்ற ஈட்டுச்சொல் இரண்டாம் வாக்கியத்திலும், ஈட்டுச் சொல் பெயற்சி செய்த சொல்லான 'வாத்தியார்' முதல் வாக்கியத்திலும் வருவதைக் காண்க.

ப்ளூம்ஃபீல்டு, சொல் ஆராய்ச்சி, சொல்விவரணைகளைக் குறித்து எடுத்துக் கூறிய கருத்துக்களை பின்வருமாறு தொகுத்துக்

கூறலாம். பேச்சு பேச்சுக் கூறுகளால் ஆனது. பேச்சுக் கூறுகளில் பெரியனவும், சிறியனவும் காணப்படும். பெரும் பேச்சுக் கூறுகள், சிறு பேச்சுக் கூறுகளால் ஆன்வை. பொருள் கொண்ட, அல்லது பொருள் காட்டும் சிறு கூறுகள் 'உருபன்கள்''. பொருள் கொண்ட சிறு, தனிக்கூறுகளே ''சொற்கள்'', சொல்லமைப்பை விளக்க வேண்டுமானால் சொல்லில் காணப்படும் உருபன்களையும், அவைகளின் தொடர்நிலைத் தன்மையினையும் விளக்கவேண்டும். வரலாற்று மொழி இயலின் தாக்கத்தால், சபீர் போன்றவர்கள் மொழியின் பெரு மொழிக் கூறுகள் சிறு மொழிக் கூறுகளிலிருந்து உருவாகின்றன என்பர். மேலும் (பெரு) மொழிக் கூறு உருவாக்க முறைகளையும் விளக்குவர். ப்ளும்ஃபீல்டு ''உருவாக்கக் கொள்கை''யை ஏற்றுக்கொள்வதில்லை. விவரணை மொழியியலில், வரலாற்று மொழியியலின் தாக்கத்தால் உண்டான ''சொல் உருவாக்க கருத்து'', ''சொல் உருவாக்க முறைபற்றிய கருத்து'' ஆகியவற்றை தவிர்ப்பார் ப்ளும்ஃபீல்ட். பெருமொழிக்கூறுகளுக்கும் அவைகளில் பங்கெடுக்கும் சிறு மொழிக் கூறுகளுக்கும் இடையே தோன்றும் தொடர்புகளையே விவரணை மொழியியல் (குறிப்பாக அமைப்பு மொழி இயல்) விளக்க வேண்டும் என்பார். சொல்லின் அமைப்பை, உருபன், உருபன் தொடர்நிலைகளால் விளக்க வேண்டும். உருபன்கள் தொடர்நிலையில் நிற்கும்போது வடிவ மாற்றம் கொண்டதாகத்தோன்றும். இவைகளை 'மாற்றுருபன்' எனலாம். மாற்றுருபன்களின் வகைகளை பல பெயரில் அழைப்பர் ப்ளும்ஃபீல்டின் வழி வந்தவர்கள். மாற்றுருபன், சூன்ய மாற்றுருபன் (ஒலியமைப்பற்ற மாற்றுருபன்), கலவை மாற்றுருபன் முதலியன அத்தகைய சில பெயர்கள். ப்ளும்ஃபீல்டின் பின்னர் வந்தவர்கள் உருபனில் காணப்படும் ஒலியைப் பற்றிய வேறுபட்ட கருத்துக்களையும் கொண்டிருந்தனர். சிலர் உருபன்களில் காணப்படும் ஒலிகளை, 'ஒலியன்கள்' என்றும், வேறு சிலர் 'உருபன் ஒலி' என்ற ஒருவகை ஒலி என்றும் கொள்வர்.

### சொல் தொடர் இயல்

சொற்களை விட பெரிய மொழிக்கூறுகளான வாக்கியம், சொற்றொடர் முதலியவைகளைப் பற்றியும், அவைகளை விவரிப்

பது பற்றியும் ப்ளும்ஃபீல்ட் கொண்டிருந்த கருத்துக்கள் பின் வருமாறு

சொற்றொடர், வாக்கியம் முதலிய பெருமொழிக்கூறுகளை விளக்கும் இயல் ''சொல் தொடர் இயல்'. சொல் தொடர் கூறுகளில் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட தனிமொழிக் கூறுகளைக் கணலாம். பெருமொழிக் கூறுகளான வாக்கியம், சொற்றொடர் இவைகளிலும் இலக்கண அம்சங்களான தொடர்ச்சி தொடர்பு, தேர்வுத்தொடர்பு, அமைப்பு மாற்றம், இரண்டாம் தர ஒலியமைப்பு மாற்றம் ஆகியன வெளிப்பட்டுநிற்கும். 'கார் ஓடியது' என்ற வாக்கியத்தில் 'கார்' என்ற சிறு தனி மொழிக் கூறும் (சொல்) 'ஓடியது' என்ற சொல்லும் அங்கம் வகிக்கின்றன. மேலும் அவை தொடர்ச்சியாகவும் நிற்கின்றன. ஒரு மொழியில் 'தொடர்ச்சி நிலை வேறுபாடுகள்' பெருமொழிக் கூறுகளின் இலக் கணத்தன்மையை வேறுபடுத்துவனவாகவும் இருக்கும்; பொருள் களையும் வேறுபடுத்தும் (ஜன்னல் கம்பி : கம்பிஜன்னல், செங்கல் சூளை: சூளை செங்கள்). ஆங்கிலத்தில் பெயர் - வினைச்சொற் களின் தொடர் எழுவாய்—பயனிலை வகையான வாக்கியங்களை யும், 'வினை + பெயர்' சொல் தொடர்கள் பயனிலை – குறிக் கோள் வாக்கியங்களையும் காட்டும். இத்தகைய வாக்கிய வகை வேறுபாடு ''சொற்களின் தொடர்ச்சி வேறுபாட்டால்'' ஏற் படுகிறது. (John ran, John saw : Catch John, See John). மொழிக் கூறுகளின் தொடர்நிலையை விளக்கும்போது எந் தெந்த வகையில் மொழிக்கூறுகள் அடுத்தடுத்து நிற்கின்றன என்பதையும் விளக்க வேண்டும். மொழிக்கூறுகள் அவைகளின் இடையே வெற்றிடம் தோன்றும் வகையிலும், தோன்றா வகையிலும் நிற்கும். ஒரு பெருமொழிக்கூறின் அங்கங்களின் இடையே இன் னொரு மொழிக் கூறு புகுத்தப்படலாம். மொழியின் தொடர் அமைப்புகளை ஆராயும் போது மேற்கூறிய வகையிலான பல தொடர் அமைப்புகள் ஆராய்வோரின் கண்களுக்கு புலப்படும். (உம். இன்றுபோ, நாளை வா; (இடைவெளியுள்ளது) ராமன், (அவன்) போயிட்டான்; நான் அவனை, அதுதான் ஆறுமுகத் தின் பையனை தெருவில் பார்த்தேன்; கண்ணன், பாவம் புத்தி சாலி, தோத்துட்டான்; (மொழிக்கூறு புகுத்தப்பட்டது).

பெருமொழிக்கூறுகள் இலக்கண அம்சமான 'தேர்வு தொடர்பை'யும் வெளிப்படுத்தும். 'கார் ஓடியது' என்ற வாக்கியத்திலுள்ள 'கார்' என்ற சொல், வண்டி, மேகம், ரயில், சைக்கிள் போன்ற சொற்கள் அடங்கிய தொகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்டது. 'கார்' என்ற சொல் அடங்கிய தொகுதியில் 'மரம்' 'கல்' என்ற சொற்கள் இடம் பெறாது. ஏனென்றால் 'ஓடியது' என்ற சொல்லுடன் 'மரம்', 'கல்' என்ற சொற்கள் இணையாது. இணைந்தால் வழுவான வாக்கியங்கள் உருவாகும். (*மரம் ஓடியது, *கல் ஓடியது). 'ஓடியது' என்ற சொல் 'நின்றது, ஊர்ந்தது, நகர்ந்தது' என்ற சொற்கள் அடங்கிய தொகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒன்று. ஒரு வாக்கியத்திலோ, சொற்றொடரிலோ காணப்படும் சொற்கள் அங்கங்கள்) தமக்கென அமைந்த ஒரு தேர்வுத் தொடர்பை காண்பிக்கும். 'கார் ஓடியது' என்ற வாக்கியத்தில் காணப்படும் 'கார்', 'ஓடியது' என்ற சொற்கள் தேர்வு தொடர்பையும் வெளிப்படுத்தி நிற்கும். இரண்டு மொழிக் கூறுகளிடையே 'தேர்வு தொடர்' அமைய வில்லை என்றால், அம்மொழிக் கூறுகளால் உருவாகும் பெருமொழிக்கூறுகள் சரியானவை என ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. (*கார் நடந்தது, *கதவு நடந்தது * மரம் அழுதது).

ஒரு வாக்கியத்தில் காணப்படும் அங்கக் கூறுகள் வெளிப்படுத்தும் தேர்வுத் தொடர்புகள் இரண்டு வகைப்படும் அவையாவன 1. தொடர் நிலைத் தேர்வுத் தொடர்பு 2. பெயற்சி நிலை தேர்வுத் தொடர்பு. ஒருவாக்கியம் இலக்கண வகையில் வழுவற்றது என ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் அவ் வாக்கியத்தில் காணப்படும் அங்கக்கூறுகள் 'தொடர்நிலைத் தேர்வு தொடர்பை' காட்டுவனவாக இருக்கவேண்டும். 'ராமன் வந்தான், என்ற வாக்கியம் இலக்கண வழுவற்றது. ஆகவே 'ராமன்', 'வந்தான்' என்ற இரண்டு சொற்களுக்கும் இடையே தொடர்நிலை தேர்வுத் தொடர்பு சரியாக அமைந்திருக்கிறது. 'ராமன் வந்தாள்' என்ற வாக்கியம் இலக்கண வகையில் வழுவானது. இவ்வாக்கிய அங்கங்களான 'ராமன்', வந்தாள்' என்ற சொற்கள் தொடர்நிலை தேர்வு தொடர்பைக் காட்ட வில்லை; எழுவாய்

சொல் ஆண்பாலையும், பயனிலை சொல் பெண்பால் விகுதியையும் கொண்டதாக இருப்பதால் அவைகளிடையே தொடர் நிலை தேர்வு தொடர்பு இல்லாதிருக்கிறது. ப்ளூம்ஃபீல்டும், அவரைச் சார்ந்த அமைப்பு மொழியியலாரும் இலக்கண அடிப்படையில் அமைந்த தொடர்நிலை தேர்வு தொடர்பை விளக்குவர். ப்ளூம்ஃபீல்டின் பின்னர் வந்த சாம்ஸ்கி என்பாரும், லண்டன் மொழி இயலறிஞரான ஃபேர்த் என்பாரும் பொருளடிப் படையிலான தொடர்நிலை தேர்வு தொடர்பையும், அவை எவ்விதம் 'பொருள் வழுக்களை' விளக்க பயன்படுகின்றன என்பதையும் விளக்குவர். * 'கோழிப்பால்' என்ற 'சொல் தொடர்' பொருளின் அடிப்படையில் வழுவானது. 'கழுதைப்பால், தாய்ப்பால், பசும்பால்' முதலிய கூட்டுச் சொற்கள் பொருளடிப் படையில் வழுவற்றவை. ''பால்'' என்பதை உயிருள்ள பிராணி (குட்டிபோடும் தன்மை கொண்ட) களிடமிருந்து பெறலாம். ஆகவே 'பால்' என்ற சொல்லின் பொருளைக் குறிக்கையில் ''அது உயிருள்ள பிராணிகளிடமிருந்து பெறப்படும் ஒரு பொருள்'' என்ற பொருளம்சத்தையும் புகுத்த வேண்டும். 'கோழி' என்ற சொல்லின் பொருள் ''உயிருள்ள ஜந்து' 'பறவை' என்ற பொரு ளம்சங்களைக் கொண்டது. 'பறவை' என்ற பொருளம்சம், 'பிராணிகளிடமிருந்து பெறப்படும் திரவம்' என்ற பொருளம்சத் தோடு ('பால்' என்ற சொல்லின் பொருளம்சம்) இணையும் தன்மை அற்றதா யிருப்பதால், 'கோழிப்பால்' என்ற சொற் றொடரின் பொருள் ஏற்றுக் கொள்ள இயலாத வகையில் இருக் கிறது.

சொற்றொடரில், வாக்கியத்தில் காணப்படும் 'இசைவு இலக் கணக்கூறு' களான எண், பால் கூறுகளும், இணக்கு இலக்கணக் கூறுகளும், குறுக்கே தோன்றும் ஒட்டு இலக்கண சொற்களும் தொடர்நிலை தேர்வுத்தொடர்பை வெளிப்படுத்தும்.

உம். 1. வண்ணான் வந்தான் (எழுவாய் – ஆன், பயனிலை
-ஆன் என்ற இலக்கணக்கூறு
கள் படர்க்கை இட, ஒருமை,

ஆண்பாலைக் குறிக்கும். அவை 'இசைவுக்கூறுகள்').

2. நீ பார்
உன் பார்வை

('நீ' என்ற சொல் எழுவாயாக, 'பார்' என்ற பயனிலையின் முன்னால் வரும். இத்தொடர் ஒரு வாக்கியம். 'நீ' என்ற சொல்லின் வேற்றுருவமான 'உன்' என்ற சொல் 'பார்வை' போன்ற பெயர்ச் சொற்களின் முன்னால் வரும். இத்தொடர் ஒரு பெயற் சொற்றொடர்.

'நீ' 'உன்' என்ற வேற்றுருவ 'ஈட்டுச் சொற்களின்' நிலை, பின்னால் வரும் சொற்களால் நிர்ணயிக்கப்படுகிறது. 'பார்', 'பார்வை' என்பன 'இணக்குச் சொற்கள்'. அவை 'நீ', 'உன்' என்ற சொற்களை இணங்க வைக்கின்றன. 'நீ', 'பார்' என்ற சொற்களின் இடையே 'தொடர்நிலைத்தேர்வு தொடர்பு' காணப் படுகிறது.)

3. நாசுவன், அவன் வேலையைச் செய்தான்

('அவன்' என்ற சொல், 'நாசுவன்' என்ற பெயர்ச் சொல்லின் ஈடாக நிற்கும் சொல். இவ்விரண்டு சொற்களுக்குமிடையே 'தொடர்நிலைத் தேர்வு தொடர்பு' காணப் படுகிறது.)

ஒரு மொழியில் காணப்படும் சொற்கள், அவை சொற்றொடரிலோ, வாக்கியத்திலோ நிற்கும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்படும். 'ராமன் வந்தான்' என்ற வாக்கியத்தில் 'ராமன்' என்ற சொல் முதல் இடத்திலும், 'வந்தான்' என்ற சொல் இரண்டாம் இடத்திலும் நிற்கின்றன. 'ராமன்' என்ற சொல்லை (அந்த வாக்கியத்தில்) பெயற்சி செய்யும் மொழிக்கூறுகள் அனைத்தையும் ஒரு தொகுதியினுள் அடக்கி அத்தொகுதியை 'வாக்கிய முதலிட சொல் தொகுதி' என அழைக்கலாம். (எ.டு. 'ராமன், கிருஷ்ணன், உழவன், வேலைக்

காரன், தம்பி, எங்கள் தையல்காரன்' ஆகியவை ஒரு தொகுதியின் அங்கத்தினராக முடியும்). இதேபோல் 'வந்தான்' என்ற இரண்டாம் இடச்சொல்லை பெயற்சி செய்து அதன் இடத்தில் வேறு சொற்களைப் போடமுடியும். அத்தகைய சொற்கள் எல்லாம் சேர்ந்து ஒரு தொகுதியை உருவாக்கும். ஒரு தொகுதியில் அங்கம் வகிக்கும் மொழிக்கூறுகளின் இடையே தோன்றும் தொடர்பை 'பெயற்சி நிலைத் தொடர்பு' எனலாம். வெவ்வேறு தொகுதிகளி லிருந்து அங்கக் கூறுகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை தொடர் நிலையில் நிறுத்தி 'சொற்றொடர்களை' உருவாக்கலாம். தொடர் நிலையில் நிற்கும் தொகுதி அங்கக் கூறுகள் ''பெயற்சி நிலைத் தேர்வுத் தொடர்பை' வெளிப்படுத்தும். ப்ளும்ஃபீல்டு 'சொல்தொகுதி'களை முக்கியத்துவம் கொடுத்து விளக்கு வதில்லை. ஒரு மொழியை உபயோகிக்கும் சூழ்நிலையில் (பேச்சு சூழ்நிலையில்) 'சொல்தொகுதிகள்' வெளிப்படுவதில்லை. சொல்தொகுதிகளின் அமைப்பு மனதில் படிந்து காணப்படும். இருந்தாலும் சொற்றொடரில் காணப்படும் இடங்களின் அடிப் படையில் எழும் 'சொல் தொகுப்பு' களை, மறைமுகமாக, பெயற்சி நிலைத்தொடர்பைக் கூறுவதன் மூலம் விளக்குவார். ஒரு மொழியில் காணப்படும் சொற்கள் அனைத்தையும் 'தொகுதி களாக' ஆக்கும் முறையை விளக்குவதில்லை.

பெரு மொழிக்கூறு ஒன்று அதன் அமைப்பில் அடங்கிய ஒரு அங்கக் கூறை பெயற்சி செய்யும் தன்மையைக் கொண்டிருந்தால், அப்பெருமொழிக்கூறை 'உள் மைய பெருமொழிக்கூறு' என அழைக்கலாம். 'உள் மைய பெருமொழிக்கூறில்' இரண்டு வகைகள் அடங்கும். 1. நிகர் அங்க உள் மைய பெருமொழிக்கூறு 2. அடக்கு அங்க உள் மைய பெருமொழிக்கூறு. 'நிகர் அங்க உள் மையப் பெருமொழிக்கூறில்' காணப்படும் இரண்டு அங்கங்களும் அவைகளை அடக்கும் பெரு மொழிக் கூறை பெயற்சி செய்யும் தன்மையன வாயிருக்கும். இத்தகைய அங்கக் கூறுகளில் ஒன்றை ''கரு அங்கக்கூறு' எனவும் இன்னொன்றை ''சார்பு அங்கக்கூறு'' எனவும் பிரிக்கமுடியாது. 'அடக்கு அங்க உள் மையக்கூறில்' காணப்படும் அங்கக்கூறுகளில் ஒன்றை 'கரு அங்கக் கூறு'

எனவும், இன்னொன்றை 'சார்பு அங்கக்கூறு' எனவும் பிரிக்க முடியும்.

எ.டு. 1. நிகர் அங்க உள் மையக்கூறு: மாமா, அத்தை எனக்குத்தேவை.
மக்கள், சுற்றம் என்னிடம் வருவதில்லை.

2. அடக்கு அங்க உள் மையக் கூறு: தங்கக் கடிகாரம் வாங்கினேன்.
புதுவீட்டுக்குபோனோம்.

ஒரு பெரு மொழிக்கூறை, அதில் காணப்படும் எந்த அங்கங்களும் பெயற்சி செய்யும் நிலையில் இல்லாமல் இருந்தால், அத்தகைய பெருமொழிக்கூறை ''புறமைய பெருமொழிக்கூறு' என்று கூறலாம். (எ. டு. அவன், ரோடு வழியாகச் சென்றான்; *அவன் ரோடாகச் சென்றான் * அவன் வழியாகச் சென்றான்)

பெரு மொழிக் கூறுகளில் இலக்கண அம்சங்களான 'ஒலி மாற்றம்', 'இரண்டாம் தர ஒலிமாற்றம்' ஆகியனவும் வெளிப்படும். இரண்டு தனி மொழிக்கூறுகள் தொடர் நிலையில் நின்று ஒரு பெரு மொழிக்கூறு உருவாகலாம். தனிமொழிக்கூறுகள், பெருமொழிக்கூறை உருவாக்கும் வண்ணம் தொடர்நிலையில் நிற்கும்போது சில 'அமைப்பு மாற்றங்களை' அடையும். இத்தகைய 'மொழிக்கூறு அமைப்பு மாற்றங்களை 'சந்தி மாற்றங்கள்' என்ற தலைப்பில் விளக்கலாம். 'அது' என்ற சொல் 'ஐ' எனும் வேற்றுமையுடன் இணையும்போது 'அன்' என்ற 'சாரியை இடையில் தோன்றும். இத்தகைய 'சாரியை உருவாக்கம்'' கண்டிப்பாக நிகழவேண்டும் என்ற நியதி தமிழில் இல்லை. சாரியை ஏற்படாத வண்ணமும் ,அ', 'ஐ' என்ற கூறுகள் புணரும் (அது + ஐ → அதை (அல்லது அதனை . இந்த வகை சந்தி மாற்றங்கள் சொல் மட்டத்தில் விவரிக்கப்படும். தொடரியலிலும் இத்தகைய மாற்றங்கள் விவரிக்கப்படவேண்டும். ஏனென்றால் 'அதனை' என்ற சொல் ஒரு வாக்கியத்தில் 'செயப்படு பொருளாக' நிற்கும் தன்மை கொண்டது.

மேற்கூறிய கருத்துக்கள் எல்லாம் 'சொற்றொடரைப்' பற்றி ப்ளூம்ஃபீல்டு கூறிச்சென்ற பரவலான கருத்துகள். ப்ளூம் ஃபீல்டின் பின்னால் வந்த அமைப்பு மொழி இயலாரின் 'தொடர் இயல் கருத்துகள்' ப்ளூம்ஃபீல்டின் கருத்துகளைத் தழுவியன என்ற போதிலும், அவைகளில் சில வேற்றுமைகளையும் காண முடியும். ஸ்டார்க் (1972) என்பார், அமெரிக்க அமைப்பு மொழி இயலில் மூன்று வகை 'தொடரியல் கருத்துகள்' காணப்படுகின்றன என்பார். அவையாவன 1 ப்ளூம்ஃபீல்டின் இலக்கண அமைப்பு - அம்ச கொள்கை. 2. ஹாக்கெட்டின் மொழிக் கூற்றுத்தொடர் கொள்கை 3. ஹேரிஸின் தொடரியல் கொள்கை என்பன.

ப்ளூம்ஃபீல்டின் கருத்துகள் பின்வருமாறு. பெருமொழிக்கூறுக ளில் சிறுமொழிக்கூறுகள் அங்கம் வகிக்கும். அங்கக் கூறுகளின் நெருக்கத்தின் அடிப்படையில், அங்கக்கூறுகளை (சிறுமொழிக் கூறுகளை) 'நெருக்க அங்கக் கூறுகள்'', 'நெருக்கமற்ற அங்கக் கூறுகள்' எனஇருவகைப் படுத்தலாம். 'Poor John ran away' என்ற வாக்கியத்தில் 'Poor John' என்ற தொடரும் 'ran away' என்ற தொடரும் நெருக்க அங்கங்கள். 'Poor John' என்ற தொடரில் 'Poor,' 'John' என்ற சொற்கள் நெருக்க அங்கங்கள். நெருக்க அங்கங்களைக்கண்டு பிடிக்கும் வழிமுறைகள் ப்ளூம்ஃபீல் டால் தெளிவாக விளக்கப்படவில்லை. பெருமொழிக்கூறுகள் தொடர்ச்சி, தேர்வு, ஒலிமாற்றம், இரண்டாம் தர ஒலிமாற்றம் ஆகிய இலக்கண அம்சங்களை வெளிப்படுத்தும் எனவும் கூறுவார்.

ஹாக்கெட்டின் 'தொடரியல் விவரணை' ஒரு 'சிதைப்பு விவ ரணை'. பெருமொழிக் கூறுகளை சிதைத்து, சிறு மொழிக் கூறுகளை கண்டு கொள்ளலாம். அவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட சிறு மொழிக்கூறுகளை 'பெயற்சி நிலைத்தொடர்பு சோதனை' யின் மூலம் ஒத்தனவா, வேறுபட்டனவா என அறிய முடியும். பின் அதன் அடிப்படையில் 'தொகுக்க' முடியும். பெரு மொழிக் கூறில் அங்கம் வகிக்கும் சிறு மொழிக் கூறுகளை 'நெருக்கமற்ற அங்கங்கள்', 'நெருக்கமான அங்கங்கள்' என இருவகைப்படுத்த லாம். இவைகளைத்தவிர 'தொடர் ஒலி' களால் ஆன அங்கங்

களையும் சொற்றொடரோ, வாக்கியங்களோ ஏற்று வரும். பெரு மொழிக் கூறுகளை, அவை கொண்டிருக்கும் அங்கங்களின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். மேற்கூறிய கருத்துகளை ஹாக்கெட் அவரது தொடரியல் கொள்கையில் பரவலாக விளக்குவார்.

ஹேரிஸ் என்பாரின் 'தொடரியல் விவரணை', சிதைப்பு விவரணை அல்ல. அவரது விவரணை 'உருவாக்க விவரணை'. உருபன்களை அடிப்படை மொழிக் கூறாகக் கொண்டு, அவை எவ் விதம் தொடர்ச்சி நிலையில் நின்று பெருமொழிக்கூறுகளை உருவாக் கும் என்பதை விளக்குவார். ஒவ்வொரு பெரு மொழிகூறின் அக அமைப்பிலும் 'சிறு மொழிக் கூறுகளை' ஏற்கும் 'சட்டங்கள்' காணப்படும். ஒரு 'சட்டத்தில்' வரும் சொல் ஒரு 'சொல் தொகுதி'யிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் எனவும் கூறுவார். இத்தகைய விவரணையால் பெருமொழிக்கூறு – அவற்றின் அங்கக் கூறு போன்ற கூறுகளை, ஹேரிஸ் தமது விவரணையில் கைக் கொள்வதில்லை ஆகவே பலர் இவரை, ப்ளூம்ஃபீல்டின் 'தொடர் கொள்கை'யிலிருந்து வேறுபட்ட ஒரு கொள்கையைக் கொண்டவர் என்பர்.

ப்ளூம்ஃபீல்டும், அவரைச் சார்ந்த ஹாக்கெட் போன்றவர்களும் 'பெருமொழிக்கூறை' அடிப்படையான கூறு எனக்கொண்டு, அதை சிதைத்து, அதில் அங்கம் வகிக்கும் அங்கக் கூறுகளைக் கண்டறிவர். பின்னர், அங்கக் கூறுகளையும் பெரு மொழிக் கூறுகளையும் வகைப்படுத்துவர். அமைப்பு விவரணையில் 'மன' தோடு தொடர்பு கொண்டதென கருதப்படும் கலைச் சொற்களையும், அக்கலைச் சொற்கள் காட்டும் மொழியம்சங் களையும் (எழுவாய், பயனிலை, பெயர், வினை முதலிய கலைச் சொற்கள்), தொடர் அமைப்பில் இல்லாத, கண்ணுக்கு வெளிப் படையாகத் தெரியாத 'மொழிக்கூற்றுத் தொகுதி'யையும் தமது விவரணைக்கு எடுத்துக் கொள்வதில்லை.

ப்ளூம்ஃபீல்டும் அவரைச் சார்ந்தவர்களும், வாக்கியத்தை, 'முழுமை பெற்ற அமைப்பு கொண்ட மொழிக்கூறு' என்பர்

ஆகவே அவர்கள் வாக்கியத்தை, விவரணைக்காக பயன்படுத்தப் படும் மேல் மட்ட மொழிக்கூறாகக் கொண்டனர் என்பது விளங்கும். 'பேச்சை' ப்பற்றி கூறுகையில் 'பேச்சுக்கூறுகள்' இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட வாக்கியங்களால் ஆனவையாயிருக்கும் என்று கூறிய போதிலும், வாக்கியங்களையேமொழிவிவரணையில் பெரு மொழிக்கூறாகக் கொண்டனர் என்பது புலப்படுகிறது. சில இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் 'உரையாடல்' என்பதை மொழிக் கூறாகக் கருதுவர். அமெரிக்க அமைப்பு மொழியியலார் பேச்சில் தோன்றும் கூறுகளின் அமைப்பை விளக்குவதே விஞ்ஞான ரீதியிலமைந்த மொழியியலின் கடன் என்றனர். 'சொல் தொகுதி', 'சொல் களங்கள்' ஆகியனவற்றை விளக்குவதில்லை. 'சொல் தொகுதி' 'சொல் களங்கள்' முதலியன மனமொழியில் இடம் பெறுவன. ப்ளூம்ஃபீல்டு மனமொழியின் அமைப்பை ஆராய முற்படுவதில்லை. மொழியை ஒரு செயல் என்று கொள்வார். மொழி விவரணைக்கு பேச்சை எடுத்துக் கொள்வார். பேச்சு மொழியில் சொல் தொகுதிகள், களங்கள் முதலியன தோன்றாமை யால் அவைகளை விளக்க அவர் முயல்வதில்லை.

பொருள்

மொழியும், மொழிக்கூறுகளும் பொருள் கொண்டவை. மொழிக்கூறுகளின் பேச்சுக்கூறுகள்) பொருள் என்பது அக்கூறுகள் தோன்றும் 'சூழ்நிலை' மற்றும் அக்கூறுகள் கேட்போரிடத்தில் ஏற்படுத்தும் 'விளைவு' ஆகியவற்றின் கூட்டு. மொழிக்கூறுகளின் பொருளை வெளியுலகப் பொருள்கள், நிகழ்ச்சிகள், செயல்கள் ஆகியனவற்றோடு இணைப்பதால், மொழிக்கூற்றுப் பொருள் குறித்த விவரணை வெளியுலகப் பொருள்கள், செயல்கள் ஆகியன வற்றை விவரிக்கும் விவரணையாக வேண்டும். வெளியுலகப் பொருள்களை முழுமையாக விளக்கும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சியடையவில்லை என ப்ளூம்ஃபீல்டு கருதியதால் பொருள் விவரணையை மொழி விவரணையிலிருந்து ஒதுக்கி விடுவார். மொழிவிவரணை மொழிக்கூறுகளின் வடிவ விவரணையே என்றும் குறிப்பாக மொழிக்கூறுகளின் தொடர் நிலைத் தொடர்பு பற்றிய

விவரணை எனவும் கூறுவார். மொழியின் அமைப்பில் பொருளைப் பற்றி பேச வேண்டியதில்லை. மொழியின் விவரணையிலிருந்து பொருளை விளக்குவாரே தவிர, மொழிக்கூறுகள் பொருளற்றவை என்றோ, மொழி அமைப்பு விவரணையில் (குறிப்பாக மொழிக்கூறு களின் அமைப்பையும், அவைகளைக் கண்டறியும் விதத்தைப்பற்றி யும் பேசும் நேரங்களில்) பொருள் சம்மந்தமான குறிப்புக்களைப் பயன்படுத்தக் கூடாது என்றோ கூறவில்லை. மொழிக்கூறுகள் 'புற வடிவத்தையும்' (ஒலித் தொடர், உருபன் தொடர், சொல் தொடர்) 'பொருளையும்' தாங்கி நிற்பதால்தான் 'மொழிக்கூறுகள்' என அழைக்கப்படுகின்றன. மொழிக்கூறுகளின் அங்கமாக 'குறி அம்சமும்', 'பொருள் அம்சமும்' காணப்படும். 'உருபன்' என்ற மொழிக்கூறில் 'ஒலியன்கள்' 'குறிஅம்சமாகவும் 'சிறு பொருள்' பொருளம்சமாகவும் திகழும். சொற்றொடர், வாக்கியம் முதலிய பெருங்கூறுகளில் இலக்கண அம்சங்களும் 'குறிஅம்சமாக' பங்கெடுக்கும், 'பெரும்பொருள்கள்' பொருள் அம்சமாக நிற்கும்.

மொழி விவரணையில் பொருள் அமைப்பைக் குறித்து பேசவில்லை ப்ளூம்ஃபீல்டு. ஆனால் மொழியும், மொழிக்கூறுகளும் பொருள் கொண்டவை என்பதை ஏற்றுக் கொண்டார். மொழியின் கூறுகளைக் கண்டறியும் வகைக்காக 'பொருள்' அம்சங்களை பயன் படுத்த முடியும், பயன் படுத்தலாம் என்பதையும் ஏற்றுக் கொண்டார். ப்ளூம்பீல்டின் பின்னால் வந்த சில அமெரிக்க அமைப்பு மொழி இயலார் பொருளடிப்படையிலான கருத்துக்களை மொழிக்கூறுகளை விளக்கும் வகையில் பயன் படுத்தினர். ஹாக்கெட், டிரேகர் முதலானவர்கள் இத்தகையவர் கள். சிலர், குறிப்பாக ஹேரிஸ் பொருள் அடிப்படையிலான குறிப்புக்களைக்கூட மொழிக்கூறுகளை விளக்குவதற்காக பயன் படுத்துவதில்லை.

## துணை நூல்கள்

1. Block, B. 1953, Linguistic Structure and Linguistic Analysis, Georgetown monograph 4, 40-44.

Block, B and Trager, G. L. 1942, An Outline of Linguistic Analysis, Baltimore.

Bloomfield, L. 1926, A Set of Postulates for the Science of Language, in Joos, M. 1958.

——— 1933, Language, New York.

——— 1939, Linguistic Aspect of Science in International Encyclopoedia of Unified Sciences, 1. 4, Chicago.

Boas, F. 1911 (Ed), Hand book of American Indian Languages, Part - 1 Bureau of American Ethnology Bulletin 40, Smithsonian Institution.

——— 1929, Classification of American Indian Languages. Language. 5. 1-7.

Carrol, J. B. 1956 (Ed), Language, Thought and Reality; Selected Writings of B. L. Whorf, MIT.

Chomsky, A. N. 1957, Syntactic Structures, Janua Linguarum 4, Mouton.

Dinneen, F. P. 1968, An Introduction to General Linguistics, Holt Rinehart Winston inc.

Fries, C. C. 1952, The Structure of English, Harcourt, Bruce, NY.

——— 1961, The Bloomfield School in Mohrman etal Trends in European and American Linguistics (1930-60) 196-222. Utrecht.

Hall, R. 1951, "American Linguistics(1925-50)" Archivum Linguisticum 3, 101-25.

Hamp, E. P. 1960, American School of Linguistics in A. A. Hills 1960.

Harris, Z. S. 1951, Methods in Structural Linguistics, Chicago.

——— 1951, Review of Sapir's Selected Writings, Language.

Hill, A. A. 1960: Linguistics, VoA forum lectures.

Hockett, C. F. 1954: "Two models of grammatical description" Word 10, 210-31.

——— 1958, A Course in Modern Linguistics, NY.

Huddleston, R. 1972, The Development of non process models in American Linguistics, Lingua 30, 233-84.

Hynes, D and Fought, J. 1975: American Structuralism, CTL, 13.

Joos, N 1958, Readings in Linguistics, New York.

Mandelbaum, D. G. 1949, (Ed) Selected Writings of E. Sapir, Berkeley,

Nida, E. A. 1946, Morphology, Ann Arbor, Michigan.

Sampson G. 1980, Schools of Linguistics, Hutchinson.

Stark, B. R. 1972 The Bloomfieldian model, Lingua 30, 285–421.

Sapir, E. 1925, Sound Patterns in a Language, in Joos 1958, 19–25.

———1921, Language, Rupert Hart Davis, Ny.

———1929, "The Status of Linguistics as a science" Language 5, 207-14.

Teter, K. V. 1964 "Descriptive Linguistics in America", Word 20.

———1969, "Leonard Bloomfield's Linguistics" Language Sciences 7, 1-6.

Trager, G. L 1951, An Outline of English Structure SIL occasional papers 3, Washington.

# வினையடிப்பெயர்

கோ. சுப்பையா
இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்.

தமிழில் காணும் பெயர்களை, அவற்றின் அமைப்புத் தன்மைகளின் அடிப்படையில் இருபெரும் பிரிவுகளாகப் பகுத்துணரலாம். தனிப் பெயர் (simple noun) கூட்டுப் பெயர் (compound noun) என்பன இவ்விரு பிரிவுகளாகும். தனிப்பெயர் மேலும் முப்பிரிவுகளாகப் பிரிகின்றது. அவை தனிப்பெயர் (noun), தொழிற் பெயர் (gerundial noun), வினையடிப்பெயர் (derived noun) என்பனவாகும். கீழ்க்காணும் வரைபடம் இதனைக் காட்டும்.




1. கூட்டுப்பெயரைப் பற்றிய ஆய்வை, ஆய்வுக்கோவையில் காண்க. 1983.

இயற்கையில் பெயரைக் குறிக்கின்ற சொற்களான பெயர்ப் பதிலி (pronoun) இடப்பெயர் (place name) காலப்பெயர் (time noun) முதலியன வினையல் பெயர் பிரிவினில் அடங்கும்.

வினையடிச் சொல்லினின்று – தல், – த்தல், – அல் போன்ற பெயராக்கிகளினால் பிறக்கின்ற பெயர்கள் ''தொழிற்பெயர்'' பிரிவினில் சேரும். வினையடிச் சொல்லினின்று – ப்பு; - ச்சி; - வு; -க்கை முதலிய பெயராக்கிகளினால் பிறக்கின்ற பெயர்கள் வினையடிப் பெயர்களாகும். மேலும் மொழிவரலாற்றினை வரலாற்று ஒப்பியல் (historical & comparative linguistics) மொழியியல் கோட்பாடுகளின் தத்துவ அமைப்பு முறைமையில் நோக்கி ஆராய்ந்தால், மேலே குறிப்பிட்ட (-ப்பு, வு, - ச்சி, -க்கை) பெயராக்கிகள் மொழியின் தொடக்க காலத்தில் காலம் காட்டும் சொல்லுருபன்களாக பயன்பட்டிருக்கலாம் எனும் கருத்து எழுவது இயல்பேயாகும். இக்கருத்து மேலும் ஆய்வுக்குரியது.

முன்னையது -தொழிற்பெயர்-வினை அடிப்படையாகக் கொண்ட தொழிலைக் குறிப்பதைக் காணலாம். பின்னையது -வினையடிப்பெயர்-வினை அடிப்படையாகக் கொண்டு பெறும் பெயரையும், அப்பெயரினால் குறிக்கப்பெறும் பொருண்மை ஆழத்தையும் (semanticness) குறிப்பதை உணரலாம். பொருண்மை அடிப்படையிலும், செயல் (function) அடிப்படையிலும் தொழிற் பெயரும், வினையடிப்பெயரும் வேறுபட்டு நிற்பதை உணரலாம். இக் கட்டுரையில் வினையடிப் பெயர்களின் அமைப்பு முறைமையை யும் இவை உணர்த்தும் பொருண்மையையும் பற்றி ஆரய்வதே நோக்கமாகும்.

அமைப்புமுறைமை

பெரும்பாலான வினையடிச் சொற்களுடன் பெயராக்கிகள் (noun formatives) இணைந்து வினையடிப் பெயர்களைத் தருகின்றன. வினையடிப் பெயர்கள் இரு பிரிவுகளாகப் பகுத் துணரப்படுகின்றன. அவை வினையடிச் சொல்லே தன் அமைப்பில் சில மாற்றங்களை ஏற்று வினையடிப்பெயராக

அமைவது ஒரு பிரிவாகும்; பெயராக்கிகளுடன் இணைந்து வினையடிப்பெயரைத் தருவது இன்னொரு பிரிவாகும். இதனைக் கீழ்வரும் படம் தெளிவாக எடுத்துக்காட்டும்.

வினையடிப்பெயர்

வினையடிச்சொல் + தன்னில் மாற்றம் | வினையடிச்சொல் + பெயராக்கி

வினையடிச்சொல் + தன்னில் மாற்றம்

வினைச் சொல்லே தன் அமைப்பில் ஏற்கும் மாற்றங்களின் தன்மையினைக்கொண்டு மேலும் பல சிறு பிரிவுகளாக பிரிக்கப் பெறுகின்றது. வினையடிச் சொல்லில் காணும் உயிர் நெடிலாவதாலோ அல்லது குறிலாவதாலோ பெறப்படும் வினையடிப்பெயர்கள் ஒரு பிரிவாகும். வினையடிச் சொல்லில் காணும் மெய் (-சு, -து, -டு) இரட்டிப்பதால் ஏற்படும் வினையடிப் பெயர்கள் மற்றொரு பிரிவாகும். வினையடிச் சொல்லில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல், அச்சொல்லே பெயராக பயன்படுவது இன்னொரு பிரிவாகும். அதாவது இம்மூன்றாவது பிரிவில் பூஜ்யம் ϕ) எனும் உருபன், மாற்றத்திற்கு அடிகோலியானது என்பது தெளிவு. இம்மூன்று பிரிவுகளைக் கீழ்வரும் படத்தில் காட்டலாம்.

வினையடிச்சொல் + தன்னில் மாற்றம்

உயிர்நெடிலாதல் | உயிர்குறிலாதல் | தன்னில் மாற்றம் சொல் + ϕ

உயிர்நெடிலாதல்

பேறு (பெறு); வீடு (விடு); பாடு) (படு,); ஏற்பாடு (ஏற்படு): சாப்பாடு (சாப்பிடு); கூப்பாடு (கூப்பிடு); வழிபாடு (வழிபடு); புறப்பாடு (புறப்படு) முதலியன இயல்வினையடிச் சொல்லினின்று உயிர் நெடிலாதலால் பெறப்படும் வினையடிப் பெயர்களுக்குச்

சான்றுகளாகும். வகைப்பாடு (வகைப்படு); பாகுபாடு (பாகுபடு); கட்டுப்பாடு (கட்டுப்படு); வேறுபாடு (வேறுபடு); ஈடுபாடு (ஈடுபடு); தட்டுப்பாடு (தட்டுப்படு); வெளியீடு (வெளியிடு) போன்றன கூட்டு வினையடிச் சொல்லினின்று உயிர் நெடிலாதலால் பெறப்படும் வினையடிப் பெயர்களுக்குச் சான்றுகளாகும்.

உயிர் குறிலாதல்

காண் எனும் வினையடிச் சொல்லிலுள்ள நெடில் உயிர் தன்னளவு குறைவதால் கண் எனும் வினையடிப்பெயர் வருகிறது. உயிர் குறிலாதலால் ஏற்படும் வினையடிப்பெயருக்கு இவ்வினை யடிச் சொல்லைத் தவிர வேறெந்த சொல்லும் மொழியில் வழங்கப் படாமை இங்குக் குறிப்பிடத்தக்கது. மொழியில் வினையிலிருந்து பெயர் வந்தது என்ற கருத்துடையவரும், பெயரிலிருந்து வினை பிறந்தது என்ற கருத்துடையவரும், தத்தம் கருத்துக்குச் சான்றாக இச்சொல்லை மேற்கோளாக எடுத்தியம்புவார்கள்.

வினையடிச் சொல்லில் மாற்றமின்மை

சில வினையடிச் சொற்கள் தம் அமைப்பில் எவ்விதமான மாற்றங்களையும் ஏற்காமல், தாமே வினையடிப் பெயராக இயங்கு வதைக் காணலாம். மொழியியல் அறிஞர்கள் பூஜ்யம் (ϕ) எனும் உருபனால்தான் எவ்விதமான மாற்றங்களும் நிகழ்வதில்லை அதாவது பூஜ்யம் எனும் உருபன் (ϕ) த்தகைய சொற்களுடன் இணைந்து தேவையானவற்றைக் கொடுக்கின்றது எனக் கருதுவர்.

மலர் (மலர்); பூ (பூ;) இசை (இசை); பகை (பகை); சொல் (சொல்); பூட்டு (பூட்டு); தப்பு (தப்பு); நகை (நகை); விதை (விதை); வெடி (வெடி) என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

ஆனால் இவ்வெடுத்துக்காட்டுகளில் உள்ள வினையடிச் சொற்களான மலர், வெடி என்பன முறையே -ச்சி, -ப்பு எனும் பெயராக்கிகளுடன் இணைந்து மலர்ச்சி, வெடிப்பு எனும் வினை யடிப்பெயர்களைத் தருவது நோக்கத்தக்கது.

வினையடிச்சொல் + பெயராக்கி

பெரும்பாலான வினையடிச் சொற்கள் பெயராக்கிகளுடன் இணைந்து வினையடிப்பெயர்களைத் தருவது மொழியில் பரவலாகக் காணலாம். இவ்வாறு வினையடிச் சொல்லுடன் சேர்ந்து வினையடிப்பெயரைத் தரும் பெயராக்கிகளைப் பற்றி அறிந்து கொள்வது இயல்பாகும். இப்பெயராக்கிகள் தங்களின் பண்புத் தன்மையின் அடிப்படையில் இருபெரும் பிரிவுகளாகப் பகுத்துணரப்படுகின்றன. உயிர்ப்பெயராக்கி எனவும் மெய்ப்பெயராக்கி எனவும் அவ்விரு பிரிவுகளாகும்.

பெயராக்கி
- உயிர்ப்பெயராக்கி
- மெய்ப்பெயராக்கி

உயிர்ப்பெயராக்கிகள்: 'ஐ' எனும் உயிர்ப் பெயராக்கி நட, உடு, தடு, எடு, கொடு, உருள், நில், தொகு, கொள் போன்ற வினையடிச் சொற்களுடன் சேர்ந்து வினையடிப்பெயர்களைக் கொடுக்கின்றது. நட, உடு என்ற வினையடிச் சொற்களைத் தவிர, ஏனைய வினையடிச் சொற்களுடன் இணைந்து பிறக்கும் வினையடிப் பெயர்களில் காணும் பொருண்மைத் தன்மை வினையடிச் சொல்லிற் காணும் பொருண்மைத் தன்மையினின்று வேறுபட்டு நிற்பது காணலாம்.

வினையடிச்சொல் + பெயராக்கி = வினையடிப்பெயர்
அட்டவணை-1

| | | | |
|---|---|---|---|
| நட | + | ஐ | நடை |
| உடு | + | ஐ | உடை |
| தடு | + | ஐ | தடை |
| எடு | + | ஐ | எடை |
| கொடு | + | ஐ | கொடை |
| உருள் | + | ஐ | உருளை |
| நில் | + | ஐ | நிலை |
| தொகு | + | ஐ | தொகை |
| கொள் | + | ஐ | கொள்ளை |

மேலே சொன்ன வினையடிச் சொற்களில் நட, தடு, எடு, தொகு முதலிய வினையடிச் சொற்கள் -ப்பு எனும் பெயராக்கியுடன் இணைந்து வினையடிப் பெயர்களைத் தருகின்றன. ஆனால் இவ்விரு பெயராக்கிகளிலிருந்து பெறப்படும் வினையடிப் பெயர்கள் பொருண்மை வேறுபாடு உடையனவாக இருக்கின்றன. அதாவது -ஐயுடன் சேர்ந்து பிறக்கும் வினையடிப்பெயரின் பொருண்மையும், -ப்புவுடன் சேர்ந்து பிறக்கும் வினையடிப் பெயரின் பொருண்மையும் வேறுபட்டுள்ளன.

அட்டவணை-2

| | | | | |
|---|---|---|---|---|
| நட | + | ஐ | நடை | walking |
| | | ப்பு | நடப்பு | custom, happening |
| உடு | + | ஐ | உடை | dress |
| | | ப்பு | உடுப்பு | |
| தடு | + | ஐ | தடை | obstruction |
| | | ப்பு | தடுப்பு | மறைப்பு |
| எடு | + | ஐ | எடை | weight |
| | | ப்பு | எடுப்பு | carrying, appearan |
| தொகு | + | ஐ | தொகை | amount, collection |
| | | ப்பு | தொகுப்பு | edition, collection |

கொடு; உருள்; நில்; கொள் போன்றவைகள் -ப்பு எ பெயராக்கியுடன் இணையா.

-அம் எனும் உயிர்ப்பெயராக்கி அடக்கு; இறுக்கு; இறக்கு; ஏ ஓட்டு; ஆட்டு; ஒடுக்கு; அகல்; உறங்கு; ஆழ்; இணங்கு; இடு; உ கட்டு; கூடு; கூட்டு; பழக்கு; வழக்கு; நீள்; கவனி; தூங்கு; நோ விளக்கு; மண; வஞ்சி; மிஞ்சு முதலிய வினையடிச் சொற்களு இணைந்து வினையடிப்பெயர்களைத் தருகின்றது. மேலே கு பிட்ட வினையடிச் சொற்களில் அடக்கு (அடங்கு); இ (இறங்கு); ஒடுக்கு (ஒடுங்கு); இணக்கு (இணங்கு); வழக்கு (வழா விளக்கு (விளங்கு); ஏற்று (ஏறு) முதலிய வினையடிச் சொற்க தன்வினை (intransitive verb) சொற்களுடன் - அம் சேராது.

நோக்கு எனும் வினையடிச்சொல்லுடன் அம் எனும் பெயரா இணைந்து நோக்கம் எனும் வினையடிப் பெயரைத் தருவதுடன

அப்பெயரின் பொருண்மை வினையடிச் சொல்லின் பொருண்மை யிலிருந்து வேறுபட்டு உணர்த்துவதையும் காணலாம். தமிழிலுள்ள நோட்டம் எனும் வினையடிப்பெயரின் வினையடிச்சொல் தமிழில் வழக்கில்லாமல் கன்னடம் (நோடு); கோத்தம் (நோட்) முதலிய மொழிகளில் வழக்கிலுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

கவனி எனும் வினையடிச்சொல்-ப்பு எனும் மெய்ப்பெயராக் கியுடன் சேர்ந்து, வினையடிப்பெயர் தருவதைக் காணலாம். இது போன்றே உயர் எனும் வினையடிச்சொல், -ச்சி, -வு எனும் மெய்ப் பெயராக்கிகளுடன் இணைந்து உயர்ச்சி, உயர்வு எனும் வினையடிப் பெயர்களைத் தருகின்றது. எனினும் உயர்ச்சி, உயர்வு எனும் வினையடிப் பெயர்கள் காட்டும் பொருண்மை, உயரம் எனும் வினையடிப்பெயரின் பொருண்மையிலிருந்து வேறுபட்டு நிற்கிறது.

-அனை எனும் உயிர்ப்பெயராக்கி யோசி, சிந்தி, வருணி என்ற வடமொழி வினையடிச் சொற்களுடன் இணைந்து வினையடிப் பெயரைத் தருகிறது.

யோசி + அனை = யோசனை
சிந்தி + அனை = சிந்தனை
வருணி + அனை = வருணனை

மெய்ப்பெயராக்கிகள்

வினையடிச் சொற்களுடன் சேரும் மெய்ப்பெயராக்கிகளின் பண்புத் தன்மையின் அடிப்படையில் வினையடிப்பெயர்கள் பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஆறு சிறு பிரிவுகளாக உள்ளன. அவை -ச்சி பிரிவு; -ப்பு பிரிவு; -வு பிரிவு; -க்கை பிரிவு; -தி பிரிவு; -மை பிரிவு என்பனவையாகும்.

1) -ச்சி பிரிவு

-ச்சி பிரிவில் உள்ள -சி எனும் மெய்ப்பெயராக்கியுடன் இணை யும் எந்த வினையடிச் சொல்லும் வேறெந்த மெய்ப்பெயராக்கியுட னும் இணைவது கிடையாது. ஆனால் -ச்சி; ச்சு; -ச்சல் முதலிய வற்றுடன் சேரும் வினையடிச் சொற்கள் வேறு பிரிவைச் சார்ந்த மெய்ப்பெயராக்கிகளான -வு: -ப்பு -பு போன்றவற்றுடன் இணைந்து வினையடிப்பெயர்களைத் தருகின்றன.

கீழ்க்காணும் அட்டவணை மேலே கூறியவற்றை எடுத்துக் காட்டும்.

**அட்டவணை -3**

| பெயராக்கி | வினையடிச்சொல் | வினையடிப்பெயர் | பெயராக்கி |
|---|---|---|---|
| 1. –ச்சி | உணர் | உணர்ச்சி | |
| | | உணர்வு | வு |
| | மகிழ் | மகிழ்ச்சி | |
| | | மகிழ்வு | வு |
| | உயர் | உயர்ச்சி | |
| | | உயர்வு | வு |
| | | உயரம் | அம் |
| | இகழ் | இகழ்ச்சி | |
| | | இகழ்வு | வு |
| | தளர் | தளர்ச்சி | |
| | | தளர்வு | வு |
| | தொடர் | தொடர்ச்சி | |
| | | தொடர்பு | பு |
| | காழ் | காழ்ச்சி | |
| | | காழ்பு | பு |
| அ) – ச்சு | முடி | முடிச்சு | |
| | | முடிப்பு | ப்பு |
| | | முடிவு | வு |
| ஆ) – ச்சல் | எரி | எரிச்சல் | |
| | | எரிப்பு | ப்பு |
| | இரை | இரைச்சல் | |
| | விரி | விரி(ச்)சல் | |
| | | விரிவு | வு |
| | | விரிப்பு | ப்பு |

| | | | |
|---|---|---|---|
| இ) | -சி | ஆள் | ஆட்சி |
| | | மீள் | மீட்சி |
| | | புரள் | புரட்சி |
| | | வரள் | வரட்சி |
| | | காண் | காட்சி |
| | | பயில் | பயிற்சி |
| | | முயல் | முயற்சி |

2) -ப்பு பிரிவு

இப்பிரிவில் இரு மெய்ப்பெயராக்கிகள் உள்ளன. இவற்றில் -ப்பு எனும் மெய்ப்பெயராக்கியினை ஏற்கும் வினையடிச்சொற்கள் -ச்சி, -கை எனும் மெய்ப்பெயராக்கிகளை ஏற்று வினையடிப் பெயர்களைத் தருகின்றன. -ப்பு எனும் மெய்ப்பெயராக்கியினை ஏற்கும் வினையடிச்சொற்கள் -ஐ எனும் உயிர்ப்பெயராக்கி மற்றும் -ச்சு; -வு; -வி; -தி; -மை; -க்கு; -க்கை; -தம் போன்ற மெய்ப் பெயராக்கிகளுடன் இணைந்து வினையடிப்பெயர்களைக் கொடுக்கின்றன. இவற்றைக் கீழ்க்காணும் அட்டவணையில் குறித்துக் காட்டலாம்.

அட்டவணை - 4

| பெயராக்கி | வினையடிச்சொல் | வினையடிப்பெயர் | பெயராக்கி |
|---|---|---|---|
| 2) -ப்பு | நட | நடப்பு | |
| | | நடை | ஐ |
| | தடு | தடுப்பு | |
| | | தடை | ஐ |
| | எடு | எடுப்பு | |
| | | எடை | ஐ |
| | தொகு | தொகுப்பு | |
| | | தொகை | ஐ |
| | | தொகுதி | தி |

| | | | |
|---|---|---|---|
| | உடு | உடுப்பு | |
| | | உடை | ஐ |
| | கல | கலப்பு | |
| | | கலவை | ஐ |
| | முடி | முடிப்பு | |
| | | முடிவு | வு |
| | | முடிச்சு | ச்சு |
| | திற | திறப்பு | |
| | | திறவு | |
| -ப்பு | பகு | பகுப்பு | |
| | | பகுதி | தி |
| | விரி | விரிப்பு | |
| | | விரிவு | வு |
| | பிரி | பிரிப்பு | |
| | | பிரிவு | வு |
| | பிற | பிறப்பு | |
| | | பிறவி | வி |
| | கணி | கணிப்பு | |
| | | கணக்கு | க்கு |
| | | கணிதம் | தம் |
| | இரு | இருப்பு | |
| | | இருக்கை | க்கை |

| | | | |
|---|---|---|---|
| அ) -பு | தொடர் | தொடர்பு | |
| | | தொடர்ச்சி | -ச்சி |
| | காழ் | காழ்பு | |
| | | காழ்ச்சி | -ச்சி |
| | இயல் | இயல்பு | |
| | | இயற்கை | -கை |

கீழ்வரும் வினையடிச்சொற்கள் -ப்பு வைத் தவிர வேறெந்த மெய்ப்பெயராக்கிகளுடனும் இணைவது கிடையாது. தவி; சிற;

திளி; ஊந; திற; அணை; இணை; சந்நி; அடை; படை; சகி; கிரி; இற; சேரி; சேமி; அரி; அரி; எரி; இளி; தணி; அமை; பிழை; நகை முதலியன எடுத்துக்காட்டுகளாகும். இவற்றில் நகை எனும் வினையடிச்சொல் எவ்வித மாற்றமுமில்லாமல், பெயராக பயன் படுவது நோக்கத்தக்கது.

3) - வு பிரிவு

-வு, -வி, -வை எனும் மூன்று மெய்ப்பெயராக்கிகள் இப்பிரிவில் சேரும். இம்மூன்றில் -வி யைத் தவிர, ஏனைய மெய்ப்பெயராக்கிகளை ஏற்கும் வினையடிச் சொற்கள் வேறு பிரிவைச் சார்ந்த மெய்ப்பெயராக்கிகளுடன் இணைந்து வினையடிப் பெயர்களைத் தருகின்றன. எனினும் -வி யை ஏற்கும் பிற எனும் வினையடிச் சொல் -ப்பு எனும் மெய்ப்பெயராக்கியுடன் சேர்ந்து வினையடிப் பெயரைக் கொடுக்கிறது.

-வை எனும் மெய்ப்பெயராக்கியுடன் சேரும் வினையடிச் சொல்லான கல, -ப்பு எனும் மெய்ப்பெயராக்கியை ஏற்று, வினையடிப் பெயரைத் தருகிறது.

-வு வை ஏற்கும் வினையடிச் சொற்கள், ப்பு; -ச்சி, -ச்சு; -அம் எனும் பெயராக்கிகளையும் ஏற்கின்றன. (அட்டவணை 4-ல் காண்க.) -வு உடன் சேரும் ஒளி எனும் வினைச்சொல் எவ்விதமான மாற்றமும் இல்லாமல் பெயராக வழங்குவதை உணரலாம்.

அறி; உழு; நடு; சா; பொழி; பொலி: கனி; பணி; உண் போன்ற வினையடிச் சொற்கள் -வு வைத் தவிர வேறெந்த மெய்ப் பெயராக்கியுடனும் சேர்வது கிடையாது.

அட்டவணை -5

| | | | |
|---|---|---|---|
| அ) | -வு | வாழ்வு | |
| | | வாழ்க்கை | -க்கை |
| ஆ) | -வை | கலவை | |
| | | கலப்பு | -ப்பு |

போர்வை
பார்வை
வேர்வை
பறவை

இ) -வி கல்வி
கேள்வி

4)-க்கை பிரிவு

-க்கை, -கை, -க்கு எனும் மூன்று உயிர் மெய்ப்பெயராக்கிகளுடன் சேர்கின்ற வினையடிச் சொற்களில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவைகள் வேறு பிரிவைச் சார்ந்த பெயராக்கிகளுடன் இணைந்து வினையடிப்பெயர்களைத் தருகின்றன.

-க்கை எனும் மெய்ப்பெயராக்கி எண் (ணு) எனும் வினையடிச் சொல்லுடன் நேரடியாக இணையாமல், அச்சொல்லின் வினையெச்சப்பகுதியுடன் இணைந்து, எண்ணிக்கை எனும் வினையடிப் பெயரைக் கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை-6

அ) -க்கை வாழ்க்கை
வாழ்வு வு
இருக்கை
இருப்பு ப்பு
எச்சரிக்கை
எச்சரிப்பு ப்பு

ஆ) -கை கொள்கை
கொள்ளை ஐ
இயற்கை
இயல்பு -பு
செய்கை
செய்தி -தி

| | | |
|---|---|---|
| | அழுகை | |
| இ) -க்கு | போக்கு | |
| | கணக்கு | |
| | கணிதம் | -தம் |
| | கணிப்பு | -ப்பு |

(5) -தி பிரிவு

இந்த -தி எனும் பெய்ப்பெயராக்கியுடன் மிகு; தகு; பகு; தொகு; செய்; விடு; கெடு எனும் வினையடிச்சொற்கள் இணைந்து வினையடிப்பெயர்களைத் தருகின்றன. ஆனால் மிகு, தகு என்ற வினையடிச் சொற்களைத் தவிர ஏனைய வினையடிச்சொற்களான பகு, தொகு என்பன -ப்பு, -ஐ, -கை எனும் பெயராக்கிகளுடன் இணையும். விடு எனும் வினையடிச்சொல் -ப்பு எனும் பெயராக்கியுடன் சேர்வதுடன், தன்அமைப்பில் மாற்றம் பெற்றும் வினையடிப் பெயரைத் தருகிறது. கெடு எனும் வினையடிச் சொல் தன்அமைப்பில் மாற்றம் பெற்று வினையடிப் பெயரைத் தரும்.

அட்டவணை-7

மிகுதி
தகுதி
பகுதி / பகுப்பு (ப்பு)
செய்தி / செய்கை (- கை)
விடுதி / வீடு (நெடிலாதல்)
விடுப்பு (ப்பு)
தொகுதி தொகுப்பு (- ப்பு)
தாகை (- கை)
கெடுதி / கேடு (நெடிலாதல்)

6) -மை பிரிவு

அடி, பொறு, கரு எனும் வினையடிச் சொற்கள் -மை எனும் மெய்ப்பெயராக்கியுடன் சேர்ந்து, வினையடிப்பெயரைத் தருகின்றன. இவ்வினையடிச் சொற்களுடன் -ப்பு எனும் மெய்ப்

பெயராக்கியும் இணைந்து, வினையடிப்பெயரைத் தருவதுடன், பொருண்மை வேறுபாட்டையும் கொடுக்கின்றது.

அட்டவணை 8

| | | |
|---|---|---|
| -மை: | அடிமை | slave |
| | அடிப்பு | beating |
| | கருமை | black |
| | கருப்பு | black |
| | பொறுமை | tolerance |
| | பொறுப்பு | responsible |

-கை எனும் மெய்ப்பெயராக்கி செய் எனும் வினையடிச் சொல்லிலிருந்து பிறந்த செயல் எனும் தொழிற் பெயருடன் இணைந்து செயற்கை எனும் வினையடிப் பெயரைக் கொடுக்கிறது.

-மை எனும் பெயராக்கி தனிப்பெயர் சொல்லடியுடன் இணைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. ஆண், பெண், சொல், பொருள் முதலியவற்றுடன் இணைந்து முறையே ஆண்மை பெண்மை; சொன்மை; பொருண்மை என்ற பெயரடிப் பெயர்களைத் தருவது காணலாம். நல், இன் எனும் உரிச் சொற்களுடன் சேர்ந்து நன்மை, இன்மை முதலிய உரிச்சொல்லடிப்பெயர்களையும் தருவதற்குச் சான்றுகளாகும்.

பொருண்மை அமைப்பு முறை

வினையடிச் சொல்லிலிருந்து பெயராக்கிகள் இணைவதினாலோ அல்லது சொல் தன்னில் மாற்றம் பெறுவதினாலோ பெறப்படும் வினையடிப் பெயர்கள் பெரும்பாலும் வினையடிச் சொல்லின் பொருண்மையைப் பெற்றிருக்கின்றன. சில பொருண்மை விரிவாக்கம் (semantic extention) பெற்றிருக்கின்றன. வேறு சில பொருண்மை மாற்றம் பெற்று வழங்கி வருகின்றன. அதாவது வினையடிச் சொல்லின் பொருண்மையும், அச்சொல்லிலிருந்து

பிறந்த வினையடிப் பெயரின் பொருண்மையும் தம்மிடையே வேறுபாடு கொண்டு வழங்குகின்றன. இதனைக் கீழ்வரும் படத்தில் விளக்கமாகக் காட்டலாம்.

வினையடிப் பெயரின் பொருண்மை

↓

| வினையடிச்சொல்லின் பொருண்மை பெறுதல் | சொல்லின் பொருண்மை விரிவாக்கம் | வேறுபட்ட பொருண்மை |
|---|---|---|

வினையடிச் சொற்களின் தன்வினை (intransitive) பிறவினை (transitive) என்ற பாகுபாட்டை வினையடிப் பெயர்கள் அமைப்பு அடிப்படையில் பகுத்துணர இயலாது.

-தி; -க்கு; -ச்சல்; –ச்சு; -அம்;-ப்பு; -வை; -க்கை; -ஐ போன்ற பெயராக்கிகள் ஏற்கும் வினையடிச் சொற்கள், வினையடிப் பெயராக மாறிய பின்னர், தம் பொருண்மையில் மாறுபட்டு விடுகின்றதைப் பகுத்துணரலாம். கீழ்க்காண்பவைகளை இக்கருத்திற்குச் சான்றுகளாக எடுத்துக் காட்டலாம்.

| | | |
|---|---|---|
| போ - செல் | போக்கு | நடத்தை |
| செய் - பண்ணு | செய்தி | news |
| நில் stop / stand | நிலை | storey |
| எடு take | எடை | weight |
| முடி to complete | முடிப்பு | purse |
| end | முடிச்சு | knot |
| எரி burn | எரிச்சல் | itching |
| அடி beat | அடிமை | slave |
| கொள் to have | கொள்கை | idealism |
| தீர் decide | தீர்வை | land tax |
| | தீர்ப்பு | judgement |
| நோக்கு look | நோக்கம் | idea |

ஆனால் -க்கை; -ப்பு; –ஐ; -வை; –தி முதலிய பெயராக்கிகள் ஏற்கும் சில வினையடிச்சொற்கள் வினையடிப் பெயரானாலும்

தன் பொருளில் மாற்றம் அடைவதில்லை. கீழ்க்காணும் வினையடிச் சொற்களைச் சான்றுகளாகக் கூறலாம்.

| | | | |
|---|---|---|---|
| இரு | sit, to be | இருக்கை | seat |
| படி | read, study | படிப்பு | reading |
| நட | to walk | நடை | walking |
| பார் | look see | பார்வை | sight |
| மிகு | be more | மிகுதி | more, much |

-வு; -வி; -ச்சி முதலிய பெயராக்கிகளை ஏற்று வினையடிப் பெயராகும் சொற்கள், தன் பொருளில் எவ்விதமான மாற்றமும் பெறாமல் வினையடிச் சொல்லின் பொருளைக் கொண்டு வழங்குவதைக் கீழ் வரும் சான்றுகளால் உணர்த்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| அறி | know | அறிவு | knowledge |
| விரி | to spread, to split | விரிவு | split |
| முடி | to end, complete | முடிவு | end |
| பிற | be born | பிறவி | birth |
| ஆள் | to rule | ஆட்சி | rule |
| முயல் | to try | முயற்சி | trial |
| தொடர் | to continue | தொடர்ச்சி | continuation |
| உணர் | to feel | உணர்ச்சி | feeling |

ஆனால் புரள் எனும் வினையடிச் சொல்லுடன் -சி எனும் மெய்ப்பெயராக்கி இணைந்து பெறப்படும் வினையடிப் பெயரின் பொருள் வேறுபட்டு வருவதைக் கண்டுணரலாம்.

| | | | |
|---|---|---|---|
| புரள் | role | புரட்சி | revolution |

-ச்சி எனும் மெய்ப்பெயராக்கியுடன் இணையும் சில வினையடிச் சொற்கள் தன் பொருளில் விரிவடைந்து வழங்குவதைக் காணலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் | to flower | மலர் | flower | மலர்ச்சி | fertility |
| உயர் | be high | உயரம் | height | உயர்ச்சி | upliftment |

முதலியன சான்றுகளாகும்.

பொறு எனும் வினையடிச் சொல்

இவ்வினையடிச் சொல்லுடன், -மை, -ப்பு எனும் பெயராக்கி கள் இணைந்து வினையடிப்பெயர்களைத் தருகின்றன. அவை முறையே பொறுமை, பொறுப்பு என்பனவாகும்.

வினையடிச்சொல் - மை பெயராக்கியை ஏற்று வினையடிப் பெயராகும் போது பொருண்மை வேறுபாடு காண்பது கிடையாது. ஆனால் இச்சொல் -ப்பு எனும் பெயராக்கியுடன் இணைந்து வினையடிப் பெயராகும்போது பொருண்மை மாற்றம் பெற்று விடுவதைக் கண்டுணரலாம். அதாவது வினையடிச் சொல்லின் பொருள், பெறப்பட்ட வினையடிப் பெயரின் பொருளிலிருந்து வேறுபட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பொறு | (அமைதி கொள்) | tolerate | be patient |
| பொறுமை | (அமைதி) | patience | tolerance |
| பொறுப்பு | responsibility | | |

இவ்வினையடிச் சொல்லுடன் எதிர்மறை உருபனான -ஆ- இணைந்து பின்னர், -மை பெயராக்கி இணைந்து வினையடிப் பெயரைத் தருவதுடன், வேறுபட்ட பொருளைத் தருவது குறிப்பிடத்தக்கது.

பொறு + ஆ + மை பொறாமை → 'jealous'

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல்-வாழ்வும் வரலாறும் (History of Linguistics) 1977
டாக்டர் ச. அகத்தியலிங்கம்
டாக்டர் க. புஷ்பவல்லி
பக்கம் 458) (விலை ரூ. 16/-

2. கிளைமொழியியல் (Dialectology) 1977
டாக்டர் கோ. சீனிவாச வர்மா
பக்கம் 226) (விலை ரூ. 10/-

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning) 1977
டாக்டர் கி. கருணாகரன்
பக்கம் 165) (விலை ரூ. 7/-

4. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-1 1977
டாக்டர் ச. அகத்தியலிங்கம்
பக்கம் 250) (விலை ரூ. 12/-

5. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-2 1978
டாக்டர் ச. அகத்தியலிங்கம்
பக்கம் 265) (விலை ரூ. 15/-

6. நரிக்குறவப் பழங்குடிமக்கள் 1978
டாக்டர் கோ. சீனிவாச வர்மா
பக்கம் 96) (விலை ரூ. 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform) 1978
டாக்டர் செ. வை. சண்முகம்
பக்கம் 240) (விலை ரூ. 12.50

8. ஒலியியல் (Phonetics) 1980

டாக்டர் சு. இராசாராம்

பக்கம் 180) (விலை ரூ. 15/-

9. எழுத்திலக்கணக் கோட்பாடு 1980

(Phonological Theories in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 306) (விலை ரூ. 20/-

10. சொல்லியல் - 1 (Morphology) - பெயரியல் (Noun) 1979

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 280) (விலை ரூ. 21/-

11. Linguistic Convergence 1980

Dr. K. Karunakaran

pp. 188) (Price Rs. 10/-

12. இருமொழியம் (Bilingualism) 1980

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 152) (விலை ரூ. 15/-

13. Study of Social Dialects in Tamil 1981

Dr. K. Karunakaran

Dr. C. Sivashanmugam

pp. 141) (Price Rs. 12/-

14. சொல்லியல் (Morphology) - வினையியல் 1 (Verb-1) 1982

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 212) (விலை ரூ. 16/-

15. சங்கத் தமிழ் - I 1983

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (விலை ரூ. 24/-

16. பாடல் பயிற்றுமுறை 1983

டாக்டர் மா. சு. திருமலை

17. Studies in Applied Tamil Sociolinguistics 1982

Dr. K. M. Irulappan (Price Rs. 10/-

18. Aspects of Language Use

Dr. M. S. Thirumalai

pp. 140) (Price Rs. 18/-

19. Aspects of Language Development 1983

Dr. S. V. Shanmugam

pp. 112) (Price Rs. 14/-

20. Sociolinguistic Patterns of Language Use 1983

Dr. K. Karunakaran (Price Rs. 18/-

21. நீலகிரி மொழிகள்

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன் (அச்சில்

22. சங்கத்தமிழ் - II 1983

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (பக்கம் 256) (விலை ரூ. 24/-

23. சங்கத்தமிழ் - III 1983

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (பக்கம் 244) (விலை ரூ. 24/-

---

Editor: S. Agesthialingom. Printed at Sivakami Press, Annamalainagar 608002 and published by S. Agesthialingom on behalf of The All India Tamil Linguistics Association, Annamalainagar 608002.

## உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியற் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

## 'மொழியியல்' இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு


| | |
|---|---|
| 1. வெளியீட்டாளர் & ஆசிரியர் | டாக்டர் ச. அகத்தியலிங்கம்<br>செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்<br>அண்ணாமலைநகர் 608 002 |
| 2. அச்சிட்டோர் | சிவகாமி அச்சகம்<br>அண்ணாமலைநகர் 608 002 |

# மொழியியல்

தொகுதி 7 எண் 1&2

ஜூலை - டிசம்பர்

## உள்ளுறை

பக்கம்

இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள் (complex sentences)

முத்துச்சண்முகன் & தாமஸ் லேமன் 1 - 19

தெருக்கூத்து மொழிநடை

பொன். கோதண்டராமன் 21 - 34

அமெரிக்க அமைப்பு மொழியியல் கொள்கைகள்
— ப்ளும்ஃபீல்டின் கருத்துக்கள்

செ. சண்முகன் 35 - 94

வினையடிப்பெயர்

கோ. சுப்பையா 95 - 111